குடும்பத்தைக் குற்ற மறைப்பான் *(குறள். 1029)* (Household, Family, Including husband Wife and Children)

2. உறவினர்

குடும்பத்தைத் தாங்கும் குடிப்பிறந்தாரினே. *(கம்ப. சேது. ப. 53)* (Relatives, Kindred connections)

---

1. *தமிழ்மொழியகராதி, நா. கதிரைவேற்பிள்ளை, ஆசியக்கல்விப் பணி, புதுதில்லி, 1987, ப.479*

3. **குலம்,**

அவன் என் குடும்பத்தைச் சேர்ந்தவன் (Caste, family)

4. **மனைவி.**

பாகத்தார் குடும்ப நீக்கி. (சிந்தா. 1437)

என்று விளக்கம் தரும்.[2]

பாண்டிச்சேரியின் பழந்தமிழ் நூற் சொல்லடைவு, குடும்பம் - குடும்பத்தைக் குற்றமறைப்பான் என்றே கூறும்.[3]

அபிதான சிந்தாமணியில் குடும்பம் என்ற சொல்லாட்சி இடம்பெறவில்லை.

1.2. கலைக்களஞ்சியக் கருத்துக்கள்

குடும்ப அமைப்பு சமுதாய நோக்கில் ஓர் இன்றியமையாத நிறுவனம். உதிர உறவாகிய பிறப்பினாலும், திருமணம் என்ற அமைப்பினாலும் குறிப்பிட்டவர்கள் இணைந்து குடும்பம் என்ற அமைப்பை ஏற்படுத்தினர். உலகம் இயங்கவும், பாலுறவு நிறைவுக்காகவும், மக்கட்பெருக்கத்திற்காகவும், பொருளாதாரம், பண்பாடு போன்றவற்றிற்காகவும் இக்குடும்ப அமைப்புத் தேவையானது என்று உலக நூல் கலைக்களஞ்சியம் கூறும்.[4]

சமுதாய நிலையில் பொதுவான பண்பாட்டினை உருவாக்க கணவன் - மனைவி, தாய்-தந்தை, மகன்-மகள், அண்ணன்-தங்கை அனைவரும் இணைந்து உதிர உறவாலும், திருமண உறவுப் பிணைப்பாலும் ஏற்படுவது குடும்பம் என்று 'என்சைக்ளோபீடியா பிரித்தானிகா' விளக்கும்.[5]

1.3. சமுதாயவியலார் தரும் செய்திகள்

சமுதாயத்தின் முதுகெலும்பாக விளங்கும் குடும்ப அமைப்பு மனித உயிர்களின் இன்றியமையாத தேவைகளுக்காக ஏற்படுத்தப்படுவது. இதில் வரன்முறைப்படுத்தப்பட்ட பாலுறவும், இன உயிர்களைக் காப்பதும் முக்கியமானதாகும் என சமூகவியலார் பாலசுந்தரம் குறிப்பிடுவார்.[6]

பலர் கூடி வாழ்வதால் மட்டுமே ஏற்படுவதன்று குடும்பம். குடும்ப நிறுவனம் முறையான அமைப்பினால், பிணைப்பால் ஏற்படுவது. மேலும் சில முன்னேற்ற மிகு சமூகங்களில் பணியாளர்கள் சிலரையும் குடும்ப

---

2. தமிழ் அகராதி, பகுதி-2, சென்னைப் பல்கலைக்கழகம், 1982, ப. 974
3. பழந்தமிழ் நூற் சொல்லடைவு, பாண்டிச்சேரி, 1967.
4. உலக நூல்கலைக்களஞ்சியம், பகுதி -7, அமெரிக்கா, 1981, ப.84
5. கலைக்களஞ்சியம் பிரித்தானிக்கா, பகுதி-9, ப. 54
6. சமுதாயவியல் அறிமுகம், பாலையம் பாலசுந்தரம், மு., மாக்மில்லன், இந்தியா, முதற்பதிப்பு, 1981, ப. 71

அமைப்பில் அனுமதித்து இணைத்தல் உண்டு என்று அடிப்படைச் சமுதாயவியல்[7] என்ற நூல் வரன்முறைப்படுத்தும்.

குடும்ப முத்திரையில் (Family Label) மூன்று விதமான ஒன்றோடொன்று தொடர்புடைய உறவுகள் உண்டு. அவை:

1. கணவன் - மனைவி உறவு.
2. பெற்றோர் - மக்கள் உறவு.
3. மக்களிடையிலான உறவு/ஒருதாய் வயிற்று மக்கள் உறவு.

மேலும், இக்குடும்ப அமைப்பில் பல வகையுண்டு. அவை,

1. தனிக்குடும்பம் (Nuclear family or Conjugal family) கணவன் - மனைவி. குழந்தைகள் இருப்பின் அவர்களும்.
2. விரிவான கூட்டுக்குடும்ப அமைப்பு (Extended or Consanguine family).

கணவன் - மனைவி, அவர்களது குழந்தைகள், மேலும் ஒன்றோ அதற்கு மேற்பட்டவர்களோ உடல்ரீதியான உறவால் வந்தவர்கள்.

3. பிறந்தகம் (Family of Orientation).
4. புகுந்தகம் (Family of Procreation).

திருமண உறவால் வருவது என்று குடும்ப முத்திரையையும், குடும்ப வகைமைகளையும் சமுதாயவியலார் தெளிவுபட எடுத்துரைப்பார்.[8]

இந்தியக் குடும்ப அமைப்பு, கூட்டுக் குடும்ப அமைப்பினது; இதில் உடன்பிறந்தவர்கள், உறவினர்கள் உண்டு. அனைவரும் ஒரே கூரையின்கீழ் வாழ்பவர்கள். மேலும் குடும்ப வருவாயும் பொதுவானதாகவே கொள்ளப்படுவதாகும் என்ற, அன்றாட வாழ்வில் பழம் இந்தியா என்ற நூல்[9] கருத்தும் இவண் கணிப்பில் கொள்ளத்தக்கது.

மீக்காணும் முப்பெரும் தரவுகளால் 'குடும்பம்' என்ற சொல்லாட்சியின் விளக்கம் பெறப்படுகிறது. இக்குடும்ப அமைப்பு தமிழரின் வாழ்வில் விளங்கும் திறம் குறித்துப் பேசும் களங்களில் ஆய்வுக்குத் துணைநிற்பவை இலக்கியக்

---

7. அடிப்படைச் சமுதாயவியல், பாஸ்கல் கிஸ்பெர்ட், ஓரியண்ட் லாங்மேன், முதற்பதிப்பு, 1987, ப. 57.

8. சமுதாயவியல் அறிமுகம், வெர்னோன், மு. ரோனால்டு பிரஸ் கம்பெனி, நியூயார்க், இரண்டாம் பதிப்பு, 1972, ப. 696.

9. அன்றாட வாழ்வில் பழம் இந்தியா, மைக்கேல் எட்வர்ட், ஆக்ஸ்போர்டு, இலண்டன், முதற்பதிப்பு, 1969, ப. 30.

களங்கள் மட்டுமே. புலவர் தம் சொல்வெட்டாக விளங்கும் இவ்விலக்கியங்கள் காட்டும் தமிழர் குடும்ப அமைப்பு பல்வேறு பரிமாணங்களைக் கொண்டது.

2.0. தமிழரின் குடும்ப அமைப்பினை விளக்கும் இலக்கியக் களங்கள்

காலந்தோறும் தோன்றிய இலக்கியங்களை, சங்க இலக்கியம், நீதி இலக்கியம், காப்பிய இலக்கியம், பக்தி இலக்கியம், சிற்றிலக்கியம், சமயத்தத்துவ இலக்கியம், இக்கால இலக்கியம் என்று பகுத்தற்கு இயலும். ஒவ்வொரு கால கட்டத்திலும் மக்கள் வாழ்ந்த வகைமை, அவர்களது நோக்கு, போக்கு அனைத்தும் இவ்விலக்கியங்கள் வாயிலாக அறிதற்கு இயலும்.

சுட்டி ஒருவர் பெயர் சொல்லப்படாத அகவாழ்வினையும், வீரனின் பெயர் விளக்கம் பெறும் புறவாழ்வினையும் விளக்கும் சங்கப்பாடல்களில் அகப்பாடல்கள் என்னும் அன்புப்பாடல்கள், புறப்பாடல்கள் என்னும் வீரயுகப் பாடல்கள் என்னும் இரு பிரிவுகள் உண்டு. இன்று நாம் வழங்கும் குடும்ப வாழ்க்கை, சமுதாய வாழ்க்கை என்பனவே அவை. சங்க கால மக்களின் வாழ்க்கையினை அக வாழ்க்கை என்றே குறித்தனரேயொழிய 'குடும்ப வாழ்க்கை' என்ற சொல்லால் சொல்லவில்லை. ஏனென்றால் 'குடும்பம்' என்ற சொல்லாட்சியே சங்க காலத்தில் வழக்கிலில்லை, ஆனால் 'மனை' 'அகம்' 'மனையகம்' 'இல்' போன்ற சொற்கள் மிகுதி.

கூட்டு வாழ்க்கைச் சமுதாயம் : சங்க காலச் சமுதாயத்தைப் பொருளாதார அடிப்படையில் நோக்கும் பொழுது பல படிநிலைகள் புலனாகின்றன.

1. தேனெடுத்தல், கிழங்கெடுத்தல், வேட்டையாடுதல் என வாழும் உணவு தேடும் - வேட்டையாடும் - பொருளாதாரம் (Food gathering and Hunting Economy) எனப்படும் - இனக்குழுச் சமுதாயமே (Tribal Society) இது. இந்த இனக்குழுச் சமுதாயத்தில் குறிஞ்சி நில மக்களையும், பாலைநில மக்களையும் சேர்த்தற்கு இயலும்.
2. இவர்களின் உணவு தேடலுக்குக் குழுச் செயல் (Group Activity) தேவைப்பட்டது.
3. இல்லத்திலிருந்து ஆடு, மாடு மேய்த்துப் பொருள் பெற்று, அப்பொருளுக்கு ஈடாகப் பிற பொருளைப் பெற்று வாழ முனைந்த வணிகச் சந்தை உடைய முல்லை நில மக்களும், உலோகக் கருவிகளின் பயன்பாட்டை உணர்ந்து வேளாண்மை செய்து செல்வத்தைப் பெற்று விளங்கிய மருத நில மக்களும் நாகரிகச் சமுதாயத்தினரே (Civilised Society) எனலாம். எனினும், இவர்கள் நாட்டுப்புறப்பிரிவுனர் தாம் (Rural Society).
4. கடல்விளைப் பொருட்களின் பெருக்கம், வணிகம் என்ற தொழிலைச் செய்யும்படி வித்திட்டது. பிற நாட்டாரின் வருகை, நகர்ப்புற மக்களுக்கு நாகரிகம் கற்றுக்கொள்ள ஏதுவாயிற்று. இனக்குழு நாகரிகம், நாட்டுப்புற நாகரிகம் இரண்டிலும் மேம்பட்ட நகர்ப்புறச் சமுதாயத்தினராக (Urban

Society) நெய்தல்நில மக்கள் விளங்கினர். எனவே, சங்க காலச் சமுதாயம் காட்டும் கூட்டு வாழ்க்கை அமைப்பில் கூட்டுக் குடும்ப அமைப்பு விளங்கியமை புலனாம்.

கூட்டுக் குடும்ப அமைப்பு : சமுதாயத்தில் ஒரு நிறுவனமான குடும்பத்தில் சங்க காலத்தில் நற்றாய், தந்தை, செவிலி, தோழி, பாங்கன் போன்ற பலர் வந்துபோகின்றனர். சமுதாயவியலார் குறிப்பிடுவது போல ஒரு கூரைக்கீழ், பணப்பங்கீடு, பணிப்பங்கீடு செய்து உறவினரென ஒன்றாக வாழ்ந்தனர் என்று வரன்முறைப்படுத்தினால் அன்று விளங்கியது கூட்டுக் குடும்ப அமைப்பே.

அகவாழ்வில் இடம்பெறும் 'கனியும் கருக்காயும்' போன்ற நிகழ்வுக்குச் சங்க காலத்தில் பாணன், பாடினி, கூத்தர் என்று ஒரு பெருங்கூட்டமே தூது போயிருக்கிறது. சமுதாயவியலார் குறிப்பிடுவது போல கூட்டுக் குடும்ப அமைப்பு என்பதால் தான் பணியாளர்களும் இடம்பெற்றிருந்தனர்.

தனிக்குடும்பமும் உண்டு : சங்க காலத்தில் கணவன் – மனைவி என்ற இருவர் மட்டுமே இருந்த குடும்ப அமைப்பு 'நுண்ணிதின் மகிழ்வோடு' தலைவியும் 'இனிதெனக் கணவன் உண்டான்' என்ற தலைவனும் பேசப்படுவதால் தனிக்குடும்ப அமைப்பும் இருந்தது என்று கூற வாய்ப்பு ஏற்படுகிறது.

பரத்தையர் பிரிவு சங்க காலத்தில் ஒருவகைப் பிரிவெனக் கொண்டு நடைமுறையில் விளங்கியது. "பண்டைத் தமிழ்ச் சமுதாயத்தில் பரத்தையொழுக்கம் ஒருவகைக் குடும்பவொழுக்கம் போலப் பரவிக் கிடந்தது" என்று வ. சுப. மாணிக்கம்[10] அவர்கள் கூறுவதால் அவர்களது வாழ்வு குடும்ப வாழ்வு என்பதும் புலனாம்.

தனிக்குடும்ப அமைப்பு : தனிக் குடும்ப அமைப்பே 'வேறுவைத்தல்' என்பது. இதைச் சிலப்பதிகாரத்தின் 'மனையறம் படுத்த காதை' வாயிலாக அறியமுடியும். காப்பிய மாந்தராம் கோவலன், கண்ணகியின் தனிக்குடும்ப வாழ்க்கையில் சரிவு, நலிவு ஏற்படுகிறது.

ஆணாதிக்கம் மட்டுமல்லாது, செல்வச் செழிப்பும் விடுதலறியா விருப்பினால் மாதவியுடன் வாழ நினைத்தாலும், பொருளாதாரச் சிக்கல் மனைவியை நாடி வரச் செய்தது. குடும்ப அமைப்பில் சொத்தின் பரிமாணம் புலப்பட, வேற்றூர் செல்ல, குடும்ப அமைப்பே சிதைந்துவிடுகிறது.

தனிக்குடும்பமே – இறைவழிபாட்டுக் குடும்பமே

தனிக்குடும்ப அமைப்பினைத்தான் பக்தி இலக்கியங்களும் காட்டுகின்றன. குறிப்பாகத் தேசிய இலக்கியம் என்று கூறப்படும் பெரியபுராணத்தில்

---

10. தமிழ்க் காதல், வ.சுப. மாணிக்கம், பாரி நிலையம், சென்னை, இரண்டாம் பதிப்பு, 1976, ப 302.

அடியவர்கள், இறைத் தொண்டே தம் வாழ்க்கை என வாழ்பவர்கள் தங்களது குடும்பத்தில் உள்ள மனைவி, மக்கள் அனைவரையும் இறைத்தொண்டிற்கே பயன்படுத்தினர். எனவே இத்தகு இறைக் குடும்ப அமைப்பு கணவன், மனைவி, அவர்களது குழந்தைகள், வந்து அருள்புரியும் ஆண்டவன் என்றஅளவில் தனிக்குடும்ப அமைப்பினதே.

தனிக்குடும்பங்கள் - வர்க்கக் குடும்பங்கள்

வர்க்க வேறுபாட்டின் பல்வேறு நிலைகள் விளக்கம் பெறும் பிற்காலச் சிற்றிலக்கியங்களில் பள்ளு காட்டும் குடும்ப அமைப்பில் இரண்டுவகை இடம்பெறுகின்றன. பண்ணையாரின் குடும்பம், பள்ளனின் குடும்பம்; பள்ளனின் மனைவியரோ இருவர், இருவரும் தனித்தனியாக வாழ, இருவருடனும் பள்ளன் வாழ்ந்தான் என்பது பெறப்பட பெண்கள் இருவரால் இரு குடும்ப அமைப்பு, தனிக்குடும்ப அமைப்பு இருந்தமை விளக்கம் பெறுகிறது. "நூறு மனிதர்கள் ஒன்றுகூடித் தங்களை ஒரு குடும்பமாக ஆக்கிக் கொள்ள முடியும். ஆனால் ஒரு குடும்பத்தை உருவாக்க ஒரு பெண்ணால்தான் முடியும்" என்ற சீனப் பழமொழி[11] இவண் நினைவுகூரத்தக்கது.

கூட்டுக் குடும்பம் வலிவு பெற்றமை

காலந்தோறும் இதுவரை இடம்பெற்ற இலக்கியக் களங்கள் தமிழர்தம் வாழ்வில் தனிக்குடும்ப அமைப்பு மேலோங்கிய திறத்தைக் காட்டின. மேனாட்டார் வருகையால் புது மோகத்தைப் பெற்றவர்கள் கூட்டுக் குடும்பத்தின் வலுவை உணர்ந்து ஒன்றுகூடி வாழத் தலைப்பட்டனர்.

குடும்ப அமைப்பின் பல்வேறு பரிமாணங்கள், சிக்கல்கள் என்பனவற்றைப் புதுக்கவிதை, நாடகம், சிறுகதை, புதினம் என்ற இக்கால இலக்கியங்கள் விவரித்துப் பேசுகின்றன. ஆனால் இன்றைய குடும்ப அமைப்பு தனிக்குடும்ப அமைப்பினை விரும்பி ஏற்பதாகவே உள்ளது.

3.0 இன்றைய குடும்ப அமைப்பு

'எலி வளையானாலும் தனி வளை' என்று தனி வளைக்குத் தனி வாழ்விற்கு முக்கியத்துவம் இன்றைய நாளில் மிகுதியும் செலுத்தப்படுகிறது. அறிவியலின் அசாத்தியமான வாழ்க்கை வசதிகள் தனி வாழ்க்கையில்தான் பெற முடியும் என்ற எண்ணப்போக்கு மக்களிடம் மிகுந்துவிட்டது.

கூட்டுக் குடும்பத்தின் பிரச்சினைகள், பணப்பங்கீடு, பொது வாழ்வு போன்ற சுமைகளை ஏற்க மனம் விழையாது 'வாழ்க்கை வாழ்வதற்கே' என்ற துடிப்பு, தனிக்குடும்ப அமைப்பு வலிவுபெறக் காரணமாம்.

---

11. குடும்பம் ஒரு கோவில், பி.சி. கணேசன், வானதி பதிப்பகம், சென்னை, முதற் பதிப்பு, *1984*, ப. *96*.

மேலும் இன்றைய குடும்ப அமைப்பில் மாற்றமுடியாது என்ற நிலை மாறி குடும்பத்திற்குத் தலைவன் ஆண்மகன்தான் என்ற நிலை ஓரளவு மாறியுள்ளது. குடும்பப் பொருளாதாரத்தில் பெண்ணின் பங்கும் இருப்பதால் ஆண்தான் அனைத்தும் என்ற போக்கு மாறியுள்ளது. இதனால் கணவன் - மனைவி உறவில் கருத்து வேறுபாடுகள், மோதல்கள் ஏற்படும் காலத்து விவாகரத்துப் பெற்றுத் தனித்து வாழ முற்படும் தனிக்குடும்ப அமைப்பினர் சமுதாயத்தில் இருப்பது வளர்ச்சி நிலையே.

குழந்தைகளின் வாழ்க்கைக்கு முதன்மை கொடுக்காது, விரும்பாத கணவனுடன் போலி வாழ்க்கை வாழ பெண்கள் முனையாத, பெண் கல்வியால் பெற்ற தனிக்குடித்தன அமைப்பு பாட்டி கதைகளின் தாக்கத்தை இழந்தது.

இன்றைய குடும்ப அமைப்பில் குழந்தைகள் பெறும் பங்கு மிகுதி. மயக்குறு மக்கள் மறுமைக்காகவும், பிதிரு கடன் ஆற்றவும் என்றிருந்த போக்கு இப்போது முழுமையாக இல்லை.

'மகன் என்பவன் இன்ஷுரன்ஸ் பாலிஸி' என்று இன்றைய புதுக்கவிதையில் வரும் வரி குறிப்பிடத்தக்கது. மேலும் மக்கட்செல்வம், மழலைச் செல்வம் என்று செல்வத்தில் ஒன்றாகக் கொண்ட மக்கட்பேறு, சமுதாய, அரசியல் நலனை முன்னிட்டு 'ஒரு குடும்பம், ஒரு வாரிசு' என்று கட்டாயமாகக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அந்தக் குழந்தையும் அன்னையின் அரவணைப்பில் முழுநேரம் இருக்க இயலாது. குழந்தைக் காப்பகத்திலும், அயலார், அண்டை வீட்டார் கரிசனத்திலும், ஊதியம் பெறுவார் பாசத்தினாலும் வளர வேண்டிய நிலைமை பெருகி வருதல் கண்கூடு.

விதவை என்ற முத்திரையிலும் வாழாவெட்டி என்ற பகுப்பிலும் வராத தனித்து வாழ விழையும் கன்னியர் (Spinster), முதிர்கன்னியர் தமக்குத்தானே தனிக் குடும்பத்தை ஏற்படுத்திக் கொண்டு, தமக்கு இயலும் என்ற நிலையில் பெற்றோரை, உடன்பிறப்பினரைக் காக்கும் திறமைமிக்கவராக உள்ளனர். இவர் தம் குடும்ப அமைப்பு இன்றைய நிலையில் இருப்பது சிறப்பித்துச் சொல்லத்தக்கது.

வாழ்வியல் மதிப்பீடுகள் காரணமாகக் குடும்ப அமைப்பிலும் அதன் தாக்கம் ஏற்பட்டு, குடும்பத்தினுடைய அமைப்பிற்கும் நிலைப்பிற்கும் சிறப்பிற்கும் முன்னேற்றத்திற்கும் அன்பு, பாசம், ஆகியவை தவிர பொருள் தலையாய இடத்தைப் பெற்றுள்ளதை மறுக்க முடியாது. குடும்பத்தில் பெண்ணும் தலைமைப் பொறுப்பை ஏற்கும் நிலை ஏற்பட்டு வருகிறது. குடும்பப் பொருளாதாரத்தில் பெண்ணின் பங்கு இருப்பதே இதற்குக் காரணம். எனவே வீட்டில் குழந்தைகள், கணவனைப் பிரிந்து பணிமாற்றம் கிடைக்கும் பட்சத்தில் 'பொருள்வயிற்பிரிவு' மேற்கொள்கிறாள்.

குடும்ப எல்லைக்குள்ளே தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு கணவனோ, மனைவியோ வாழாத காலத்து இன்றைய குடும்ப அமைப்பில் குறிப்பிடத்தக்க மணப்புற உறவுகள் (Ex-Marital Relationships)

காணப்படுகின்றன. சில ஆண்களின் 'சின்ன வீடு' அமைப்பும் குடும்ப அமைப்பில் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய ஒன்று.

கூட்டுக் குடும்பச் சிதைவின் காரணங்களில் வளர்ந்து வரும் தொழில் முன்னேற்றங்கள், நகர்ப்புற மேனாட்டு நாகரிகத் தாக்கம் போன்றவை முக்கிய பங்கு பெறுபவை. தனிக் குடும்ப அமைப்பில் குழந்தைகளின் கவனிப்பு, உடல்நலக் குறைவு, முதியோரைக் கவனிக்காது விட்டுவிடுதல் போன்ற பல சிக்கல்கள் தோன்றத்தான் செய்கின்றன.

4.0. முடிவுரை

விரிப்பின் அகலும் தொகுப்பின் எஞ்சும் தன்மைத்தாகத் தலைப்பு உள்ளமையான், சில செய்திகள் இப்பகுதியில் இடம்பெறுகின்றன.

1. 'குடும்பம்' என்ற சொல்லாட்சி திருக்குறளில்தான் இடம்பெறுகிறது.

   'இடும்பைக்கே கொள்கலங் கொல்லோ குடும்பத்தைக்
   குற்றம் மறைப்பான் உடம்பு' *(கு. 1029)*

என்பதே அக்குறள். 'குடும்பம்' என்ற அமைப்பும், அதன்கண் 'குடும்பத்தார்' உண்டு என்பதும் பெறப்படுகிறது. வாழ்க்கைக்கு உறுதுணையாம் அறக்கருத்துக்களைப் பேசுவதில் முக்கியத்துவம் கொடுத்த இவ்வகை நீதி இலக்கியம் குடும்ப அமைப்பினைப் பற்றிப் பேசவில்லை. ஆனால் ஒரு குடும்பத்தைக் கட்டிக் காப்பதில் பெண்ணுக்குரிய பொறுப்பையும், சமூகத்துடன் குடும்பம் கொண்டிருக்க வேண்டிய இணக்கமான நல்லுறவையும், இல்லறத்தார் குடும்பத்துக்கு வெளியே உள்ளோர்க்கு ஆற்ற வேண்டிய கடமைகளையும் பற்றி அவை பேசுகின்றன.

2. இலக்கியங்கள் விளக்கும் குடும்ப அமைப்பு நிஜ வாழ்வில் உள்ளவை தானா? என்ற வினா எழத்தான் செய்கிறது.

3. சங்க காலத்தில் உறவுகள் பேசப்படுகின்றன. ஆனால் உறவுமுறைச் சொற்களாம் மாமன், மாமி, மைத்துனன் போன்றவை இடம்பெறவில்லை.

4. தமிழர் குடும்ப அமைப்பினைப் பிற இனத்தாரோடு ஒப்பீட்டு நோக்கில் புதிய கருத்துக்கள் தெளிவுபெறும்.

சமுதாய நோக்கில் மகளிர் விளையாட்டுகளும் நோன்புகளும்

வே. சீதாலட்சுமி

சங்க இலக்கியங்கள் முதல் கம்பராமாயணம் வரையிலான இலக்கியங்கள் மகளிர் விளையாட்டுகள் பற்றிய பல செய்திகளைத் தருகின்றன. விளையாட்டுகளின் பல்வேறு வகைகள், செயல்திறன்கள் போன்றவற்றையும் சமுதாயத்தில் இவற்றுக்குத் தரப்பட்டுள்ள முக்கிய இடத்தையும் அறிவதற்கு இவ்விலக்கியங்கள் பெரும் சான்றாகின்றன. பண்டைத் தமிழ்ச் சமுதாயம் ஒன்றுபட்ட பண்பட்ட சமுதாயமாக விளங்க, இவ்விளையாட்டுகள் பெரிதும் உறுதுணையாய் அமைந்திருக்கின்றன. பள்ளிக்கூடங்கள் அமையாத அக்காலத்தில் அவர்களுக்கு கல்வி புகட்டும் கல்விக்கூடங்களாகவும் விளையாட்டிடங்களே அமைந்திருக்கின்றன.

தமிழில் மகளிர் விளையாட்டு குறித்த சொற்களை இலக்கயங்களிலும் நிகண்டுகளிலும் மிகுந்த அளவு காணலாம். கெடவரல்,[1] பண்ணை,[2] பொய்யாடல்,[3] ஓரை,[4] பொய்தல்,[5] உண்டாட்டு,[6] அயர்தல்,[7] பயில்வு,[8] கண்டாயம்,[9] அசதி,[10] விநோதம்,[11] போன்ற சொற்கள் விளையாட்டைக் குறிப்பனவாக இலக்கியங்களில் ஆளப்பட்டிருக்கின்றன. இவற்றோடு வேறுபல பெயர்களும் விளையாட்டு என்பதைக் குறித்து வழங்கப்பட்டிருக்கின்றன. ஒப்பு என்பதை நாமதீப நிகண்டு காட்டுகிறது.[12] சேந்தன் திவாகரமும், சூடாமணி நிகண்டும், பொதிகை நிகண்டும் உப்பு என்ற சொல்லைக் குறிக்கின்றன.[13] இவற்றோடு கேளி, இலீலை, கிரீடை, விலாசனை,

---

1. இளம்பூரணர் *(உரையாசிரியர்)* பொருளாதிகாரம், தொல்காப்பியம், நூ. *319.*
2. பரிபாடல், பா.*11*
3. பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயர் *(உரையாசிரியர்)*, நற்றிணை, மறுபதிப்பு *(சென்னை, 1967)* பா. *68.*
4. பரிபாடல், பா. *20.*
5. எஸ். வையாபுரிப்பிள்ளை *(பதிப்பாசிரியர்)*, பொதிகை நிகண்டு, *(சென்னை, 1924)*, ப.*371.*
6. அகநானூறு, பா. *330.*
7. சதாசிவ செட்டியார் *(பதிப்பாசிரியர்)*, திருநாவுக்கரசர் சுந்தரர் தேவாரப்பதிகங்கள், மறுபதிப்பு *(சென்னை 1973) 91 :2.*
8. அண்ணங்கராசாரியார், *திருவாய்மொழி 7*, இரண்டாம்பதிப்பு *(சென்னை, 1952), 7-8-7.*
9. 'கைந்நிலை', பதினெண்கீழ்க்கணக்கு, இரண்டாம் பதிப்பு, *(சென்னை, 1981)* பா. *55.*
10. வை.மு.கோ., *(உரையாசிரியர்)*, 'பாலகாண்டம்', கம்பராமாயணம், பா. *527.*
11. எஸ். வையாபுரிப்பிள்ளை *(பதிப்பாசிரியர்)*, நாமதீபநிகண்டு, *(சென்னை, 1930)* ப. *701.*
12. திவாகர முனிவர், சேந்தன் திவாகரம் *(சென்னை, 1958)*, ப. *196.*
13. மேலது. ப. *196.*

தகுளம் என்னும் பல வடமொழிச்சொற்களையும் விளையாட்டு என்ற சொல்லுக்கிணையாக நிகண்டுகள் கூறுகின்றன. விநோதம் என்ற சொல்லை சேந்தன் திவாகரமும் பாவம், விகாரம் என்ற சொற்களை இலக்கியச் சொல்லகராதியும் வேறுபடுத்திக் கூறுகின்றன.[14] இப்பெயர்கள் விளையாட்டு சமுதாயத்தில் மிகுதியான இடம் பெற்றிருப்பதைக் காட்டுகின்றன.

இவ்விளையாட்டுகளைக் காணும்பொழுது, தனிப்பட்டு நின்று தன்னில் தானே திளைக்கும் குழவி படிப்படியாகப் பிறரோடு பழகி ஒன்றுபட்டு வாழத்தொடங்கித் தன்னுயிர்போல் மன்னுயிரையும் எண்ணவும் பழகிச் சமுதாய வாழ்க்கையைப் பயின்று கொள்ளும் இடமே விளையாட்டாம் என்ற விளக்கத்தின் பொருத்தப்பாடு தெளிவுறப் புலப்படுவதைக் காணலாம்.

சமூகத்தன்மையென்பது தனிமனிதனையும், அவனது சமூகத்தினையும் இணைத்து, பிணைப்பை உண்டாக்கி, மேலும் சமூக நோக்கங்களையும், குறிக்கோள்களையும், மதிப்புகளையும், எதிர்பார்ப்புகளையும் அவனிடத்தில் வளர்த்து அவனது சமூக நடத்தையைக் கட்டுப்படுத்துகிறது.

சமூகத்தின் அமைப்பு அதனுள் காணப்படும் நிலையங்களால் ஆனது. இவை ஒவ்வொன்றும் சமூகப்பண்பினை வளர்ப்பதில் ஒரு முக்கிய பங்கினை ஏற்றுக்கொண்டுள்ளன. இச்சமூக நிலையங்கள் ஒருவனது சமுதாய நடத்தையை முறைப்படுத்திக் கட்டுப்படுத்திப் பயன்படுத்திக் கொள்கின்றன. அச்சமூக நிலையங்களில் ஒன்று விளையாட்டாகும்.

விளையாட்டு சிறுவரிடையே குழு உணர்ச்சியில் சமுதாயத்துக்குப் பெரும்பங்குண்டு என்னும் உண்மையை அவர்கள் அறியச் செய்கிறது.

விளையாட்டுக் குழுவை இச்சமூக நிலையங்களில் குடும்பம் மற்றும் உற்றார், உறவினருடன் சேர்த்து முதல்நிலைக் குழுக்களாகக் கூறுவர், சமூகவியலார். இக்குழுக்களிடையே நேரடித்தொடர்பு காணப்படுவதால் இவைகளை ஆதரவுக்குழுக்கள் என்பர். இக்குழுக்கள் எல்லா இடங்களிலும், எல்லாக்காலத்திலும் காணப்படுபவை. இக்குழுக்களில் தான், ஒருவன் தன்வாழ்நாளின் பெரும் பகுதியைக் கழிக்கிறான். மனிதப்பண்புகளே இக்குழுக்களின் வாயிலாகத்தான் பெறப்படுகின்றன என்றால் மிகையாகாது. ஆகவே இக்குழுக்களை வளர்ப்புப் பண்ணைகள் என்று வழங்குவர். தான் என்ற உணர்வையும், நாம் என்ற உணர்வையும் பெற்றுச் சமூக இயல்பினை அடைவதற்கு இக்குழுக்களே அடிப்படையாக அமைகின்றன.

---

14. சுன்னாகம், அ. குமாரசாமிப்பிள்ளை (தொகுப்பாசிரியர்), இலக்கியச் சொல்லகராதி, (சென்னை, 1914), பக். 127, 182.

சங்க இலக்கியங்களில் இவ்வகை விளையாட்டுக் குழுக்கள் பற்றிய குறிப்பை மிகுதியும் காணலாம். ஆயம்[15] என்று சொல்லால் விளையாட்டு மகளிர் அழைக்கப்பட்டனர். தொடலை ஆயம்,[16] ஓரை ஆயம்,[17] கானல் ஆயம்[18], கோதை ஆயம்,[19] பிரிவிலாயம்,[20] நிரைவளை ஆயம்,[21] ஊர்க்குறு மகளிர்,[22] விளையாட்டாயம்,[23] இளந்துணை ஆயம்,[24] என்று பலவாறாக இவர்கள் கூறப்பட்டனர்.

தாய் தன்மகள் உடன்போக்கு சென்றுவிட்ட நிலையில், அவளை நினைத்து அழுங்கால், அவள் விளையாடிய பொருள்களையும் விளையாட்டுகளையும் நினைத்துப் புலம்புவதைக் காணலாம். இவ்வாறு விளையாடிக் கொண்டிருந்த நீ போய்விட்டாயே என்றும், இந்த விளையாட்டுகளையெல்லாம் துறந்து போய்விட்டாயே என்றும் கூறி வருந்துகிறாள். இது சிறுமியர் பெரும்பொழுதே விளையாட்டில் கழித்தமையைக் காட்டுகிறது.[25]

சிறுமியர்க்கு ஐம்புலப்பயிற்சியாக விளையாட்டுகள் உதவுகின்றன. புலப்பயிற்சி வாயிலாக ஐம்புலன்கள் நல்ல முறையில் மேலும் வளருகின்றன. சரிவர இயங்குகின்றன. புலப்பயிற்சி மூலம் உற்றுநோக்கும் திறனும் ஆராய்வூக்கமும் வளர்கின்றன. மேலும் சுறுசுறுப்பையும் விழிப்புணர்ச்சியையும் தருகின்றன.

ஒரு பொருளின் வண்ணம், வடிவம் போன்றவற்றில் வேறுபாடறியச் செய்வது கட்புலனுக்குத் தரும் பயிற்சியாக அமைகிறது.

பாரிமகளிர் மன்னனைப் போரெதிர்ந்து வந்த வேந்தர் குதிரைகளை நெடுவரையில் ஏறி எண்ணிவிளையாடியதையும்,[26] ஈத்திலைக்குப்பையேறி உமணர் உப்பு வண்டிகளை எண்ணி விளையாடியதையும் புறநானூறு

---

15. ஈ.த. இராஜேஸ்வரி, குழவி உள்ளம், (சென்னை, 1950) பக். 390, 410.
16. பதிப்பாசிரியக் குழுவினர், அகநானூறு, பா. 20.
17. மேலது, பா. 180.
18. மேலது பா. 219.
19. அ. நாராயணசாமி ஐயர் (உரையாசிரியர்), நற்றிணை, பா. 72.
20. பதிப்பாசிரியர் குழுவினர், அகநானூறு, பா. 180.
21. பொ.வே.சோ., (உரையாசிரியர்) குறுந்தொகை, பா. 144.
22. அகநானூறு, பா. 190.
23. மேலது, பா. 289.
24. அ. நாராயணசாமி ஐயர் (உரையாசிரியர்) நற்றிணை, பா. 19.
25. பதிப்பாசிரியர் குழுவினர், அகநானூறு, பா. 17.
26. மேலது பா. 153.

காட்டுகிறது.[27] காட்டில் கூட்டங்கூட்டமாக வரும் யானைகளில் பிடிகளை எண்ணி விளையாடியதைப் பதிற்றுப்பத்து கூறும்.[28] கடலில் வரும் திமில்களை எண்ணி விளையாடியதையும் உப்புக் குவியலின் மேலேறி நின்று கடலில் வரும் தோணிகளை எண்ணிவிளையாடியதையும் அகநானூறு காட்டும்.[29]

கேள்விப்புலனைப் பயிற்றுவித்தல்: திருக்கோவையார் மலைப்பகுதியில் சிலம்பெதிர் கூவி விளையாடியதைக் கூறும்.[30] சிலம்பெதிர் கூவுவதோடு, குயில் கூவும்பொழுது அவ்வற்றெதிர் தாமும் அக்குயில் போன்று கூவி விளையாடுவதைச் சூளாமணி கூறுகிறது.[31]

மகளிர் தம் கணவருடனும் மக்களுடனும் தோழியருடனும் நொடி முதலியன பயிற்றி விளையாடியதை இலக்கியங்கள் காட்டுகின்றன. இதனைச் சிந்தனையைத் தூண்டும் சிறந்த பொழுதுபோக்கு விளையாட்டு என்பர்.[32] தொல்காப்பியத்திலும் பிசி, நொடி பற்றிய குறிப்புகளைக் காணலாம்.[33] குறமகள் தன் தலைவனுடனும், புதல்வனுடனும் நொடி பயிற்றி விளையாடியதை நற்றிணை கூறும்.[34] இரவில் வாசவதத்தை ஆயத்தாருடன் நொடி பயின்றதாகவும், வாசவதத்தையின் துயர்நீக்க அவளுடன் பிசியும் நொடியும் பிறவும் பயின்று தோழியர் விளையாடியதாகவும் பெருங்கதை கூறும்.[35] கம்பராமாயணம் பிசி என்பதைப் பிதிர் என்று கூறும்.

மகளிர் இரண்டு கட்சியாய்ப்பிரிந்து வினாவுவதும், விடை இறுப்பதுமாய் ஆடும் விளையாட்டாகிய சாழல் என்னும் விளையாட்டையும் இவ்வகையில் சேர்க்கலாம்.[36]

கேள்விப்புலனுக்குச் சிறப்புதரும் வகையில் மற்றொரு விளையாட்டையும் காணலாம். பூம்பொழிலில் இருக்கும் மலரின் காட்சியை மீண்டும் மீண்டும் நோக்கி, இன்பம் தரும் செய்யுளை இயற்றி, அதனைத்

---

27. ஔவை சு. துரைசாமிப்பிள்ளை (உரையாசிரியர்) புறநானூறு, பா. 116.

28. பொ.வே.சோ. (உரையாசிரியர்) பதிற்றுப்பத்து, பா. 43.

29. அகநானூறு, பா. 190.

30. வி. விசுவநாதய்யர் (பதிப்பாசிரியர்), திருக்கோவையார் (தஞ்சாவூர், 1951), பா. 30

31. பொ.வே. சோ., (உரையாசிரியர்கள்), சூளாமணி, பாகம்-2, பா. 1641.

32. ச.வே. சுப்பிரமணியன், தமிழில் விடுகதைகள், மூன்றாம் பதிப்பு, (சென்னை, 1975), ப. 49.

33. இளம்பூரணர் (உரையாசிரியர்), பொருளாதிகாரம், தொல்காப்பியம், நூற்பா 384, 467.

34. அ. நாராயணசாமி ஐயர் (உரையாசிரியர்) நற்றிணை, பா. 341.

35. பொ.வேசோ (உரையாசிரியர்) பெருங்கதை, பகுதி -1, காண்டம்1, 33: 175 - 76.

36. ப. இராமநாதம் பிள்ளை (உரையாசிரியர்), 'திருச்சாழல்', திருவாசகம், பா-ள் 1-20.

தோழியர் செவிகளில் சேர்த்து விளையாடுவர். இது சூளாமணியில் இடம்பெறுவதாகும்.[37]

இவ்வாறு கேள்விப்புலனுக்குப் பயிற்சியளிக்குமாறு அமையும் விளையாட்டுகள் சமுதாயத்தில் மற்றவருக்கு இணையாகக் கேள்வித்திறன் பெற்றுத் திகழவும், உரையாடல் திறன் அடையவும் பயன்படும்.

மேலும் சிலப்பதிகாரத்தில் வரிப்பாடல்களைக் கூறுமிடத்து வரும் அம்மானை வரி, கந்துக வரி, ஊசல்வரி போன்றவையும் இவ்வகையிலடங்கும்.[38] இப்பாடல்பாடுவதன் மூலம் சமுதாயத்தோடு ஒருங்கிணைந்தவர்களாய், தங்கள் தலைவனைப் புகழ்ந்தும், நாட்டினைப் புகழ்ந்தும் தங்கள் சமூக உணர்வை வெளிப்படுத்துவதைக் காணலாம்.

தொடுபுலன் பயிற்றுவித்தல் : பலவிதமான பாவைகள் செய்து விளையாடுவதை இவ்வகையில் கூறலாம். சங்ககால மகளிர் சாய்க்கோரையைப் பறித்துக் கிழித்துப் பாவையாக்கி விளையாடுவதைக் கலித்தொகை கூறும்.[39] வண்டல் மணலால் பாவை செய்து விளையாடுவதையும் சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன.[40] பூந்தாது முதலியவற்றால் செய்த பாவையினைக் குறுந்தொகையும்[41] பாவை போல் தோற்றும் குரவமலரையும் பாவையெனக் கொண்டு மகளிர் விளையாடுவதை ஐங்குறுநூறும் கூறும்.[42]

புனைதிறன் : சிறுமியர் படைப்புத்திறனையும், கற்பனை ஆற்றலையும் வளர்ப்பனவாகச் சில விளையாட்டுகள் அமைகின்றன. பாவை செய்து விளையாடுவதும் சிற்றில் இழைப்பதும் சங்ககால மகளிரின் கற்பனையாற்றலைக் காட்டுகின்றன.

மகளிர் பதுமை போன்றும், யானை முதலிய விலங்குகளின் உருவம் போன்றும், பறவைகள் போன்றும், தொடையிலும், முகப்புகளிலும் இயற்றிய பொருந்திய மலர்களையுடையதாக ஓவியர் புனைந்தவற்றையொப்ப, ஒளியுடைய மலர்களாலியன்ற பிணையலாகிய மாலைகளைக் கண்டார் வியக்கும்படி புனைந்து விளையாடுவர்.[43] பொழிலில் ஈனாத வாழையின், உள்ளே புதுவதாக எழுந்த சுருளாகிய குருத்திலையை அரிந்தெடுத்து, தம்

---

37. பொ.வே.சோ. (உரையாசிரியர்) சூளாமணி, பாகம்-2, பா. 1638.

38. உ.வே.சா. (பதிப்பாசிரியர்) சிலப்பதிகாரம், காதை-21, பா-ள் 20-22.

39. நச்சினார்க்கினியர் (உரையாசிரியர்) கலித்தொகை, பா. 144.

40. ஐங்குறுநூறு, பா. 124.

41. பொ.வே. சோ (உரையாசிரியர்) குறுந்தொகை, பா. 48 இன் உரை.

42. ஐங்குறுநூறு பா. 344.

43. பொ.வே.சோ (உரையாசிரியர்) சூளாமணி, பாகம்-2, பா. 1634.

நகத்தின் நுனியால் அழுத்தி பறவைகள் எழும் குளங்கள் போன்றும், தம்முட் போரிடும் சிங்கங்கள் போன்றும், இணையாகிய அழகிய பறவை உருவங்கள் போன்றும் உரு அமையக் கிள்ளித் தம் தோழிமார்க்கு வழங்கி விளையாடுவர்.[44]

சமுதாயத்தில் தனிமனிதன் கொண்ட ஆளுமையின் அடிப்படைக்காரணங்கள் சூழ்நிலையும் மரபுநிலையுமாகும். புறம்பேயிருந்து கட்டுப்படுத்தும் பலவித ஏதுக்களே சூழ்நிலை எனப்படும். இச்சூழ்நிலை ஏதுக்கள் ஒருவனது ஆளுமை வளர்ச்சியை ஊக்குவித்தோ, தடுத்தோ செயற்படலாம்.

பழந்தமிழ் மகளிர் இயற்கையான, நாநிலப் பரப்புகளில் மரங்களிடையேயும், நீரிலும் மலையிலும் எனத் துள்ளி விளையாடியதை இலக்கியங்கள் கூறும். சிறுமியர் வெளியிடங்களில் விளையாடினர். வெளியிடங்களில் விளையாடுவதால் கிடைக்கும் உடற்பயிற்சி, திறந்தவெளிக்காற்று கதிரவனொளி ஆகிய இவை விளையாடுவார்க்கு ஊக்கமும், ஆற்றலும் அளிக்கின்றன என்பர்.[45] விளையாட்டைத் தூண்டுவனவாகவும், மன மகிழ்ச்சியோடு சுதந்திரமாக ஓடியாடி விளையாட உதவுமாறும் இவ்வியற்கைச் சூழல்கள் உதவுகின்றன. இவ்வாறு ஆடப்படும் விளையாட்டுகள் ஆடுபவரின் உடலுக்கும், உள்ளத்திற்கும் வலுவூட்டுகின்றன. இதனால் சமுதாயத்தில் மக்களிடையே கலந்துவாழும் நிலையில் அஞ்சாது இருத்தலாகிய ஓர் இயல்பைத் தோற்றுவிப்பதைக் காணலாம்.

கட்டுப்பாடு என்பது தன்னையே கட்டுப்படுத்திக்கொள்ளுதலின் விளைவாக எழும் தன்னடத்தையாகும். ஒவ்வொரு தனிமனிதனும் சமூகத்திலுள்ள பிறருடன் கூடிவாழ்வதற்கேற்ற இயல்புகளைப் பெற்றிருத்தல் அவசியம். சமூகத்தோடு இயைந்து பொருந்தக்கூடிய நடத்தை முறையை ஒருவனுக்கு ஒழுங்கானது (கட்டுப்பாடு) அளிக்கிறது. இது தனிமனிதனின் நலத்தையும், சமூக நலனையும் பேணுகிறது.

கட்டுப்பாட்டை வளர்க்கும் முறையில் விளையாட்டு குறிப்பிடத்தக்க இடம் பெறுகின்றது.

அம்மானை, கழங்கு, பந்து, ஊசல் போன்ற விளையாட்டுகளை இவ்வகையில் கூறலாம். இந்த வகையில் இத்தனை பேர் இவ்வாறு விளையாட வேண்டும் என்ற கட்டுப்பாட்டுடன் விளையாடப்படுவதை இவற்றில் காணலாம்.

44. பொ.வே.சோ (உரையாசிரியர்) சூளாமணி, பாகம்-2, பா. 1640.

45. ரெவரெண்ட், சத்திய சாமுவேல், மனோதத்துவமும், குடும்பவாழ்க்கையும், (சென்னை, 1953), ப. 246.

இதனால் சமுதாயத்தில் ஒரு தலைவரின் கீழ் அடங்கியிருக்கும் நிலையினையும் பிறரோடு இயைந்து கூட்டுறவோடு வாழும் நிலையினையும் ஏற்படுத்துகிறது.

பந்தாடுதல், ஊசல், அம்மானை, நீர்விளையாட்டு போன்றவற்றில் போட்டிகளோடு ஆடும் நிலையினைக் காணலாம்.

பந்தினை வீசியெறிந்து அதனைக் காலால் உருட்டி விளையாடுவர். சீவகசிந்தாமணி, பெருங்கதை, சூளாமணியிலும் பந்தினைக் கொண்டு நுண்மையான பலவிதச் சுழற்சிகளைச் செய்வதில் போட்டி இருந்ததைக் காணலாம்.

பெருங்கதை ஒருவரோடுபொருவர் மாறுபட்டு ஊசலாடினார் என்று கூறும்.

மகளிர் தாம் வளர்க்கும் கிளியையும், பூவையையும் பிற மகளிர் வளர்க்கும் பூவையையும் கிளியையும் வெல்லுமளவு பாட்டையும், இன்மொழிகளையும் கற்பித்து அவற்றை வாய்மொழியால் வெல்லச் செய்து விளையாடுவதைப் புறப்பொருள் வெண்பாமாலை காட்டும்.[46] இப்போட்டி வியைாட்டுகள் காப்பிய காலத்திலேயே மிகுதியும் ஆடப்பட்டுவந்திருப்பதைக் காணலாம். நீர்விளையாட்டுகளிலும் போட்டி விளையாட்டுகள் அமைந்திருப்பதை இலக்கியங்கள் காட்டுகின்றன.[47]

இப்போட்டி விளையாட்டுகள் தங்கள் திறமையை வாய்ப்பு வரும்பொழுது பொது இடங்களில் வெளிப்படுத்தும் அஞ்சாத நிலையினையும் வாழ்வில் ஏற்படும் வெற்றி தோல்விகளைக் கண்டு தளராத ஒரு நிலையினையும் சிறுமியர்க்கு உருவாக்கித் தருவதைக் காணலாம். வாழ்க்கையில் ஏற்றத்தாழ்வுகளை அமைதியுடன் ஏற்றுக்கொண்டு வாழக் கற்றுக்கொடுப்பதும் இவ்விளையாட்டுக்களே. சமுதாயத்தில் நடக்கும் நிகழ்ச்சிகளைப் பார்த்து, அவற்றின் தாக்கத்தால் ஈர்க்கப்பட்டு, அந்நிகழ்ச்சிகளைப் போல நடிக்கும் விளையாட்டுகள் பலவற்றையும் பழந்தமிழ் மக்களிடையே காணலாம்.

சிறுமியர் கரும்பை உலக்கையாகக் கொண்டு, மணலை வெண்நெல்லாகக் குவித்து சுற்றத்தாரின் செல்வப்பெருக்கைப் புகழ்ந்து பாடி இடை அங்குமிங்கும் வளையும்படி குற்றி விளையாடுவர் என்று அகநானூறு கூறும்.[48] சிலப்பதிகாரமும்[49] சூளாமணியும்[50] இவ்விளையாட்டைக் குறிப்பதைக் காணலாம்.

---

46. பொ.வேசோ (உரையாசிரியர்) புறப்பொருள் வெண்பாமாலை, பா. 354.
47. பதிப்பாசிரியக் குழுவினர், பரிபாடல், பா.7, அடி 51-60.
48. மேலது, அகநானூறு, பா. 286,
49. உ.வே.சா. (பதிப்பாசிரியர்) சிலப்பதிகாரம், 29 : 26-29.
50. மேலது, சூளாமணி, இரண்டாம் பதிப்பு, (சென்னை).

தம் அன்னைமார் இல்லத்திற்கு வரும் இரவலர்க்கு ஈயும்செயலைக் கண்ட சிறுமியர் தாங்களும் சிறுவயதிலேயே ஈதலை விளையாட்டாகக் கொள்வதைக் காணலாம்.

விளையாட்டாயத்தார் மணல் வீடமைத்து அதிலிருந்து கொண்டு புன்னைப் பூந்தாதைப் பொன் என்று சொல்லிக் கையால் முகந்து தன்பால் இரவலர்போல் வரும் தோழியர்க்கு வழங்கி விளையாடுவது இவ்வகையாகும்.[51] பாரிசாத மரத்தை மணமகனாகவும் காமவல்லி என்னும் கொடியை மணமகளாகவும் கொண்டு மணவிழா நடத்தி மகிழ்வதைப் பெருங்கதை கூறும். சமுதாய நிகழ்ச்சிகளுக்குத் தங்களைத் தயார்ப்படுத்தும் ஒரு நிலையை இது காட்டுகிறது.[52]

பாவை விளையாடிய சிறுமியர் அதனைத் தம் மகளெனவே கருதினர். இதனை 'ஈனாப் பாவை'[53] என்று இலக்கியங்கள் கூறும். பாவையிடத்தே அன்பு பூண்டு அதனைப் போற்றி வளர்த்தலும், மணம் முதலியன செய்து மகிழ்தலும் மகளிர்க்கு இயல்பு என்பர் உரையாசிரியர்.[54] வீட்டில் மரநிழலில் மணல் கொணர்ந்து பரப்பி, அதன்மேல் தன் விளையாட்டுப் பாவையைப் படுக்கவைத்தும், குவளைமலரை அப்பாவைக்கு அணிவித்தும் விளையாடுவர்.[55] பாலின்றாயினும் தன் மார்பைப் பாவையின் வாய்வைத்துப் பரிவுமொழிகள் கூறி விளையாடுவர்.[56] நெய்தல் விரவித் தொடுத்த தழையினைப் பாவைக்குப் புனைவர்[57]. பாவையை எடுத்து அது அழுமாறுபோலக் கொண்டு அவ்வழுகை தணியப் பாராட்டுவர்.[58] பொன்னிக்கரையில் மணற்பாவை செய்து அதனை நின்கணவர் என்று ஒருவருக்கொருவர் கூறி விளையாடுவர்.[59] இருபாவையை மணம் செய்வித்து விளையாடியதைச் சீவகசிந்தாமணி காட்டுகிறது.[60] பாவைக்குப் பெயரிட்டு, சிற்றிலமைத்து, பணியாளரமைத்து, விளையாடலைப் பெருங்கதை கூறும்.[61] சூளாமணியில் கடப்ப மலர்களாகிய கவரிகளை ஏந்திக்கொண்டு, மாணிக்க வளையல்களைப் பக்கத்தில் செறித்து குராமலராகிய பாவைகளைக்

---

51. பதிப்பாசிரியக் குழுவினர், அகநானூறு, பா. 26.
52. உ.வே.சா. (பதிப்பாசிரியர்) பெருங்கதை, காண்டம் 1, 48 : 21-27.
53. அ நாராயணசாமி ஐயர் (உரையாசிரியர்) நற்றிணை, பா. 127.
54. உ.வே.சா. (உரையாசிரியர்), குறுந்தொகை, பா. 114 இன் உரை.
55. பதிப்பாசிரியக் குழுவினர், அகநானூறு, பா. 165.
56. மேலது, ஐங்குறுநூறு, பா. 128.
57. மேலது, பா. 187.
58. பொ.வே.சோ. (உரையாசிரியர்), குறுந்தொகை, பா. 48.
59. உ.வே.சா (பதிப்பாசிரியர்), சிலப்பதிகாரம், காதை-21, அடி 6-9.
60. மேலது, சீவகசிந்தாமணி, பா. 1319.
61. பொ.வே.சோ (உரையாசிரியர்), பெருங்கதை, பகுதி-2, 10 : 59-71.

கைக்கொண்டு அக்குழவிகளைத் தாலாட்டுதல் போல விளையாடுவர்"[62] என்று பாவை விளையாட்டு கூறப்படுகிறது.

சிற்றிலமைத்து விளையாடுவதிலும் இப்போலச் செய்தல் முறையைக் காணலாம் சிறுமியர் மணல்வீடுகட்டிச் சோறு சமைத்து விளையாடுவர்[63]. தூதையெனும் மரத்தாலியன்ற சிறுபானையைக் கொண்டு விளையாடுவர்[64]. சிற்றிலுடன் விளையாட்டிற்குரிய துணைக்கருவியாக, சிறுசுளகைப் பயன்படுத்துவர்.[65]

இந்தப் போலச்செய்தல் விளையாட்டுகள் மூலம் சிறுமியர் சமுதாயத்தில் தாங்கள் வாழப்போகும் எதிர்கால வாழ்க்கைக்குத் தங்களைத் தயார்ப்படுத்திக்கொள்வதாகிய நிலையை ஏற்படுத்தித் தருகின்றன.

இந்தச் செயல்களோடு, சமுதாயத்தில் பெரிய அளவில் நடக்கின்ற விழா நிகழ்ச்சிகளையும் நாடகமாக நடித்து விளையாடுகின்ற நிலையும் அக்காலத்தில் காணப்பட்டது. முள்ளி மலர்களை விளையாடும் மகளிர் தாம் கொண்டாடும் திருவிழாவை அணிசெய்தற் பொருட்டுச் சேர்ப்பதாக அகநானூறு கூறுகிறது.[66]

ஒளிந்து விளையாடுவதும்,[67] கண்ணை மூடச்சொல்லிக் கண்டு பிடித்து விளையாடுவதும்[68] அக்காலத்தில் காணப்பட்டது. சிறுமியரின் கூர்ந்த நோக்கையும் கூரிய அறிவையும் வளர்ப்பதாக இவ்விளையாட்டு அமைகிறது. இவ்வகையில் இவ்விளையாட்டு சமுதாய வாழ்வுக்குத் தேவையான கூரிய பார்வையைத் தருகிறது.

பழந்தமிழ் மக்களும், விளையாட்டுகள் சிறுவரை சமூக இயல்பினராக்கும் என்பதை உணர்ந்திருந்தனர். அவர்கள் சிறுமியரை விளையாட ஊக்குவிப்பதும் விளையாடினால் நலன் கிடைக்கும் என்று கூறுவதும் இதனைக் காட்டுகிறது.

இளமகளிர் வீட்டில் இராது விளையாடுவது பொலிவை உண்டாக்கும் என்று மக்கள் கருதினர்.[69] இளமகளிர் வெளியே சென்று

---

62. பொ.வே.சோ (உரையாசிரியர்), சூளாமணி, பா. 1633.

63. பதிப்பாசிரியர் குழுவினர், அகநானூறு, பா. 110.

64. நச்சினார்க்கினியர், உரையாசிரியர், கலித்தொகை, பா. 59.

65. வைமு.கோ (உரையாசிரியர்) பாலகாண்டம், கம்பராமாயணம், 15 : 1004.

66. பதிப்பாசிரியக் குழுவினர், அகநானூறு, பா. 156.

67. தோலாமொழித்தேவர், சூளாமணி, பா. 1641,

68. வைமு.கோ (உரை) பாலகாண்டம், கம்பராமாயணம், 15 : 1004.

69. அ. நாராயணசாமி ஐயர் (உரை), நற்றிணை, பா. 68.

விளையாடாது இல்லில் செறிந்திருப்பது அறனன்று ஆக்கமும் போகும் என்று கூறும் நிலை காணப்பட்டது.[70]

சங்க இலக்கியங்களில் தலைவன் தலைவி விளையாடற்கு உதவி புரிந்த நிலையைப் பலவிடங்களில் காணலாம். பாவைக்காகப் பஞ்சாய்க் கோரை பறித்தும்,[71] நீராடலில் ஏதம் வராமல் புறத்தே சுற்றித் திரிந்தும் உடன் போக்கு நிகழ்த்தும் வழியில் பாவைக்குப் பூப்பறித்தளித்தும்[72] சிற்றில் விளையடக் கூறியும்[73] ஆகிய செயல்களினால் மகளிர் விளையாடற்குத் துணை நின்றமையைக் காணலாம்.

யவன நாட்டரசன் ஒரு காலத்தே பிரச்சோதன மன்னனுக்குத் திறைப்பொருளாகக் குதிரைகளும், ஒரு கோடி வயிரமணிகளும் கொடுத்தானாக, அம்மன்னன் அவற்றை ஏற்றுக் கொள்ளாமல் அந்த யவனமன்னனின் மகள் விளையாடிய அழகிய பாவையைத் திறைப்பொருளாகத் தருக என்று அதனைக் கொண்டு அப்பாவைக்குத் தன் பட்டத்தேவியின் பெயரையிட்டு அதனைத் தன் மகளுக்கு அளித்தான். அவ்விளையாட்டுப் பாவைக்குச் சிற்றிலும், அதனைச் சுமந்து வருவதற்கு கூனரும் குள்ளரும் அமைத்தான்.[74]

சேனை வணிகன் மகள் ஒருத்தி விளையாடுவதற்கு அவன் தமையன்மார் மரக்கலத்தில் மகளிர் கொணர்ந்தளித்தனர்.[75] இவை விளையாட்டுக்கு சமுதாயத்தில் அளிக்கப்பட்ட ஆதரவைக்காட்டுகிறது. சங்க காலத்தை அடுத்து வந்த காலங்களில் விளையாடுவதற்கென்று தனி விளையாட்டிடங்கள் அமைக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

எந்திரக்கிணறும், செய்குன்றமும் அருவியும் மலர்ப்பந்தரும், ஒளித்து வாழும் உறைவிடங்களும் பளிக்கறையும் கொண்டு, விளையாடுவதற்கென்று தனி இடம் அமைப்பதை மணிமேகலையில் காணலம்.[76] பல்வகை மரங்களும் செடிகளும் செய்குன்றமும் கொண்ட காவல் மதிலும் காவலரும் உடைய பூம்பொழிலைச் சூளாமணி காட்டுகிறது.[77] பெருங்கதையும் விளையாட்டிடங்களைப் பற்றிய செய்திகள் தருகின்றது.[78] பந்தாடுவதற்குத் தனியே களமும் இருந்தது.[79]

---

70. நச்சினார்க்கினியர் (உரை) கலித்தொகை, பா. 49.
71. மேலது பா. 49.
72. பதிப்பாசிரியக் குழுவினர், ஐங்குறுநூறு, பா. 383.
73. அ. நாராயணசாமி ஐயர், (உரை) நற்றிணை, பா.9.
74. பொ.வே.சோ (உரை) பெருங்கதை, பகுதி-2, காண்டம் 4, 10 : 59-71.
75. மேலது பகுதி-1, காண்டம் 1, 40. 343-47.
76. ந.மு.வே (உரை) மணிமேகலை, காதை-19, அடி 100-106.
77. பொ.வே.சோ (உரை), சூளாமணி, பாகம் 1, 56-59.
78. மேலது, பெருங்கதை, காண்டம் 1, 46 : 286-93.
79. மேலது, காண்டம் 1, 33 : 1-7.

நீர் விளையாட்டிற்குப் பல்வேறு வகை வாவிகள் அமைக்கப் பட்டிருந்தன.[80]

இந்த விளையாட்டுகளோடு மக்களிடையே காணப்படும் நோன்புகளும் சமுதாய உணர்வுபெற ஊன்றுகோலாய் இருந்தன.

விரதம் நம்மை நாமே உணவாலும் ஒழுக்கத்தாலும் கட்டுப்படுத்திக்கொள்வதாகும். உடல் வலிமை பொறிகள் வாயிலாய்ப் புலன்களைத்தழுவி உள்ளத்தை நெறிகலங்கச் செய்கின்றது. அப்பொழுது மனிதன் நியதிகளைக் கைவிட்டு வழிபாட்டு முறைகளை மறந்து ஒழுக்கத்தைத் துறந்து தீயனவற்றை மேற்கொண்டு விலங்கோடொப்ப வாழ்கின்றான். மனிதன் அவ்வாறு சென்றிடாவண்ணம் வாழவேண்டுமென்பதற்காகவே ஒழுக்கம், அன்பு, அருள், ஆசாரம், உறவு, தானங்கள், வணங்கல், வாய்மை, அடக்கம், அறிவோடு அர்ச்சித்தல் முதலிய முறைகளை நமக்கு அருள்பெற்ற பெரியோர்கள் வகுத்துக் காட்டினர். மேற்கூறிய அனைத்தும் அடங்கிய ஒரு நெறியைக் கடைப்பிடித்தல் தான் நோன்பு எனப்படுவது.[81]

விரதம் என்ற சொல்லிற்கு நியமத்துடன் சங்கல்பம் செய்துகொண்டு அனுட்டிக்கும் விரதம் என்பது பொருள் என்று கலைக்களஞ்சியம் கூறுகின்றது.[82]

இந்து சமய பழக்கவழக்கங்கள் என்னும் நூல் 'உண்ணாதிருக்கும் நாள், இறைவனை வேண்டி வழிபடும் நாள் விரதம்' ஆகும் என்று கூறும்.[83]

இறைவனிடம் ஒன்றைச் செய்யுமாறு வேண்டி மனிதன் தானாக ஏற்படுத்திக்கொண்ட நன்றிக்கடன் என்பார் ஜி.எப். மூர்.[84]

சங்கராச்சாரியார் 'ஒவ்வொருகாரியத்திலுள்ள ஜீவனும் கடைத்தேறுவதற்கு அனுகூலமாக வெவ்வேறு அனுஷ்டானங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. உடல் வருந்த உழைப்பவனை உபவாசம் இரு எனக்கூறமுடியாது. புத்தியினால் காரியங்களைச் செய்கிறவர்களுக்கு சரீர

---

80. மேலது, பகுதி 2, காதை 3, 12 : 1-225

81. பிஎ. நடேசபிள்ளை, 'சஷ்டி நோன்பு', கந்தர் சஷ்டிக் கவசங்கள் (நாகர்கோவில், 1972) பக். 13, 14.

82. சோமதேவ சர்மா 'விரதங்கள்', மய. பெரியசாமித் தூரன், (பிரதம ஆசிரியர்), கலைக்களஞ்சியம், தொகுதி-9, (சென்னை, 1963), ப. 353.

83. P. Thomas, Hindu Religion - Customs and Manners, Second Edition (Bombay, 1957) p. 143.

84. M.A. Canney, An Encyclopedia of Religious (Delhi, 1976) Quotation, p. 379.

போஜனம் அவசியம் இல்லை. அவர்கள் சரீர அபிமானம் நீங்கவே அதிக அனுஷ்டானங்கள், ஸ்னானங்கள் விரதங்கள் வைத்திருக்கிறது என்பார்.[85]

தேவநேயப் பாவணார் 'நோன்பு ஆன்மாவின் தூய்மைக்காக ஓரிரு வேளை அல்லது நாள் உண்ணாதிருத்தல்' என்பார்.[86]

விரதத்தால் மனம் புத்தி முதலான உட்கருவிகள் பரிசுத்தம் அடையும். பிறவிப் பெருங்கடலை நீந்த வழி உண்டாகும்.[87]

உலகில் காணப்படும் எண்ணற்ற பிறவிகளுள் மிகச் சிறப்புடையது மக்கட்பிறவி. இத்தகைய மக்கட்பிறப்பினை அடைந்தோர் வினைமாசு நீங்கி மனம் பரிசுத்தம் அடைதற்பொருட்டு மேற்கொள்ளப்படுவதே விரதம் ஆகும்.[88]

இந்த விளக்கங்கள் மக்கள் ஒழுக்கத்தாலும் உணவாலும் உள்ளத்தையும் உடலையும் கட்டுப்படுத்திக்கொள்வது நோன்பு என்பதை உறுதிப்படுத்துகின்றன. இதனால் மக்கள் சமுதாயம் நல்நெறிப்பட்டு இருக்க வகை செய்தல் இயலும்.

தீய ஒழுக்கங்கள் இல்லாத நன்நெறியுடன் கூடிய வாழ்க்கையால் மனிதன் சமுதாயத்தை விட்டு விலகாமல் இணைந்து வாழும் வாழ்க்கையை ஏற்படுத்திக்கொள்கிறான். சமுதாயத்தோடு ஒன்றிப்போகிறான்.

திருமணம் என்பது பழந்தமிழரிடையே மேற்கொள்ளப்பட்ட ஓர் உறவுமுறை எனலாம். நான் நாம் என்ற உணர்வுகள் குடும்பத்தில் தான் முதன் முதலில் தோன்றுகின்றன. ஒருவனை சமூக இயல்பினாக்குவதற்குப் பெரும்பங்கு வகிப்பது குடும்பமாகும். பல்வேறு சமூக உயர்பண்புகளாகிய ஒத்துணர்வு, கடின உழைப்பு, பெருந்தன்மை, கீழ்ப்படிதல், சமூக நலனுக்குக் கட்டுப்படுதல் போன்றவைகளுக்குப் பிறப்பிடம் குடும்பமேயாகும். எனவே குடும்பம் என்ற சமூக நிலையத்தை அமைத்துக் கொள்ளும் விருப்பினை வெளிப்படுத்துவனவாக இந்நோன்புகள் அமைகின்றன.

அந்நிலையில் மனம் இயைந்த வகையில் தங்கள் குடும்பத்தை அமைக்க மகளிர் தாங்கள் விரும்பியவரையோ அல்லது நல்லவர் ஒருவரையோ மணப்பதையே பெரிதும் விரும்புவர். எனவே இறைவனை வேண்டி மணம் தருவதற்கான நோன்புகள் மகளிரால் மேற்கொள்ளப்பட்டன.

பரிபாடல், நற்றிணை, குறுந்தொகை, கலித்தொகை போன்றவற்றில் தைநீராடல் பற்றிய குறிப்பைக் காணலாம்.

---

85. சங்கராசாரியார், தெய்வத்தின் குரல், (சென்னை, 1960), ப. 1555.

86. ஞா. தேவநேயன், சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள், மறுபதிப்பு (சென்னை, 1971), ப. 59

87. ஜே. வெ. ஜம்புலிங்கம் பிள்ளை, 'விரதம்', சப்தகிரி, மலர் -11, இதழ் 1, (திருப்பதி, ஜூன் 1980) ப. 5

88. சோமவார விரதம், (திருக்கடவூர், 1945) ப. 1

நீராடல் இந்நோன்பின் இன்றியமையாத செயலாகும். தை மாதத்தில் திருவாதிரை நாளில் இந்நோன்பு நோற்றதாகக் கூறப்படுகின்றது.[89] சடங்குகளை அறிந்த முதுபெண்டிர் இளம் மகளிர்க்கு நோன்பு மேற்கொண்டு நீராடும் முறையைக் காட்டினர். அப்பெண்கள் பனியோடு கூடிய காலைப்பொழுதைப் பாடியபடி நீராடினர். கன்னியர் தாம் விரும்பும் கணவரைப் பெற வேண்டி நீராடுவதை இதில் காணலாம். மேலும் எம்மைவிட்டு நீங்காது எம்முடனேயே தலைவன் இருக்கவேண்டும் என்றும் சுற்றத்தோடு இணைந்து வாழவேண்டுமென்றும் அவர்கள் வேண்டினர். இதனால் சமுதாயத்தில் நல்லதோர் வாழ்க்கை நடத்தி அதனால் நல்ல நெறிப்பட வாழவேண்டும் என்ற அவர்கள் எண்ணத்தைக்காணலாம். காலையில் இறைவனை எண்ணி நம்பிக்கையோடும் குளிர்ந்த நீரில் குளிப்பதாகிய உறுதியும் இந்நோன்பின் அடிப்படைகளாக அமைகின்றன.

விடியற்காலை எழுந்து தூய்மையான ஆற்றுநீரில் சென்று நீராடுவது உடல் நலத்துக்கு மிகவும் நன்மையப்பதாகும். காலை எழுந்து தூய காற்றை சுவாசிப்பதால் உடல் நலமும் உள நலமும் உண்டாகின்றன. மேலும் காலைப்பொழுதில் சென்று நீராடுவது புத்துணர்ச்சியையும் சுறுசுறுப்பையும் ஏற்படுத்தி நாள் முழுவதும் நன்கு செயல்படச்செய்கின்றது. குழுவாகச் சென்று நீராடி வருவதால் ஒற்றுமை உணர்வும் ஏற்படக்காணலாம். அகநானூற்றில் தான் விரும்பிய கணவனைப்பெறவேண்டிப் பாவைக்குப்பலி கொடுத்து வணங்கி வழிபடுவதாகிய நோன்பைக் காணலாம்.[90] இந்நோக்கத்துடன் மகளிர் பிறர் மனைக்குச் சென்று பாடிப்பெற்றத்தை பலர்க்களித்து நோன்பிருந்ததை கலித்தொகை காட்டும்.[91] இந்நோன்பு இக்காலத்திலும் செட்டிநாட்டுப் பெண்களிடத்தில் காணப்படுவதாகத் தமிழண்ணல் குறிப்பிடுவார்.[92]

மகளிர் சிறுமுத்தனைப் பேணுதலாகிய மற்றொருநோன்பும் கலித்தொகையில் குறிப்பிடப்படுகிறது.[93] இச்செயலும் ஐயமேற்றலாகிய நோன்பினைப் போலவே பயன்கருதி செய்யப்படுவதாக கூறப்படுவதும் தைநீராடலுடனும் இணைத்துக் கூறப்படுவதும் இதனை நோன்பாகக் கொள்வதற்குரிய சான்றுகளாக அமைகின்றன. இந்நிகழ்ச்சியில் மகளிர் சிறு ஆண்பாவையை பேணி வளர்த்து சிறு சோறிட்டு பிறமகளிரோடு மகிழ்வதாகக் கூறப்படுகிறது. மகளிர் ஆண், பெண் பாவைகளை மணழ்

---

89. பரிபாடல், பா. 10

90. அகநானூறு, பா. 282.

91. நச்சினார்க்கினியர் (உரை), கலித்தொகை, பா. 59.

92. தமிழண்ணல், பிறைதொழும் பெண்கள், (மதுரை, 1975), ப. 38.

93. நச்சினார்க்கினியர் (உரை), கலித்தொகை, பா. 59,

செய்து விருந்தோம்பி மகிழும் நோன்பு என்றும் இதனைக்கூறுவர்.[94] பழந்தமிழர் சமுதாயத்தில் ஈன்று புறந்தருதல் என் தலைக்கடனே என்ற நோக்கமுடையவர்களாய் மகளிர் இருந்தனர். சிறுமியர் இந்நோன்பின் மூலம் சமுதாயத்தில் தாங்களும் பங்கேற்கத் தங்களைத் தயார்ப்படுத்திக்கொள்ள வழிஅமைப்பதைக் காணலாம்.

நல்ல கணவனை மணம் பெறவேண்டி பிறை தொழுதலை மகளிர் மேற்கொண்டிருந்தனர். சங்க இலக்கியங்களிலும் கோவை நூல்களிலும் இதனைக்காணலாம். ஒள்ளிழை மகளிர் வானில் உயர்ந்து காணும் பிறையை மாலைப்பொழுதில் தொழுவர் என்று அகநானூறு கூறுகிறது.[95] பிறையைப் பலர் தொழுவதைக் குறுந்தொகையும்[96] மதுரைக் காஞ்சியும்[97] காட்டுகின்றன. சீவகசிந்தாமணியும் பிறை தொழலைக்கூறுகிறது.[98] இந்த நோன்புகள் மணம் வேண்டியும் சிறந்த கணவரைப் பெறுதல் வேண்டியும் செய்யப்படுவனவாம்.

இவ்வாறு நல்ல, விரும்பிய கணவனை வேண்டி மேற்கொள்ளப்படும் நோன்புகள் மகளிர் தாங்களும் சமுதாயத்திலும் இரண்டறக்கலந்து ஒரு சிறந்த பங்கினை ஆற்றவேண்டும், என்ற எண்ணத்தை ஊக்குவிக்கின்றன. இவ்வகையில் மற்றொரு குறிப்பிடத்தக்க இடத்தைப்பெறுவது காமன் நோன்பாகும். பெருங்கதை, சீவகசிந்தாமணி, நாச்சியார் திருமொழி போன்றவற்றில் காமன் நோன்பு பற்றிய குறிப்பைக் காணலாம்.

ஏழு நாட்கள், இந்நோன்பு நோற்கப்பட்டது. ஏழுநாட்களும் மணம் வேண்டி அரச மகளிர் மறையோர்க்கும் முதியோர்க்கும் வேண்டிய பொருட்களை வழங்கினர். இறுதிநாளில் மரபறிந்த மகளிர் காமவேளைப் பாடிப்பழகி அந்நோன்பை முடிப்பர். ஏழுநாட்களும் கன்னியர் உண்ணாதிருக்கும் பழக்கம் காணப்பட்டது. மேலும் பொழிலில் சென்று விளையாடுதல் கூடாது, என்று மறுக்கப்பட்டுவந்தது. இது பெருங்கதை கூறும் காமன்நோன்பாகும்.[99]

---

94. கலித்தொகை. பா. 59 இன் உரை.

95. அகநானூறு, பா. 239.

96. பொ.வே.சோ., (உரை) குறுந்தொகை, பா. 307.

97. மதுரைக்காஞ்சி, அடி 193.

98. உ.வே.சா. (பதிப்பு), சீவகசிந்தாமணி, பா. 538.

99. பொ.வே.சோ. (உரை) பெருங்கதை, பகுதி 2, காண்டம் 3, 6 : 140.

சீவகசிந்தாமணி சுரமஞ்சரி காமக்கோட்டம்சென்று தனக்கு சீவகனைத்தருமாறு இறைவனை வேண்டி மகரக்கொடியும் அம்பும் கரும்பும் தேரும் ஊரோடு தருவதாக வேண்டிக் கொண்டு அதன்படியே விழாமேற்கொண்டு அவற்றைக் கோயிலுக்குச் சென்று அளிப்பதாகக்கூறும்.[100] ஆண்டாளின் நாச்சியார் திருமொழியில் காமன்நோன்பு தை முதல் பங்குனித் திங்கள் வரை நோற்கப்படுவதாய்க் கூறப்படுகிறது.[101] கண்ணனைப் பெறவேண்டிய ஆண்டாள் இந்நோன்பு நோற்பதைக் காணலாம். தை, மாசி, பங்குனி ஆகிய மூன்று திங்களும் வெவ்வேறு செயல்களால் இந்நோன்பு மேற்கொள்ளப்படுகிறது. மகளிர் தைத்திங்கள் முழுவதும் தரையை நன்கு சுத்தம்செய்து தாம் செய்யவிருக்கும் நோன்புக்குத் தம்மைத் தயார்ப்படுத்திக் கொள்கின்றனர். மாசித் திங்களில் மணலால் தெருவில் கோலமிட்டு நாட் காலையில் நீர்த்துறையில் சென்று நீராடி முள்ளில்லாச் சுள்ளியெடுத்து எரிமடுத்தும், காமனைத்தொழுதும் நோற்றதாகக் கூறுகின்றாள். மேலும் கரும்பும் அவலும் அமைத்து மறையவர் வாய்மொழிகூறி நோன்பிருப்பதாகக் கூறுகின்றாள்.

பாவை நோன்பு திருப்பாவை, திருவெம்பாவை கூறும் மகளிர்க்குரிய மற்றொருநோன்பாகும். காலை நீராடல் நோன்புச் செயல்களுள் ஒன்றாகத் திருவெம்பாவை கூறும். திருப்பாவையில், இதனோடு நெய், பால், உண்ணாதிருத்தல், மையிடாமல், மலரிடாமல் இருத்தல், தீயனவற்றைச் சொல்லாமலும், செய்யாமலும் இருத்தல், இல்லோர்க்கும் ஐயமிடுதல், மலர்தூவி இறைவனை வழிபடுதல் ஆகியன குறிக்கப்படுகின்றன.

இந்த நோன்புகள் மனத்தில் ஒரே குறிக்கோளுடன் இன்ன செயல்கள் செய்யவேண்டும் என்ற கட்டுப்பாடுடனும் பொறுமையுடனும் செய்யப்படுவதைக் காணலாம். இவை சமுதாயத்தில் நல்ல குறிக்கோளுடன் வாழவேண்டும் என்ற எண்ணத்தையும் கட்டுப்பாடு பொறுமை இவற்றோடு இருத்தலாகிய ஒரு நிலையையும் பயிற்றுவிப்பதைக்காணலாம்.

இந்த நோன்புகளில் உண்ணாமை கைக்கொள்ளப்படுகிறது. உண்ணாமையினால் உடல் தூய்மையடைவதோடு, உள்ளமும் தூய்மையடைந்து அதன்மூலம் சமுதாயத்திலும் அமைதியும் இன்பமும் நிலவ வழி வகுப்பதைக் காணலாம்.

---

100. உ.வே.சா. (பதிப்பு), சீவகசிந்தாமணி, பா. 2057.

101. ஆண்டாள், நாச்சியார் திருமொழி, பகுதி -1, பா-ள் : 1, 6.

சிலம்புகழி நோன்பு சங்க இலக்கியங்களில் கூறப்படுவதாகும். சிலம்பு கழி நோன்பு பெண்ணின் பெற்றோர் தந்த காற்சிலம்பை மணமகன் நீக்கி வேறொரு சிலம்பை அணிவிப்பது என்று கூறலாம். தனித்துத் திரிந்து கொண்டிருந்த நிலைமாறி சமுதாய வாழ்வோடு இணையத் தன்னைத் தயார்ப்படுத்துவதான நிலையை இந்நோன்பு ஏற்படுத்துகிறது. பெருங்கதை சதுர்த்தி நோன்பு என்றொரு நோன்பைக் குறிப்பிடுகிறது.[102] மணவினை முடிந்தபின் நான்கு நாட்கள் அவாவினை எதிர்த்தடக்குவதாகிய சதுர்த்தி நோன்பினை மணமகளும், மணமகனும் மேற்கொள்வர். பின்னர் வேண்டிய சடங்குகள் நடைபெறும் என்று இந்நோன்பு குறிப்பிடப்படுகின்றது.

சமணசமய நோன்பான சக்கரவாளநோன்பினை சுயம்பிரபை மேற்கொண்டதைச் சூளாமணி காட்டும்.[103] இந்நோன்பு கொள்ளும் முறைகளை 'பங்குனித் திங்களின் உத்தர நாளுக்கு முந்தின நாள் ஜிநாலயத்திற்குச்சென்று கடவுளையும் ஆகமத்தையும் வணங்கி, ஆசாரியரைப்போற்றி வேண்டிய நோன்பு பெறுதல் வேண்டும். உத்தரநாளில் உண்பன, தின்பன, பருகுபவை, நக்குவனவாகிய எல்லா உணவு வகைகளையும் நீக்கி நோன்பிருத்தல் வேண்டும் அந்தத்திங்களில் இந்த நோன்பிற்கு பஞ்சகல்யாணம் என்று பெயர். இந்த ஒரு நாள் நோன்பைக் கடைப்பிடித்தலால் எண்ணாயிரம் நோன்பின் பயனுண்டாகும் என்று கூறுவர் உரையாசிரியர். நோன்புச் செயலால் சுயம்பிரபை ஒப்பற்ற இயற்கையழகை அமைந்தாள் என்றும் மனத்திட்பமாகிய பெருமையால் அவ்வரிய நோன்புகள், அவள் முடிவு செய்துகொண்டபடி சிறப்பாக நடந்தேறின என்றும், நோன்பாற்றலால் சிறப்பான உடலொளி பெற்றுத் திகழ்ந்தாள் என்றும் சூளாமணி கூறுகிறது.

கணவனுக்கு நன்மை வேண்டியவை : மீன்வேட்டமாடிச் சென்ற தலைவன் நலமுடன் திரும்பிவர வேண்டி கடல்தெய்வத்தைக் கைகுவித்துத்தொழுது, பலியிட்டு வழிபடுவதான நிலையை நற்றிணை கூறுகிறது.[104]

காமக்கோட்டம் தொழுதலாய நோன்பைப்பற்றிய குறிப்பைச் சிலம்பு கூறுகிறது. சோமகுண்டம் சூரியகுண்டம் துறைமூழ்கிக் காமவேள் கோட்டம் சென்று தொழுதாராயின் கணவரோடு இம்மையிலும், மறுமையிலும் உடனுறைந்து மகிழ்வர் என்று தேவந்தி கண்ணகியிடம் கூறுவதில் இந்நோன்பு பற்றிய குறிப்பைக் காணலாம்.[105]

---

102. பொ.வே.சோ (உரை) பெருங்கதை, பகுதி-1, காண்டம்-2, 3 : 130-33.

103. சூளாமணி, பா. 205.

104. அ நாராயணசாமி ஐயர் (உரை), நற்றிணை, பா. 358.

105. உ.வேசா. (பதிப்பு), சிலப்பதிகாரம், காதை 9 அடி, 54-63.

மகனுக்கு நன்மை வேண்டித் தாய் நோன்பிருந்ததைக் கம்பராமாயணம் காட்டுகிறது. கௌசல்யை இராமபிரானுக்கு மங்கலம் மேன்மேலும் உண்டாதற்பொருட்டுத் தம் குலதெய்வமான அரங்கநாதரை வழிபட்டு நோன்பிருந்தமை கூறப்படுகிறது.[106]

கோசலை அரங்கநாதன் எழுந்தருளியுள்ள கோயில் அடைந்தாள். பின் விதிப்படி பூசை செய்து, நல்ல தவமுடையவர்க்கெலாம் ஆவினைகன்றோடு கொடையாக அளித்தாள். மேலும் பலவற்றைத்தானம் செய்து வலம் வந்து அரண்மனை அடைந்து பழமையான நோன்புகள் யாவற்றையும் செய்யத்தொடங்கினாள்.

பொதுமக்களுக்காகக் கொண்ட நோன்பு: பெருங்கதை இதனைக் காட்டுகிறது. உஞ்சை நகரில் நீரணி விழா நடைபெற்ற நாளில், இந்நோன்பைப் பெண்ணொருத்தி மேற்கொண்டதாகப் பெருங்கதை கூறுகிறது.[107] ஒருபெண், நீரில் மூழ்கி, ஆவிரை மலர், அறுகம்புல் தலையில் செருகி, நீராடி, தூயபட்டாடை அணிந்து கள்ளுணவைத் துறந்து பட்டினி இருந்து விரதவேடமொடிருந்து எதிரேயுள்ள நீரில் ஆடுவார்க்கெல்லாம் இன்பம் உண்டாக என்று வேண்டி புனற்றுறையின் பொங்கிய மடைச்சோற்றைக் கடவுட்பலியாக விட்டுச்சென்றாள். இந்த நோன்பு சமுதாயத்தில் அனைவர்க்கும் நன்மை நிகழ்க என்று வேண்டி எடுக்கப்படுவதால் பரந்துபட்ட உள்ளத்தைக் காட்டுகிறது.

பொதுவாக இவ்வாறான நோன்புகள் மனதை அடக்கியாளுந் திறன், கட்டுப்பாடு, ஒருமைப்பாடு, காலத்தில் கருத்துடைமை, பிறருக்கு உதவிசெய்வதில் ஆர்வம், ஒழுங்காகச் செய்வதில் ஆர்வம் போன்ற சமூக இயல்பினளாக வாழச்செய்யும் தகுதிப்பாடுகளாகும்.

விளையாட்டு உடல்நலனுக்குப் பெருமதிப்பளித்து அதனோடு உளநலனையும் ஏற்படுத்தி சமுதாயத்தின் ஓர் அங்கத்தினளாக வாழும் பயிற்சியை அளிக்கிறது. நோன்பு உள நலனை மையமாய்க்கொண்டு, அதனோடு உடல் நலனையும் ஏற்படுத்தி சமூக இயல்பினளாக வாழச் செய்கிறது. இதனால் இவையிரண்டும் சமுதாயமாகுதலில் முக்கியத்துவம் பெறுகின்றன.

---

106. வைமுகோ (உரை) 'அயோத்தியா காண்டம்', கம்பராமாயணம், முதற்பகுதி (சென்னை, 1972), பா. 93.

107. பொ.வே.சோ., (உரை) பெருங்கதை, பகுதி-1, காண்டம் 1, காதை 40, அடி 265-276.

பயன்பட்ட நூல்கள்

1. கல்பகம், இரா, *1973*, சமூகவியல், சென்னை, தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்
2. சந்தானம், எஸ்., *1961*, கல்வி உளவியலும் கல்விச் சமூகவியலும், சென்னை, பழனியப்பா பிரதர்ஸ்.
3. பரமேஸ். செரா., *1973*, சமூக உளவியல், சென்னை, தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்
4. Gisbert, P. 1978. Fundamentals of Sociology, Bombay, Orient Longmans.
5. Goode, J. William, 1979, Principles of Sociology, New Delhi, Tata McGraw Hill Publishing Company Limited.

இடைக்காலத்தில் தமிழ்ப் பெண்டிர் நிலை

லீ. ரூத்ஜாய்

வாழும் நாட்டைத் தாய்நாடு என்றும், பேசும் மொழியைத் தாய்மொழி என்றும், கற்கும் கல்வியைக் கலைமகள் என்றும், தேடும் பொருளைத் திருமகள் என்றும், பூமியைப் புவிமகள் என்றும், வீரத்தைக் கொற்றவை என்றும், இயற்கையை அன்னை என்றும் போற்றிப் பரவுவது நம் நாடு. இந்நாட்டில் பெண்ணடிமைத்தனம் காலங்காலமாகத் தொடர்ந்து வருகிறது. வேத காலத்தில் பெண்கள் உரிமைபெற்று விளங்கினர் என்றும், பொற்காலமாம் சங்க காலத்தில் தமிழ்ப் பெண்கள் உரிமையுடன் திகழ்ந்தனர் என்றும் கூறிக்கொண்டாலும் எக்காலத்தும் ஆணுக்குப் பெண் நிகராக நடத்தப்பட்டதே இல்லை. இக்கட்டுரை இடைக்காலத்துப் பல்லவர் காலம் முதல் நாயக்கர் காலம் வரை *(கி.பி. 600 முதல் 1675 வரை)* பெண்களின் நிலைபற்றிக் காண்கிறது. இதனை அக்காலத்து வழக்கிலிருந்த பழக்கவழக்கங்கள், உரிமைநிலை ஆகியவை எடுத்துக் காட்டுகின்றன.

பழக்க வழக்கங்கள்

இடைக்காலத்தில் வழக்கிலிருந்த பழக்கவழக்கங்களான உடன்கட்டை ஏறுதல், உடன் பள்ளி கொள்ளுதல், கைம்மை நோன்பு நோற்றல், தளிச்சேரிப்பெண்டிர் அமைப்பு, அடிமை நிலையாவும் பெண்களை அடிமைப்படுத்துவதற்கென்றே ஏற்பட்டதெனலாம். இவற்றில் கணவன் இறந்ததும் மேற்கொள்கின்ற பழக்கங்களான உடன்கட்டை ஏறுதல், உடன் பள்ளி கொள்ளுதல், கைம்மை நோன்பு நோற்றல் ஆகிய கொடிய பழக்கவழக்கங்கள் பெண்டிரை விலங்கினும் கீழாக்கி, உயிர்ப் பொருளாகக்கூட நினைத்ததாக எண்ணுவதற்கில்லை.

உடன்கட்டை ஏறுதல்

இதனைச் 'சதி' என்று குறிப்பிடுவர். கணவன் இறப்புக்குப் பின்னர் வாழ்வே இல்லை என்ற முறையில் அமைந்துள்ளது தான் 'சதி' என்கிற உடன்கட்டை ஏறுகின்ற வழக்கம். எகிப்து நாட்டில் மன்னர்கள் இறந்த பின்பும் ஆவிக்குரிய வாழ்வைக் கொண்டிருந்தனர் என்னும் நம்பிக்கையின்படி அரசர்களின் மனைவியர், வேலையாட்கள் போன்றோரைக் கொன்று அவர்களையும் ஆவிகளாக்கி இறந்துபட்ட மன்னனுடைய ஆவிக்குரிய பணிவிடைகள் உலகில் நடந்ததுபோலத் தொடர்ந்திருக்கச் செய்தனர்.[1] இதேபோல் உடன்கட்டை ஏறுகின்ற மனைவியின் ஆவி கணவனுக்குரிய பணிகளைத் தொடர்ந்து ஆற்றும் என்பது உடன்கட்டை ஏறுகின்ற வழக்கத்தை ஆதரித்தவர்களின் மூடநம்பிக்கையாக

---

1. மா. பாலசுப்பிரமணியன், சோழர்களின் அரசியல் கலாச்சார வரலாறு *(பாகம்-II)*, ப. 270.

இருந்தது. விதவைகள் ஈமத்தீயில் வீழ்ந்து இறப்பதால் தெய்வீகப் பதவி கிடைப்பது உறுதி என்னும் நம்பிக்கையும் காணப்பட்டது.

தமிழரின் தொன்மை நூலான தொல்காப்பியம்[2] இதுபற்றிக் குறிப்பிடுகிறது. புறநானூறு, பூதப்பாண்டியன் மனைவி பெருங்கோப்பெண்டு உடன்கட்டை ஏறிய செய்தியைத் தருகிறது.[3] இடைக்காலத்திலொன்றான பல்லவர் காலத்தில் *(600-850)*, சதிமுறை வழக்கிலிருந்ததற்கான சான்றுகள் இல்லை. சோழர் காலத்தில் *(850-1350)* முதலாம் இராஜராஜனின் *(985-1014)* தாயார் வானவன் மாதேவி, தன் கணவனின் சிதையில் வீழ்ந்து தானும் இறக்கின்ற செய்தி கிடைக்கிறது.[4]

முதலாம் பராந்தகச் சோழனது காலத்தில் *(907-955)* குறுநில மன்னரான இளங்கோவன் இறந்தபொழுது, அவன் மனைவி உடன்கட்டை ஏறினாள். முதலாம் இராஜேந்திரன் *(1014-1044)* மனைவி வீரமாதேவி உடன்கட்டை ஏறியதைப் பிரமதேசக் கல்வெட்டுக் கூறுகிறது.[5]

இடைக்காலத்தின் பிற்பகுதியில் இவ்வழக்கம் சிறிது அதிகமாகக் காணப்பட்டது. திருமலை நாயக்கர் *(1623-1659)* இறந்தபொழுது இவருடையமனைவியர் இருநூறு பேர்களும் உடன்கட்டை ஏறினர். கிழவன் சேதுபதி இறந்தபோது அவனுடைய தேவியர் நாற்பத்தேழு பேரும் உடன்கட்டை ஏறினர். கிடைக்கின்ற செய்திகளைப் பார்க்கும் போது இது உயர்குலத்தவரால் மேற்கொள்ளப்பட்டது என்பதை உணரலாம். பிற்பட்ட மக்கள் உடன்கட்டை ஏறியதற்குச் சான்றுகளில்லை.

உடன் பள்ளி கொள்ளுதல்

இறந்த கணவரை எரிக்காமல் குழியில் புதைத்தால், பெண்டிரையும் குழியில் புதைக்கும் வழக்கம் 'உடன் பள்ளி கொள்ளல்' என்றழைக்கப்படுகிறது. இதனைச் 'சக கமனம்' என்று கூறுவர். இம்முறை தென்னிந்தியாவில் விஜயநகர ஆட்சியில் வழக்கிலிருந்தது. தமிழகத்தில் மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் *(1178-1218)* இத்தகையதொரு நிகழ்ச்சி நிகழ்ந்ததாகக் குறிப்புள்ளது. கூத்தாடும் தேவன் பிருதிவிகங்கன் இறந்தபோது அவனுடன் பாடுகின்ற சில பெண்களும் உடன் புதைக்கப் பெற்றனர்.[6] இறந்தவனுக்கும் அப்பெண்டிருக்குமிடையே இருந்த உறவு என்னவென்று தெரியாததால் இதனை உடன்கட்டை ஏறலுக்குச் சமமாகக்

---

2. தொல் : புற. இயல். *19*
3. புறம். *246*
4. மா. பாலசுப்பிரமணியன், மு. நூ. ப. *271.*
5. மே. நூ, ப. *272.*
6. நக. மங்கள முருகேசன், தமிழ்நாட்டுச் சமுதாயப் பண்பாட்டு வரலாறு, ப. *229.*

கருதிவிடலாகாது என்கிறார், நக. மங்கள முருகேசன்.[7] பிற்காலத்தில் தஞ்சை மராட்டியர் மன்னர் காலத்திலும் இது வழக்கில் இருந்திருக்கிறது.

உடன்கட்டை ஏறும் இக்கொடிய வழக்கம் வடநாட்டைப்போல் தமிழகத்தில் வற்புறுத்தப்பட்டதாகக் குறிப்புக்கள் இல்லை. சமய நம்பிக்கையோடு, கைம்மை, சக்களத்தியர் கொடுமையினின்றும் தப்பிக்க உடன்கட்டை ஏறியிருக்கலாம். பூதப்பாண்டியன் மனைவி பெருங்கோப்பெண்டு கைம்மை நோன்பைவிட உடன்கட்டை ஏறுவது மேலாகும் என்று கூறியே தீப்புகுந்தாள்.[8] மூன்றாம் குலோத்துங்கன் காலத்துத் தென்ஆர்க்காடு மாவட்ட எலவானாசூர்க்கோயில் கல்வெட்டு சக்களத்தியர் கொடுமைகளில் இருந்து விடுபடும் பொருட்டு உடன்கட்டை ஏற விரும்பிய ஒரு பெண்ணின் செய்தியினைத் தருகிறது. ஆயின் உடன்கட்டை ஏறும் பெண்கள் பாண்டியர் காலத்தில் உயர்வாகப் போற்றப்பட்டனர் என்று மார்க்கோபோலோ குறிப்பிடுகிறார்.[9] பிறர் போற்றுதலை மேற்கொள்ளவும் சிலர் உடன்கட்டை ஏறியிருக்கலாம். இது அநாகரீகமான, மனிதப்பண்புக்கு ஒவ்வாத செயல் என்பதை உணர்ந்த சென்னை ஆங்கில அரசாங்கத்தார் *1830*–ஆண்டு சட்டத்தின்படி இதனைத் தடை செய்தனர்.

கைம்மை அல்லது வைதவ்ய நோன்பு

கணவனுக்கு மட்டும் சிறப்பு வழங்குகின்ற இந்து சமய வாழ்வியல் ஒழுக்கத்தின்படி கணவன் இறந்தபிறகு அவனுடைய மனைவிக்கு ஆன்மீயத் தகுதி என்பது தனிப்பட்ட முறையில் வாய்ப்பதற்கில்லை. இறவாத அவனுடைய ஆன்மா எல்லா நலன்களும் பெற்றுச்சிறக்க அவனுடையமனைவி வைதவ்ய நோன்பு நோற்றாக வேண்டும். இதன்படி அவள் விதவையாக வாழ வேண்டும் என்ற ஆன்மீயக் கட்டுப்பாடு தோன்றிவிட்டது.[10] கைம்மை நோன்பு நோற்பவர் மறுபிறவியில் ஒன்றாவர் என்னும் நம்பிக்கையும் இருந்தது. இவர்கள் நகையணியவோ, பொட்டுப் போடவோ கூடாது. வெள்ளாடை அணிய வேண்டும். சுவையான உணவினைத் துறத்தல் வேண்டும். விளையாட்டு, கேளிக்கை கூடாது. தலையை மழித்துக்கொள்ள வேண்டும் என்னும் கட்டுப்பாடுகள் வழக்கில் இருந்தன.

கணவனுடன் உயிர் துறக்காத பெண்கள் கைம்மை நோன்பு நோற்றனர். வானவன் மாதேவி காலத்தைச் சேர்ந்த செம்பியன்மாதேவி உடன்கட்டை ஏறாது கைம்மை மேற்கொண்டாள். கம்பராமாயணத்தில் கம்பர், வால்மீகியினின்றும் மாறுபட்டு வாலியின் மனைவி தாரையை கைம்மை

---

7. மே. நூ.

8. புறம். *246*

9. ஏ. சுவாமிநாதன், தமிழர் பண்பாடு, ப. *280*.

10. மா. பாலசுப்பிரமணியன், மு. நூ. ப. *270*.

நோன்பு மேற்கொள்ள வைக்கிறார்.[11] குரக்கினமான தாரையும் கைம்மைக்கோலம் பூண்டதிலிருந்து இடைக்காலத்தில் கைம்மை நோன்பு பெரும்பாலும் அனைவராலும் மேற்கொள்ளப்பட்டதொன்று என்பதை உணரலாம்.

நிச்சயதார்த்தம் முடிந்து மணமுடியவில்லையெனினும் கணவனாக வேண்டியவன் இறந்துபட்டால் காலமெல்லாம் விதவைதான். திலகவதியார் தமக்கென நிச்சயிக்கப்பட்ட கலிப்பகையார் இறந்ததும் உயிர்விடத் துணிந்து, பின்னர் தம் தம்பி திருநாவுக்கரசரின் பொருட்டு மணம் செய்து கொள்ளாமலே வாழ்ந்தவர். 'அப்பொன்மணி நூல் தாங்காதனைத்துயிர்க்கும் அருள் தாங்கி, இம்பர் மனைத்தவம் புகுந்து[12] என்னும் தொடர் இதனைக் காட்டும்.

கைம்மை மேற்கொள்ளுதல் இடைக்காலத்தில் மிகுதியாக இருந்ததால், 'இது இரக்கமிலா வன்கணாளர் இடைக்காலத்தில் விதித்த கொடுமை' என்கிறார்[13] திரு.வி.க. இந்து சமய நம்பிக்கையின் அடிப்படையில் தோன்றி இது வளர்ச்சியடைந்ததால் உயிருடன் கொலை செய்யும் இந்து சமயத்தைக் கொலை மதம்[14] என்றும் சாடினார்.

கணவன் இறந்ததும் உடனுயிர் துறக்கும் பழக்கங்கள், கைம்மை நோன்பு நோற்றல் ஆகியவை, தங்கள் வாழ்வினைக் கணவனுக்காக அர்ப்பணித்த நிலை. பக்தி நெறி மேலோங்கிய இடைக்காலத்தில் இறைவனுக்காக அர்ப்பணிக்கும் நிலையும் பெண்களுக்கே உரிமையாக்கப்பட்டது. இங்ஙனம் இடைக்காலத்தில் பெண்கள் அர்ப்பணிப்பு வாழ்க்கையே வாழ்ந்தனர். தங்களுக்காக வாழவில்லை. பிறருக்காகத் தங்கள் இன்பங்களைத் துறந்தனர். துறக்குமாறு ஆக்கப்பட்டனர். கோயில்களில், பணிகள் நிரந்தரமாக, சிறப்பாக நடைபெறும் பொருட்டு நியமிக்கப்பட்ட தளிச்சேரிப் பெண்டிர் அவல நிலை இதனை நன்கு புலப்படுத்தும்.

தளிச்சேரிப் பெண்டிர்

கோயில்களிலுள்ள குடியிருப்பில் வாழ்ந்தவரும், திருக்கோயில் பணிகளில் ஈடுபட்டவருமான பெண்டிர் தளிச்சேரிப் பெண்டிர் என்று அழைக்கப்பட்டனர். இவர்களுக்குத் தலைக்கோலிகள், பதியிலார், கோயிற்பினாக்கள், பரிக்கிரத்துப் பெண்டுகள், தேவரடியார், உருத்திரக் கணிகையர், தேவகணிகையர் போன்ற வேறு பல பெயர்களும் உண்டு.

---

11. கம்ப. இரா. கிட். பட. *52.*

12. திரு. நாயு. புரா. *32.*

13. திரு. வி. கலியாண சுந்தரனார், பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத் துணை, ப. *297.*

14. சரளா ராசகோபாலன், தமிழ்த் தென்றலும் பெண்மையும், ப. *136.*

முதல் இராஜராஜன் தஞ்சை பெரிய கோயிலைக் கட்டி, சோழ மண்டலத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து ஆடல் பாடல்களில் வல்ல நானூறு தேவரடியார்களைக் கொணர்ந்து தஞ்சைத் தளிச்சேரியில் குடியேற்றுவித்தான்.[15] இவர்களுக்குத் தனித்தனியாக வீடுகள் அமைத்துக் கொடுத்ததும் இராஜராஜன் காலத்தில்தான். பல்வேறு ஆலயங்களிலும் இத்தகையபெண்டிர் பணிபுரிந்து வந்தனர்.

இவர்கள் அன்றாட வழிபாட்டின் பொழுதும் விழக்காலங்களிலும் நடனமாடினார். இவர்கள் பணிக்காகவும், இவர்களைச் சிறப்பிக்கும் பொருட்டும் நிலங்களும் விருதுப் பெயர்களும் கொடுக்கப்பட்டன. நாயக்கர் காலத்தில் உமையம்மை என்ற தேவரடியாள் நிலம், வீடு ஆகியவற்றோடு 'நாலுதிக்கும் வென்ற மாணிக்கம்' என்ற விருதுப் பெயரையும் பெற்றாள்.[16] பாண்டியர் தலைக்கோல் பட்டமும் வழங்கினர்.[17]

சோழர் காலத் *(கிபி. 900-1300)* தேவரடியார்களில் பலர் கலையார்வ வாழ்வின் பெருமிதத்தில் தங்கள் வாழ்வைப் பிணைத்துக் கொண்டவர்கள். இவர்கள் பொதுமகளிரோ, விலைமகளிரோ இல்லை. சமுதாயத்தில் இழிந்தவராகவும் கருதப்படவில்லை. இவர்களில் மணம் செய்து கொண்டவர்களும் உண்டு.[18] மணம் செய்து கொள்ளாத தேவரடியார் 'பதியிலார்' என்று அழைக்கப்பட்டனர். பெரிய புராணத்தில் வரும் சுந்தரரின் மனைவி பரவையார், இப்பதியிலார் குலத்தைச் சார்ந்தவராவர்.

பொட்டுக் கட்டல்

பிற்காலத்தில் இவர்களுக்குப் பொட்டுக்கட்டும் பழக்கம் ஏற்பட்டது. கோயிலுக்குரிய மூலவரின் மனைவியர் என்னும் பொருளில் தாலிகளை அணிந்து கொண்டனர். இக்குலத்தைச் சேர்ந்த மீனாட்சி என்பவர், நவசக்தியில் எழுதும் பொழுது, 'இறைவன் முன்னிலையில் எடுத்துக்கொள்ளும் வாக்குப் பிரமாணமே பொட்டுக்கட்டுதல் ஆகும். அதன்படி அவள் பரிசுத்தமாய் கன்னியாய், கட்டுப்பாடுடன் கற்பு நெறி தவறாமலும், நேர்மையாகவும் வாழ்நாள் பூராவும் இருக்க வேண்டும்' என்று குறிப்பிடுகிறார்.[19] இராமாமிர்தம் அம்மையார், இவர்கள் மரணகாலம் வரை ஞானிகளாகவும் இருந்தார்கள் என்று கூறுகிறார்.[20] இவற்றிலிருந்து கோயிற் பெண்டிர் அல்லது பதியிலாரின் தூய்மை நிலை விளங்குகிறது.

15. மா. சுப்பிரமணியன், மு.நூ.ப. *264*.

16. ந.க. மங்கள முருகேசன், தமிழ்நாட்டு வரலாறும், பண்பாடும், ப. *20*.

17. ஏ. சுவாமிநாதன், மு.நூ. ப *304*.

18. மா. சுப்பிரமணியன், மு.நூ. ப. *266*.

19. சரளா ராசகோபாலன், மு.நூ., ப *163*.

20. மே. நூ. ப *162*.

ஒழுக்கக்கேடு

இவ்வுலகில் வாழ முடியாத இறைவனைப் பதியாகக் கொண்டு பொட்டுக் கட்டி வாழ்ந்த இவர்கள், பின்னர் சில கயவர்களால் இழிநிலைக்குத் தள்ளப்பட்டனர். இதனால் தேவதாசிகளைத் தோற்றுவிக்கும் நிறுவனமாகக் கோயில்கள் மாற்றப்பட்டன. இராஜராஜன் கோயில்களுக்குச் சிறப்பளித்ததோடு கோயில் தாசிகளையும் உருவாக்கினான் என்று ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.[21] கோயில் காப்பாளர்களும், பூசாரிகளும், பண்ணையார்களும், இறைவனைத் தரிசித்து வந்த பக்தர்களும், நாட்டின் பெருமக்களும் இப்பெண்களை அவரவர்களின் செல்வாக்கிற்கேற்ப காமக்கிழத்தியராக்கிக் கொண்டனர். இதனால் பெற்ற வருவாயை இவர்கள் கோயில் பூசாரிகளிடம் அளித்தனர் என்றும் அப்பொருள் கோயிலுக்குரிய நற்காரியங்களுக்குப் பயன்படுத்தப்பட்டது என்றும் அபுசயித் என்ற முகமதிய வரலாற்றாசிரியன் குறித்துச் செல்கிறான்.[22] இதனால் கோயில்களைக் காந்தியடிகள் 'வேசையர் விடுதி' என்று குறை கூறினார்.[23]

இவ்விழிநிலை நாயக்கர் காலத்தில் ஏற்பட்டது. நல்லதோர் வீணை நலம் கெடப் புழுதியில் எறியப்பட்டது இக்காலம் முதற்கொண்டுதான் என்று கூறுகின்றார், ஏ. சுவாமிநாதன்.[24] சைவதீட்டை பெற்றாலன்றி இறைவனை அடைய முடியாது என்னும் நம்பிக்கையில் முன்னோர் அழகில் சிறந்த சிறுமிகளைச் சிற்றின்ப உலகில் உழல விடாது ஐந்து வயதிலேயே சிவதீட்சை செய்வித்துக் கோயிற் பணிகளுக்கு விடுத்தனர்[25] என்ற மூவலூர் இராமாமிர்தம் அம்மையாரின் கூற்றிலிருந்து, சமயத்தின் பேரில் கட்டவிழ்த்து விட்ட மூட நம்பிக்கைகளில் தளிச்சேரிப் பெண்டிர் அமைப்பும் ஒன்று எனத் தெரியலாம்.

இவ்விழிநிலை மிக அண்மைக்காலம் வரையிலும் நீடித்தது. இக்கொடுமையை ஒழிக்கும் பொருட்டு முத்துலட்சுமி ரெட்டி, தேவதாசி ஒழிப்பு மசோதா கொண்டுவந்தபோது பலர் எதிர்த்தனர். பொட்டுக்கட்டும் வழக்கத்தை எதிர்க்கக்கூடாது. அது தேவதூஷணம் என்றனர். பெரும் எதிர்ப்பினிடையே இம்மசோதா 19-ம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் நிறைவேறியது.

அடிமைகள்

இடைக்காலத்தில் பெண்கள் ஆண்களின் பணிவிடைக்காரார்களாகவே கருதப்பட்டனர். இவ்வெண்ணத்தின் வெளிப்பாடே பெண்

21. சரளா ராசகோபாலன், மு. நூ., ப. 165.
22. மா. பாலசுப்பிரமணியன், மு. நூ, ப. 264.
23. சரளா ராசகோபாலன், மு. நூ. ப. 163.
24. ஏ. சுவாமிநாதன், மு. நூ, ப. 316.
25. சரளா ராசகோபாலன், மு. நூ, ப. 163.

அடிமைகள். அடிமை முறையும் சோழர் காலத்தில் இருந்தது. சா-ஜி-குஆ. (Chau-Ju-Kua) என்ற சீன எழுத்தாளர், சோழ மன்னனும் அமைச்சர்களும் உணவருந்த மேசைக்கு வரும்பொழுது கட்டியங்கூறவும், நடனமாடவும், உணவு படைக்கவும் மூவாயிரம் நடன மாதர்களைச் சோழ மன்னர்கள் ஈடுபடுத்தியிருந்தனர் என்று கூறுகிறார்.[26]

அரண்மனையில் மட்டுமின்றி, குறுநில மன்னர்கள், சோழ அரசாங்க அதிகாரிகள், செல்வந்தர் ஆகியோரிடமும் கோயில்கள், மடங்களிலும் இவர்கள் பணிபுரிந்திருக்கின்றனர். வறுமையின் காரணமாகவும், பக்தி மேம்பாட்டினாலும் இவர்கள் தங்களைக் கோயில்களிலும், மடங்களிலும் விலைப்படுத்தியிருக்கின்றனர். விலைப்படுத்தவும்பட்டனர். இது நாயக்கர் காலத்திலும் நிகழ்ந்தது.

கொத்தடிமை முறை

கொத்தடிமை முறை சோழர் காலத்தில் இருந்திருக்கிறது. வயலூர் கிழவன் திருவேகம்பன் திருவொற்றியூர்க் கோயிலுக்கு ஐந்து பெண்களை நெல் புடைப்பதற்குத் தானமாக வழங்கி இருந்தான். அந்தப்பெண்களும் அவர்களுடைய பரம்பரை வழித்தோன்றல்களும் கோயிலுக்குத் தானமாகக் கொடுக்கப்பட்டனர்.[27] திருமறைக்காட்டுக் கோயில் கல்வெட்டும் இத்தகையதொரு செய்தியைத் தருகிறது. இவர்கள் விரும்பியபடி வேறிடம் செல்ல இயலாது. கோயில்களில் சாகும் வரையிலும் பிணைக்கப்பட்டுப் போயினர்.

உரிமை நிலை

உரிமை, உயிர்களுக்குக் கடவுளால் அளிக்கப்பட்ட ஒரு பெரும் இயற்கைக் கொடை என்கிறார் அறிஞர் பிராட்லே.[28] இடைக்காலத்துப் பெண்டிர் உரிமை நிலையினை அவர் தம் திருமணம், கல்வி, சொத்துரிமை ஆகியவற்றின் வாயிலாக அறியலாம்.

திருமணமும், சீதனமும்

பெண்களுக்குச் சங்க காலத்தில் தங்கள் துணைவரைத் தாங்களே தேர்ந்தெடுக்கும் உரிமை இருந்தது. இவ்வுரிமையும் இடைக்காலத்தில் புறக்கணிக்கப்பட்டது. இடைக்காலத்தில் பெற்றோர்களால் நிச்சயிக்கப்பட்ட திருமணங்களே பெரும்பாலும் நடைமுறையில் இருந்தன. இதனால் சாதித் திருமணங்களே நடைபெற்றன. நாயக்கர் காலத்தில் கன்னியாதான முறையே

---

26. மா. சுப்பிரமணியன், மு.நூ, ப. 263.

27. நக. மங்கள முருகேசன், மு.நூ, ப. 228

28. சரளா ராசகோபாலன், மு. நூ, ப 96

பெரும்பாலும் வழக்கிலிருந்தது. குறிப்பாகப் பார்ப்பனரிடையே இது பெரு வழக்கிலிருந்தது.

திருமணத்தின்போது சீதனம் கொடுக்கும் முறையும் இடைக்காலத்தில் வழக்கிலிருந்தது. பாண்டியர் காலத்தில் சீதனம் வழங்கப்பட்டது. பாண்டியர் சமுதாயத்தில் திருமணச் செலவைப் பெண் வீட்டாரே ஏற்கும் வழக்கம் இருந்தது. சோழர் காலத்தில் வரதட்சணையும் சீதனமும் கொடுக்கப்பட்டன. அது நிலமாகவும், பணமாகவும் அளிக்கப்பட்டது.

நாயக்கர் காலத்தில் ஒரே ஊரில் வாழும் மணமகன், மணமகள் குடும்பத்தினர் சீதனமாக நிலங்களைப் பெற்றுக்கொண்டனர். வேற்றூரில் வாழும் மணமகன் குடும்பத்தினருக்கு நிலம் சீதனமாகக் கொடுப்பதை மக்கள் எதிர்த்தனர். எனவே சீதன முறையானது விரும்பத்தகாத முறையாக நாயக்கர் காலத்தில் கருதப்பட்டது எனக் கொள்ளலாம்.

குழந்தை மணம்

குழந்தைகளை மிக இளமையிலேயே மணமுடித்துவைத்தல் இடைக்காலத்தில் வழக்கிலிருந்தது. திருமணம் என்றால் என்ன என்றறியாத குழந்தைகளுக்கு அக்காலத்தில் வாழைப்பழத்தைக் கொடுத்துத் தாலி கட்டினர். அது அந்தணர்களிடையே கண்டிப்பாகப் பின்பற்றப்பட்டதொன்று எனத்தெரிகிறது. "ஓராண்டுக் குழந்தை! அதற்கு மணமென்ன தெரியும்? பச்சிளங் குழந்தைக்குப் பெண் ஆண் வேற்றுமையாதல் தெரியுமா"[29] என்னும் திரு.வி.க.வின் கூற்று ஓராண்டிலும் திருமணங்கள் நடைபெற்றதைக் காட்டுகின்றது. ஆறு அல்லது எட்டு வயதிற்கு மேல் பெற்றோர் தம் பெண் குழந்தைகளை வீட்டில் வைத்திருப்பதில்லை. அதற்கு முன்னரே மணம் செய்து வைப்பர். இது நாயக்கர் காலத்தில் தோன்றியதாகக் கருத இடனுள்ளது. பாண்டியர் காலத்தில் நல்ல கணவரையடைய பெண்கள் நோன்பு நோற்கும் வழக்கமும், சோழர் காலத்தில் பன்னிரண்டு ஆண்டிலேயே திருமணம் நிறைவேறியதாகக் காணப்படும் செய்தியும் இக்கருத்திற்கு அரண் செய்கின்றன. இது இருபதாம் நூற்றாண்டு வரையிலும் நீடித்ததால் *1929*-இல் குழந்தைகள் திருமணத் தடைச்சட்டம் கொண்டுவரப்பட்டது.

கணவன் இறந்தால் இக்குழந்தைகளும் கைம்மை மேற்கொள்ள வேண்டியதுதான். இதனால் விதவைகள் மிகுதியாகக் காணப்பட்டனர்.

பெண் கல்வி

இடைக்காலத்தில் பெண் கல்வி பெரிதும் புறக்கணிக்கப்பெற்றது. பாண்டியர் காலத்தில் பெண்கள் கல்வி கற்கத் தடையேதுமில்லை எனினும் அரசகுல மகளிரும், செல்வ மகளிரும் மட்டுமே கல்வி பயின்றனர்.

---

29. திரு. வி. கல்யாண சுந்தரனார், மு.நூ. ப. *297*.

இக்காலத்தில் பெண் கல்வியின் பெருமைக்கும் உயர்வுக்கும் சான்றாகக் காரைக்காலம்மையார், ஆண்டாள் போன்ற ஒரு சிலரே அமைகின்றனர். ஔவையார் என்னும் பெண்பாற் புலவரும் இடைக்காலத்தில் வாழ்ந்ததை அறிகிறோம். நாயன்மார்கள் காலத்திற்குப் பின்னர் பெண் கல்வி பெரிதும் அருகிவிட்டது. நாயக்கர் காலத்தில் பெண்கள் கல்வியறிவில் நாட்டம் கொள்ளாத நிலை காணப்பட்டது. இக்காலத்தில் காணப்பட்ட குழந்தை மணமும் கல்விக்குத் தடை விதித்திருக்கலாம். பெண்கல்வி மறுத்ததின் காரணத்தைக் கூறும் வேதநாயகம் பிள்ளை, கற்றால் பெண்மகள் கெடுவாள் என்றஞ்சி பெற்றவன் கல்வி கொடுக்கவில்லை[30] என்கிறார். திருவிக இது பெண்களை விலங்காக்கித் தங்கள் வழியில் ஆட்ட வேண்டுமென்று ஆண் மக்கள் கொண்ட தீய எண்ணமின்றி வேறு என்ன? என்று வினவுகிறார்.[31]

சொத்துரிமை

இடைக்காலத்தில் பெண்கள் சொத்துரிமை உடையவர்களாகத் திகழ்ந்தனர் என்பதனை அவர்கள் அளித்த தானத்தின் வாயிலாகத் தெரிந்து கொள்ளலாம்.

சோழப் பெருமானடிகள் பராந்தகனின் மகள் வீரமாதேவியார் திருவூறல் மாதேவர்க்கு விளக்கு எரிக்கப் பொன் அளித்திருக்கிறாள்.[32] இராஜராஜனின் தேவியர் ஆற்றிய கோயிற் பணிகளை, அவன் இருபத்தொன்பதாம் ஆண்டு கல்வெட்டொன்று கூறுகிறது.[33] குந்தவை, செம்பியன் மாதேவி இன்னும் பல அரச பெண்டிரும் இத்தகைய கோயிற் பணிகளையும், மருத்துவமனை கட்டுதல் போன்ற பொதுநலச் சேவைகளையும் மேற்கொள்ளக் கூடிய அளவில் சொத்துக்களைப் பெற்றிருந்தனர். சோழ அரசியரின் திருப்பணிகள் போன்று பாண்டிய பல்லவ அரசியரின் திருப்பணிகளும் போற்றத்தக்கவை.

அந்தணப் பெண்டிரும் தனிப்பட்ட நில உரிமையாளர்களாகவும் செல்வம் படைத்தவராகவும் விளங்கினர். திருவொற்றியூர்க் கோயிலுக்கு நிம்பளாதேவி என்ற அந்தணப்பெண் தானமளித்த செய்தியை அறிகிறோம்.[34] தேவரடியார்களும் கோயிலுக்குப் பலவகையிலும் தானம் வழங்கியுள்ளனர். சொத்துரிமை பெண்பாலார்க்கு அரசனளவில் ஒப்புக்கொள்ளப்பட்டதாக இருந்தது. இரண்டாம் இராஜராஜனின் தலைமை அமைச்சன் பெருமானம்பி

30. வேதநாயகம் பிள்ளை, நீதிநூல், 9 :2.

31. திரு. வி. கல்யாண சுந்தரனார், மு.நூ. ப. 45.

32. T.N. Subramanian, South Indian Temple Inscription, Vol.III, Part I, p. Ciii

33. வே. மகாதேவன், சிவபாதசேகரனின் தஞ்சைக்கல்வெட்டுகள், பக். 30-35.

34. நக. மங்கள முருகேசன், தமிழ்நாட்டுச் சமுதாய பண்பாட்டு வரலாறு, ப. 227.

இறந்துபட அவன் மக்களுக்குக் குறிப்பாக மனைவியர்க்கு நாற்பது வேலி நிலம் மன்னனால் உரிமையாக்கப்பட்டது.[35]

இச்சொத்துரிமை, அனைத்துப் பெண்களுக்கும் இருந்ததா என்பது கேள்விக்குரியது. அரசியர் பல கோயிற் பணிகளையும் அறப்பணிகளையும் மேற்கொண்டாலும், அரசாளும் உரிமை அவர்களுக்கு வழங்காமை சொத்துரிமையின் குறைபாட்டையே காட்டுகிறது. இங்கிலாந்து மகாராணி விக்டோரியா போன்றோ, முகமதிய ஆட்சிக்கால ராணி ரசியா போன்றோ, பெண் அரசிகள் தலைமை தாங்கித் தனிப்பட்ட உரிமையோடு நாட்டை ஆண்டதில்லை. சோழரில் மூன்றாம் இராஜராஜன் *(1218-1256)* மனைவி புவனமுழுதுடையாளும், நாயக்கர் காலத்தில் ராணி மங்கம்மாளும் ஆட்சி புரிந்திருக்கின்றனர். ஆயின் இவர்கள் அசாதாரண சூழ்நிலையில் இணை ஆட்சியும், பகராட்சியுமே மேற்கொண்டனர். தனியாட்சி தரப்படவில்லை. மேலும் சோழர் காலத்தில் ஒரு பெண்ணிற்குத் தன் தந்தை அளிக்கும் சீதனத்தையும் விற்பதற்குரிய உரிமைகூட வழங்கப்படவில்லை. தன் கணவனும் விரும்பினால் இருவரும் சேர்ந்தே விற்க முடியும்.[36] எனவே பெண்கள் வழங்கிய தானத்தினை வைத்தோ சில செய்திகளை வைத்தோ அனைவர்க்கும் சொத்துரிமை இருந்தது என்றோ, முழு அளவில் வழங்கப்பட்டது என்றோ கூறுவதற்கில்லை. பாண்டியர் காலத்தில் பொது வாழ்க்கையில் ஈடுபட்டோருக்கும் சமூகப்பணியில் ஈடுபட்டோருக்கும் சொத்துரிமை வழங்கப்பட்டது[37] என்னும் செய்தியும் ஈண்டு நினைக்கத்தக்கது.

பெண்மை போற்றல்

ஆரிய மயமான பின்பு பெண்கள் உரிமை நலனிழந்து பல்வேறு கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்டாலும் தமிழகத்தில் பெண்மை போற்றப்பட்டதற்குரிய சான்றுகளும் கிடைக்கின்றன. சோழர்கள் ஆரிய பண்பாட்டைச் சோழ நாட்டின் அரசியல் ஒழுகலாறு என்றளவில் ஆதரித்தாலும் தங்களுடைய மனைவியரை ஆதித்தமிழ்ப் பண்பாட்டின்படி உலக முழுதுடையாள் என்றே அழைத்தனர். பெண்மையையும், தாய்மையையும் போற்றினர்.

அரச மெய்க்கீர்த்திகள் செப்பேடுகள் போன்றவற்றில் அரசன் மாண்பினைக் கூறுமிடத்துப் பட்டத்துத் தேவியையும் சேர்த்துச் செல்லுகின்ற தன்மை வழக்கிலிருந்தது.[38] இறந்துபட்ட சோழ அரசனுக்குப் 'பள்ளிப்படை' என்ற சமாதிக் கோயில் எழுப்பும்போது இராஜராஜன் போன்ற மன்னனின்

---

35. மா. பாலசுப்பிரமணியன், மு.நூ. பாகம்-2, ப. 269

36. ஏ. சுவாமிநாதன், மு. நூ. ப. 189.

37. ந.க. மங்கள முருகேசன், தமிழ்நாட்டுச் சமுதாய பண்பாட்டு வரலாறு, ப. 181.

38. தமிழ் வரலாற்றுக் கழக வெளியீடு, மு.நூ, சுலோகம்-15

சிலைகளோடு, அவர் தம் பெண்டுகளின் சிலைகளும் வழிபாட்டுக்குரியதாகச் சோழ மக்களால் வரவேற்கப்பட்டன.

அரசர்குலப் பெண்டிர் மட்டுமின்றிச் சாதாரணப் பெண்டிரும் போற்றப்பட்டனர். வேலூர்பாளைய செப்பேடு மூன்றாம் நந்திவர்மனின் காலத்தில் வாழ்ந்த யக்ஞபட்டனின் தாயைச் சிறப்பிக்கிறது.[39] அரச அதிகாரிகள் சிறப்பான சேவைகளின் காரணமாகப் பட்டம் பெற்றபோது அவர் தம் மனைவியருக்கும் அச்சிறப்புச் சென்று அடைந்தது. 'மாராசி', 'அதிகாரிச்சி' என்றழைக்கப்பட்டனர்.[40] சமுதாயத்தில் துறவு மேற்கொண்டோரும் மதித்துப் போற்றப்பட்டனர். இவையாவும் தமிழகம் குறிப்பாகச் சோழர் காலச் சமுதாயம் பெண்மைக்கு அளித்த சிறப்பினையே விளக்குகின்றன.

பெண்களின் சாதனைகளும் பாரம்பரியமும்

இடைக்காலத்தில் பெண்டிர் சிலர் நிர்வாகத்திலும், போர்த்துறையிலும் வல்லவராகத் திகழ்ந்திருக்கின்றனர். மங்கையர்க்கரசியார், புனிதவதியார், திகவதியார் போன்றோர் அரிய சாதனைகள் ஆற்றியோராவர். கூன்பாண்டியன் மனைவி மங்கையர்க்கரசியார் ஞானசம்பந்தரின் உதவியால் தம் கணவனைச் சமணத்தினின்றும் சைவம் திருப்பினார். திலகவதியார் சமண சமயத்தில் 'தருமசேனர்' என்று பட்டம் பெற்றிருந்த தம்பி திருநாவுக்கரசரைச் சமணத்தினின்றும் சைவத்திற்கு மாற்றிய ஆற்றல் பெற்றவர். புனிதவதியார் தம் இறையாற்றலால், கணவரே மருட்சியுறுமாறு செய்தனர். இருப்பினும் தம் கணவன் விட்டகன்ற நிலையில் அவர் இறையாற்றல் தம் உடலை அழிப்பதற்கே பயன்பட்டது. கணவருக்காகத் தாங்கி நின்ற உடலைப் பேய்வடிவாக வேண்டிப் பெறுகின்றார். இது கணவனன்றி இவ்வுலகில் இன்பமில்லை என்னும் அக்காலப் பெண்டிரின் மனநிலையினையே காட்டுகின்றது. திலகவதியார் மணம் முடிக்காமையும் அக்காலக் கற்பு நெறியின் அடிச்சுவட்டையே காட்டுகிறது.

மங்கையர்க்கரசியாரோ அல்லது சோழர் காலத்து அறப்பணிகள் பல புரிந்த குந்தவை, செம்பியன்மாதேவி போன்றோரோ பல சாதனைகள் புரிந்தாலும் சமுதாயத்தில் ஆழமாக வேர்விட்டிருந்த பெண் அடிமைத்தனத்தை மூடநம்பிக்கையை எதிர்த்துக் குரல் கொடுக்க எவரும் முன்வரவில்லை. எனவே இடைக்காலத்தில் கல்வியிலும், அறிவிலும், ஆற்றலிலும், இறைநாட்டத்திலும் சில பெண்கள் சிறந்து விளங்கினாலும் அவர்களும் பாரம்பரிய எண்ணத்தை மீறவில்லை என்பதே புலனாகிறது. பெண்ணடிமைத் தனமே மேலோங்கி நின்றது.

---

39. மே. நூ. சுலோ-23.

40. மா. சுப்பிரமணியம், மு.நூ. ப. 268.

முடிவுரை

இடைக்காலப் பெண்களின் நிலைபற்றிக் கூறும் ஏ. சுவாமிநாதன், பல்லவர் சோழர் காலங்களில் பெண்கள் மிக உயர்ந்த நிலையில் இருந்தனர் என்கிறார்.[41] குழந்தை மணமும், கல்வி மறுப்பும் கொண்டு பெண்ணடிமைத்தனம் மேலோங்கிய நாயக்கர் காலத்தினும், பல்லவர், பாண்டியர் காலங்களில் சிலர் கல்வி அறிவு பெற்றிருந்தனர். சோழர் காலத்தில் சிலர் சொத்துரிமையையும் பெற்றுத் திகழ்ந்தனர். எனினும் பெண்களை உயிரில் பொருளாகவும், போகப் பொருளாகவும், அடிமைப்பொருளாகவும் எண்ணிச் செயல்பட்ட நிகழ்ச்சிகள் இடைக்காலத்தில் எல்லாக் காலங்களிலும் நிகழ்ந்திருக்கின்றன. இக்கொடுமைகளை இயற்கைக்கு மாறானவை என்று சமுதாயம் எண்ணாதது மட்டுமல்ல, பெண்களும் உணரவில்லை. சமயத்தின் சார்பாலும் மூடநம்பிக்கையாலும், கல்வி அறிவின்மையாலும், பாரம்பரிய எண்ணங்களாலும் பெண்களை அடிமைப்படுத்துவதற்கென்றே புனைந்துரைக்கப்பட்ட இலக்கியங்களாலும் பெண்கள் அடிமையாக்கப்பட்டனர். இதனால் காமுகனாய், பாதகனாய் இருந்தாலும் கணவனே கண்கண்ட தெய்வம் என்று வழிபடுபவளே தர்மபத்தினி என்பதை அப்படியே பின்பற்றினர். கடமை வழுவாத மகள், பணிவுடைய மனைவி, அன்புடைய தாய் என்ற நிலையினையே பெரிதெனப் போற்றிச்செயல்பட்டிருக்கின்றனர். இதனை நோக்கும்போது, நேற்றைய பெண் மகிழ்ச்சியான மனைவி, கடந்த காலத்தில் குருட்டுத்தனமாக ஒளியில் நடந்தாள்[42] என்று கீழைநாட்டுக் கவிஞன் கலில் கிப்ரான் கூறுவது நினைவில் எழாமல் இல்லை.

41. ஏ. சுவாமிநாதன், மு.நூ. பக். 113, 189.

42. Translated by Anthony R. Ferris, Kahlil Gibran, pp. 83-84.

The woman of yesterday was a happy wife, but the woman of to-day is a miserable mistress. In the past she walked blindly in the light, but now she walks openeyed in the dark.

அடிமையும் கொத்தடிமையும்

புரிசை. ச. நடராசன்

"அடிமை" - சொல் விளக்கம்

மனித இனத்தில் ஒரு சிலரை மற்றவர் தம் உடைமைப் பொருளாக வைத்திருக்கும் நிலை அடிமை நிலை எனப்படும்.[1] கிபி. 2-ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட உரோமானிய சட்டம் அடிமை முறை என்னும் சொல்லுக்கு, "இயற்கைக்கு மாறாக ஒரு மனிதன் மற்றவனுடைய சொத்தாக மாறிவிடும் முறை" என்று இலக்கணம் கூறுகிறது.[2] போரில் கைதியாக பிடிக்கப்பட்டோ அல்லது விலைக்கு வாங்கப்பட்டோ அல்லது பிறப்பினாலோ எவன் ஒருவன் மற்றொருவனுடைய ஆளுகைக்கு உட்பட்டு அவனுக்கு உடைமைப் பொருளாக சுதந்திரமும் உரிமைகளும் முழுவதும் இல்லாத வேலை ஆளாக இருக்கிறானோ அவன் அடிமை என்று ஆங்கில அகராதி கூறுகிறது.[3]

அடிமை நிலை தோற்றம்

போர்கள் என்றாலே வெற்றியும் தோல்வியும் இயற்கை. இந்தப் போர்களில் தோல்வி அடைபவர்களைக் கொன்று விடுவதே அந்தக் காலத்தில் இருந்து வழக்கமாக வந்துள்ளது. ஏனெனில், உணவு என்பது அந்தக் காலத்தில் பெரும் பிரச்சனையாக இருந்தது. எனவே, தன்னோடு இரத்த சம்பந்தம் இல்லாத மற்றோர் இனத்தைச் சேர்ந்தவனுக்கும் உணவளித்துக் கைதியாக வைத்திருப்பது மேலும் பற்றாக்குறைக்கே வழியாகும். ஆனால், காலப்போக்கில் உழைப்பின் அவசியம் அதிகரித்த போது தனக்காக மட்டுமின்றி கால்நடைகளுக்காகவும் உற்பத்தியை அதிகரிக்க வேண்டிய நிலை ஏற்பட்ட காலத்தில் போரில் தோல்வி அடைந்தவர்களை அடிமைகளாக வைத்திருக்கும் நிலை ஏற்பட்டது.[4]

அடிமைகள் - யார்?

கிமு. 12 ஆம் நூற்றாண்டில் எழுதத் தொடங்கி கிமு. 2ஆம் நூற்றாண்டில் முடிக்கப்பெற்ற மானவ தரும சாஸ்திரம் என்ற நூல், பின் வரும் ஆறுவிதமான பணியாட்கள் அடிமைகள் என்று குறிப்பிடுகின்றது.

1. போர்க்காலத்தில் சிறைப்பிடிக்கப்பட்டவர்கள். 2. உணவு, உடை, இல்லறம் இவற்றிற்காக மற்றவர்களிடம் பணியாட்கள் ஆகியிருப்பவர்கள்.

---

1. வாழ்வியற் களஞ்சியம், தொகுதி1. தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1986. ப. 220.
2. மேலது, ப. 220
3. The Shorter Oxford English Dictionary, Oxford, III Edition, 1956.
4. நா. வானமாமலை, மார்க்ஸீய சமூக இயற்கொள்கை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 1976, பக் 24-25.

3. மற்றவர்களால் ஒரு குறிப்பிட்ட தொகைக்கு வாங்கப்பட்டவர்கள். 4. அடிமைப் பெண்களின் குழந்தைகள். 5. தோட்டங்களை வாங்கும்போது அவற்றுடன் வாங்கப்பட்டவர்கள். 6. தாம் வாங்கிய கடனைத் திருப்பித்தர இயலாத காரணத்தினால் அடிமையாக்கப்பட்டவர்கள்.[5] மேலும், அடிமையாவதில் சிலவகைகள் இருந்தன. தன்னைத்தானே விற்றுக் கொள்வது; தன்னையும் தன் மனைவி மக்களையும் விற்றுக் கொள்வது; அடுத்து, பின்வரும் சந்ததிகளையும் சேர்த்து அடிமையாக்குவதாக எழுதிக் கொடுத்து விடுவது. மேலும், தம் அடிமைகளை, பெருமக்களுக்கோ, கோயில்களுக்கோ, மடத்திற்கோ விற்றுவிடுதல், தாம் பிறரிடம் விலைக்கு வாங்கி மீண்டும் விற்பனை செய்தல், தானமளித்தல் போன்ற வகைகளில் அடிமைகளின் பரிமாற்றம் நடைபெற்றிருக்கிறது. இங்கு, தமிழகத்தில் சங்ககாலம் தொடங்கி இற்றைநாள் வரையில் அடிமை முறை பல்வேறு நிலைகளில் பல்வேறு அமைப்புகளில் நிலவி வந்துள்ளது என்பதைக் காணலாம்.

சங்க காலத்தில் அடிமை முறை நிலவியதா?

சங்க காலத்தில் பண்டைய கிரீஸ் அல்லது ரோமாபுரியில் இருந்த மாதிரி அடிமை நிலை ஒரு முக்கியமான சமுதாய நிலையமாக விளங்கிற்று என்று சொல்ல முடியாது. மனிதனை மனிதன் சந்தையில் விலைக்கு வாங்கி விற்கும் பழக்கம் இருந்ததாக எந்தக் குறிப்பும் இல்லை. ஆனால், இதனால் அடிமை நிலைக்குச் சமமான கீழ்நிலை வேலையாட்களோ, கூலிக்காரர்களோ இருக்கவில்லை என்று பொருள் படாது. தான் கண்ட இந்தியாவில் அடிமை நிலை என்னும் நிலையம் அறியப்படாதது என்று மெகஸ்தனிஸ் கூறுகிறார். அவர் கிரேக்கர் ஆகையால் அந்நாட்டில் இருந்த மாதிரி அடிமைநிலை இன்மையால் அடிமை நிலையே இல்லை என்று கூறினார் போலும். வெ. கனகசபையார் "அடிமைநிலை என்பது தமிழர் என்றுமே அறியாதது. இவ்வாதி காலத்தில் அவர்களுடைய உயர்தரக் கலாசாரத்தை நிறுவ வலுத்த சான்றுகள் உள்ளன" என்றார். வி.ஏ.ஸ்மித், கனகசபை கூறியதையே தாமும் கூறி, "அடிமை நிலை தமிழர் அறியாதது என்று கூறுவர்" என்றார். இக்கூற்றுகள் மிகைக் கூற்றுகளே. இழி நிலையில் இருந்த வேளாண்மை கூலிக்காரர்கள் நிலைமை ஆங்கில சாக்சானிய, "மேனர்"களிலிருந்த உழவர்கள் நிலையைவிட உயர்ந்ததாக இராது[6] என்பார் ந. சுப்பிரமணியன்.

புலையர்

இந்தக் கருத்திற்கு அரண் சேர்ப்பது போல உள்ளது, மக்களை அக்காலத்துப் பாகுபடுத்திக் கூறும் முறை. பாணர், பறையர், துடியர், கடம்பர்

5. வாழ்வியற் களஞ்சியம், தொகுதி-1, த.ப. கழகம், தஞ்சாவூர், 1986. ப. 220.
6. ந. சுப்ரமணியன், சங்ககால வாழ்வியல், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 1986.

என்பார் ஒருசேரப் புலையர் என்று வழங்கப்பட்டனர். இவர்களை இழிசினர், இழிபிறப்பாளர் என்று குறித்துள்ளமை சமூகத்தில் இவர்களின் நிலையைக் காட்டப்போதுமான சான்றாகும்.

> இழிப்பிறப்பாளன் கருங்கை சிவப்ப
> வலிதுறந்து சிலைக்கும் வன்கண் இருந்துடி (புறம். 170)

> துடியெறியும் புலைய
> எறிகோல் கொள்ளும் இழிசின (புறம். 287)

என்னும் பகுதிகளால் இவர்கள் சமூகத்தின் மிகக் கீழ்ப்படியில் இருந்தவர்கள் என்று கருதலாம். இடுகாட்டில் செய்யும் கிரியைகளைப் புலையர்கள் செய்தமைக்கு புறம். 360 சான்றாக அமையும். எனவே இன்றுபோல அன்றும் புலையர் பிணம் சுடும் கடமையை மேற்கொண்டிருந்தமை தெளிவு.

கொண்டி மகளிர்

சங்க இலக்கியங்கள் வாயிலாக அந்தப்புரத்திலிருந்த மகளிர் உரிமை மகளிர் என அழைக்கப்பட்டமை அறிகிறோம். போரின்போது சிறைபிடிக்கப்பட்ட பெண்களும் அந்தப்புரத்தில் இருந்தனர். பட்டினப்பாலையில் அத்தகு மகளிர் பற்றிய செய்திகளைக் காண்கிறோம். இவர்கள் "கொண்டி மகளிர்" எனப்பட்டனர். இவர்களின் நிலை, அடிமைகளின் நிலையினை விட மோசமாகக் காணப்பட்டது. இம்மகளிர் பொதுக்குளங்களில் குளித்தனர். கடவுள் தறி அல்லது கந்து நடப்பட்ட திருக்கோயில்கள் இருந்த பொதியில் அல்லது மன்றம் எனப்பட்டவற்றில் மெழுகிடுதல் போன்ற பணிகளைச் செய்து வந்தனர்.

அடியோர் - வினைவலர்

ஐந்திணை ஒழுக்கத்தில் தலைமக்களாய் விளங்குபவர்கள் அறிவும், செல்வமும் உடை நன்மரபினராவார். அன்னோர் கைக்கிளை, பெருந்திணை ஒழுக்கங்களில் ஈடுபடுதல் பொருந்தாமை பற்றி அவ்வொழுக்கங்களில் (கைக்கிளை, பெருந்திணை) தலைமக்களாய்ப் பாடப்படுவோர் ஏவுந்தொழில் செய்யும் மரபினரும், அடிமை புரிவோராய் வாழ்வோருமே ஆவர்.

> அடியோர் பாங்கினும் வினைவலர் பாங்கினும்
> கடிவரை இலபுறத்தென்மனார் புலவர் (தொல். அகத். 23)

அடியோர் என்பவர் தமக்கென நிலையான பொருளோ, தொழிலோ இன்றிச் செல்வரிடமிருந்து அங்கேயே உண்டுடுத்தோ அல்லது நாட்கூலி பெற்றோ அச்செல்வர் தொழிலுக்கு அடிப்படையாய் இருப்பவர். கிளைகளைத் தாங்கும் அடிமரம் போலிருந்து அச்செல்வர் தொழிலை முடிப்பர்.

வினைவலர் என்பவர் ஆண்டுக் கூலியாய் செல்வந்தர்களிடமிருந்து தொழில் செய்வோராவர். அந்நாளில் ஆண், பெண் இருபாலரினும் அடியார் வினைவலர் இருந்தனர்.[7]

மூவகைப் பாகுபாடு

பொது நிலையில் பண்டைத் தமிழர் இடம் பற்றி வேட்டுவர், ஆயர், உழவர், நுளையர், எயினர் எனவும், அகவொழுக்கம் பற்றி வெற்பன், அண்ணல், மகிழ்நன், துறைவன், விடலை எனவும், தொழில் பற்றி அந்தணர், அரசர், வணிகர், வேளாளர், அடியோர், வினைவலர் எனவும் மூன்று பிரிவாகப் பகுக்கப்பட்டனர்.[8]

சிலம்பும் - குறளும் செப்புவன

குடிமுதல் சுற்றமும், குற்றிளையோரும்
அடியோர் பாங்கும் ஆயமும் நீங்கி

எனவரும் சிலப்பதிகார அடிகள் உள்ளும் குற்றிளையோர் ஏவலரையும், அடியோர் அடிமைகளையும் குறிக்கும் என்பர். புறநானூற்றில் வரும் "அடியுறை" (புறம். 67) என்னும் சொல்லும் விலைக்குக் கொள்ளப்படும் அடிமைகளைக் குறிக்கும் சொல்லாகவே இருக்கக் கூடும்.

ஒப்புரவினால் வரும் கேடெனின் அஃதொருவன்
விற்றுக்கோள் தக்கதுடைத்து (220)

எற்றுக்குரியர் கயவர் ஒன்றுற்றக்கால்
விற்றற் குரியர் விரைந்து (1080)

மடிமைக்குடிமைக்கண் தங்கின் தன் ஒன்னார்க்
கடிமை புகுத்தி விடும் (608)

என்ற திருக்குறட்பாக்களில், வேறு பொருள்களைக் குறித்து எழுதும் போது "விற்றல்", "அடிமை புகுதல்" என்பன இடையே, குறிக்கப்படுகின்றன. அடிமைகளைக் குறித்தும் அவர்கள் எவ்வாறு ஆளப்பட வேண்டும் என்பதைக் குறித்தும் வள்ளுவர் தெளிவாக எங்கும் எக்கருத்தையும் கூறவில்லை. கயவரே விற்றற்குரியவர் என வள்ளுவர் கூறுவதனால் பொதுவாக மக்கள் அடிமையாக விற்கப்படும் முறையை அவர் விரும்பவில்லை எனக் கொள்ளலாம்.[9]

---

7. விசி. சசிவல்லி, பண்டைத் தமிழர் தொழில்கள், உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை, 1989, ப. 10.

8. மேலது, ப. 6

9. காமாட்சி ஸ்ரீனிவாசன், குறள் கூறும் சமுதாயம், ம.கா.ப. கழகம், மதுரை, 1975, பக். 142-143.

பண்ணை முறை

கிராமச் சமுதாயத்தோடோ தனிப்பட்ட மேல்சாதியார்களின் வீட்டோடோ பிணைக்கப்பட்ட உழைப்பாளர்களே பயிர்த் தொழில் செய்தனர். அவர்களுடைய "ஒப்பந்தம்" என்பது தனிப்பட்ட மேல்சாதியாரோடோ மேல்சாதிச் சமூகத்தோடோ பிணைக்கப்பட்டுள்ள பிற கிராமப் பணியாளர்கள் மற்றும் கிராமக் கைவினைஞர்களுடைய ஒப்பந்தம் போன்றதே. நாவிதன், வண்ணான், தோட்டி போன்ற கிராமப் பணியாளர்கள் தங்கள் தொழில் ரீதியான குறித்த சாதிக்குழுவைச் சார்ந்தவர்கள். இவர்கள் கிராம சமூகத்திற்குத் தங்கள் பணியைச் செலுத்துகிறார்கள். இதேபோல தச்சர், கொல்லர், குயவர், நெசவாளர் போன்ற கைவினைஞர் சாதியினர் கிராம உற்பத்திக்கும் உபயோகத்திற்கும், தேவையாக துணைப்பொருட்களை வழங்குகிறார்கள்.

இப்படி ஒவ்வொரு தன்னிறைவுக் கிராமமும் தன் எல்லைக்கு உள்ளேயே இரண்டு அல்லது மூன்று சுற்றுக்களைக் கொண்டிருந்தது. இச்சமூக அமைப்பைத்தான் "பண்ணைமுறை" என்று மானுடவியலார் குறிப்பிடுவர். பண்ணைமுறையில் மேல்சாதியாரின் ஒவ்வொரு குடும்பமும் கைவினைஞர், பணியாளர், விவசாயக்கூலி ஆகியோரின் ஒவ்வொரு குடும்பமும் ஒன்றோடொன்று பிணைக்கப்பட்டிருக்கும். இந்த ஒப்பந்தம் கிராம மரபுக்கு உட்பட்டது. வழிவழியாகப் பேணப்படுவது. இருபிரிவினரின் உரிமைகளையும் கடமைகளையும், நுணுக்கமாக வெளியிடுவது. எழுதப்பட்ட சட்டமாகவும் அது நிலவி இருந்தது. அதாவது உழைப்பாளர்கள் தங்கள் உழைப்பையும், உற்பத்திப் பொருளையும் கிராம சமுதாயத்திற்கு வழங்க வேண்டும். அதற்காக ஈடாக அவர்களது தினசரி உணவுத் தேவையை நிறைவு செய்யும் வகையில் பண்ணையாரின் அறுவடையில் ஒருபங்கு அல்லது அடிப்படைத் தேவையை நிறைவு செய்யும் வகையில் உழுது பயிரிடத் துண்டு நிலம், வீடு கட்டிக் கொள்ளக் காலி மனை, கால்நடைகளுக்குப் பொது நிலத்தில் புல்லறுக்கும் உரிமை ஆகியன வழங்கப்படுவர். இவ்வாறு பண்ணைமுறை என்பது கிராமப் பொருளாதார உற்பத்தி உறவுமுறையை வெளிப்படுத்தியது.[10]

பல்லவர் காலத்தில் அடிமை நிலை

பல்லவ நாட்டில் பெரும்பாலான கிராமங்களில் பயிர்த் தொழில் செய்யப்பட்டது. அங்கிருந்த மக்களில் பெரும்பாலோர் நிலவுடைமை யாளர்களும், குத்தகைக்காரார்களுமாம். உழவர்கள், 'குடும்பி', 'குடி', 'குடிமக்கள்' என்று அழைக்கப்பட்டனர். நந்திவர்மன் காலத்திய உத்திரமேரூர்க் கல்வெட்டு இவர்களை "அகம்படி உடையார்கள்" என்று

10. மாரியப்பன், தமிழக வரலாறு (ஒரு சமூக பொருளாதார கண்ணோட்டம்) காவ்யா, பெங்களூர், 1984, ப. 27.

அழைக்கின்றது. இந்த உழவர்கள் மண்ணால் சுவர் எழுப்பப்பட்ட எளிய கூரை வீடுகளில் வாழ்ந்தார்கள். உறுதி வாய்ந்த சுட்ட செங்கற்களால் சுவர் அமைத்து மேலே ஓடு வேய்ந்து வீடுகட்டி வாழ்வது ஆடம்பரமானது என்று கருதப்பட்டது. அப்படிப்பட்ட வீடுகளை, அதாவது, சுட்ட செங்கற்களைக் கொண்டு வீடுகளைக் கட்ட அரசாங்கத்திடமிருந்து முன் அனுமதி பெற வேண்டும்; அதிகமான தொகையை வரியாகச் செலுத்த வேண்டும் பிரம்ம தேய - தேவதான கிராமங்களில் அப்படிப்பட்ட வீடுகளை அரசாங்க அனுமதி இல்லாமல் கட்டலாம்[11] என்ற குறிப்பில் இருந்து, பல்லவர்காலத்தில் நிலவிய அடிமை முறையினை அறிகிறோம். பல்லவர் காலத்திய கல்வெட்டுக்களில் பிராமணர்களைப் பற்றியும், அரசர்களைப் பற்றியும் ஏராளமான செய்திகள் காணக்கிடக்கின்றன. ஆனால், வைசியர்களைப் பற்றியோ, வேளாளர்களைப் பற்றியோ கல்வெட்டுக்களில் அத்தகைய குறிப்புகள் காணக்கிடைக்கவில்லை[12] என்பதும், சமுதாயத்தின் மேல்தட்டு மக்களை அரசு போற்றிய பாங்கினைப் புலப்படுத்தும்.

கணிகையர்

அரசவையில் நாட்டியம் இடம்பெற்றதைத் தவிர, கோயில்களிலும் நாட்டியம் இடம் பெற்றது. இவை, முழுக்க முழுக்க பக்திப் பாடல்களை அடிப்படையாகக் கொண்டு நிகழ்ந்தன. வழிபாட்டு நேரங்களிலும் திருவிழாக்களின் போதும், நடனமாடுவதற்காக அடிமைகள் நியமிக்கப்பட்டிருந்தனர் என்பதைக் காஞ்சிபுரம் முத்தீஸ்வரர் கோயில் கல்வெட்டும், திருவொற்றியூர் கோயில் கல்வெட்டும் உறுதிப்படுத்துகின்றன. இவர்கள் மாணிக்கத்தார் எனவும், கணிகையர் எனவும் அழைக்கப்பட்டனர். ருத்திர கணிகையர் என்போர் சிவன் கோயில்களோடு தொடர்புடையவர். சுந்தரமூர்த்தி நாயனாரின் துணைவியார் பரவையார் ருத்திர கணிகையார் குடும்பத்தைச் சார்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.[13] இந்த அடிகள்மார்களுக்குக் கோயில் அதிகாரிகள் உணவுப்பொருட்களை வழங்கினர். மற்றும் இவர்களுக்கு கோயில்களில் தொண்டு புரிந்த தவசிகள் உணவு அளித்தனர். இறை உணர்வு மேலோங்கிய நிலையில் நாட்டியத்தை இரசித்தவர்கள் நாளடைவில் பாலியல் உணர்வுக்கு அடிமையாகி நாட்டியப் பெண்களை இழிவுபடுத்தினர். அவர்கள் "தேவதாசிகள்" என்றும் "தேவரடியார்கள்" என்றும் அழைக்கப்பட்டனர்.

---

11. C. Minakshi, "Administration and Social Life under the Pallavas", University of Madras, 1938, p. 138.
12. Ibid. p. 165.
13. Ibid. pp. 177-178.

சுந்தரர் வரலாறு

அடிமைகளை விற்பதைக் குறிக்கும் ஆவணங்கள், "ஆள்விலைப் பிரமாண இசைவுச் சீட்டு" என்று அழைக்கப்பட்டன. தான் மட்டுமின்றித் தன் வழி வருவோரையும் அடிமைப்படுத்துகின்ற முறைமை அக்காலத்தில் இருந்தது. "யானும் என்பால் வரும் முறை மரபுகளோடும், வழித் தொண்டு செய்தற்கு ஓலை இருமையால் எழுதி நேர்ந்தேன்" என்று சுந்தரரை அடிமையாகக் கொண்ட, திருவெண்ணெய் நல்லூர் அந்தணருக்கு சுந்தரருடைய பாட்டனார் ஓலை எழுதிக் கொடுத்ததாகப் பெரிய புராணம் தெரிவிக்கிறது. இதன் வாயிலாக, பின்னிட்ட சந்ததியாரையும் சேர்த்து ஆளடிமை ஓலை எழுதித் தந்த வழக்கம் அக்காலத்தில் நிலவியது எனக் கருதலாம்.[14] மேலும், மேல்சாதியினருக்குக் கீழ்ச்சாதியினர் அடிமைப்படுகின்ற நிலை மட்டுமின்றி அந்தணருக்கு மற்றோர் அந்தணர் அடிமையாதல் உண்டு என்றும் அறிகின்றோம்.

சோழர் காலத்துச் சூழல்

சோழர் காலத்தைப் பொறுத்த வரையில் அடிமைகள் தோன்றிய விதங்கள் நான்கு என, மா. பாலசுப்பிரமணியன் கருதுகிறார். *1.* போரில் பிடிக்கப்பட்டவர்கள், *2.* அடிமைகளைக் கோயில்களுக்கு அர்ப்பணித்தல், *3.* பஞ்சம் பிழைக்க அடிமைகளாதல், *4.* அரசினர் ஏற்படுத்திய அடிமைகள் என வகைப்படுத்துகிறார் அவர்.[15]

போரில் பிடிக்கப்பட்டவர்கள்

போர்க்காலங்களில் ஆயிரக்கணக்கான ஆட்களைச் சோழ மன்னர்கள் சிறைபிடித்தார்கள். முதலாம் இராசேந்திரன் ஒன்பது இலட்சம் இராணுவ வீரர்களைப் பயன்படுத்திப் பல்லாயிரக்கணக்கான மக்களை, குறிப்பாக இளம் பெண்களைச் சிறைபிடித்தான் என்று *1007*-ஆம் ஆண்டுக்குரிய சாளுக்கிய ஹோட்டூர் கல்வெட்டுத் தெரிவிக்கிறது. சோழ மன்னனுடைய உணவு அருந்தும் இடத்தில் மூவாயிரம் பெண்கள் நாள்தோறும் முறை போட்டுச் சேவை செய்தார்கள் என்று கூறும் வெளிநாட்டுக்காரரின் செய்திகள் அடிப்படையில் சோழர் அரண்மனையில் 'குடிமக்கள்' என்ற சங்க காலத்திய அடிமை முறையைச் சார்ந்த பணியாள் அடிமைகள் காணப்பட்டனர் எனக் கணிக்கலாம். இவ்வாறு காணப்பட்ட அடிமைகள் போர்களில் பிடிக்கப்பட்ட வெளிநாட்டுக் கைதிகளே என்று கொள்ளுதல் பொருத்தமானதே.[16]

---

14. கே.கே. பிள்ளை, தமிழக வரலாறு மக்களும் பண்பாடும், தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை, பக். *332-333.*

15. மா. பாலசுப்ரமணியன், சோழர்களின் அரசியல் கலாசார வரலாறு, பாகம் - II, தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை, *1979* ப. *234,*

16. மேலது, ப. *236.*

அடிமைகளைக் கோயில்களுக்கு அர்ப்பணித்தல்

நந்திவர்ம மங்கலத்து மத்தியஸ்தன் சந்திரசேகரன் என்பான் தன்னுடைய அடிமைப் பெண்கள் மூவரை வயலூர்த் திருக்கற்றளிப் பரமேச்சுவரர் கோயிலில் திருப்பதிகம் பாடுவதற்கும் கவரிப் பெண்களாகத் தொண்டு புரிவதற்கும் கிபி. *948*-இல் அளித்தனன் என்று அவ்வூர்க்கல்வெட்டொன்று அறிவிக்கின்றது.[17] திருநெல்வேலி மாவட்டம் நாங்குநேரி வட்டத்திலுள்ள கருங்குளம் இராச சிம்மேசுவரமுடையார் கோயிலுக்குப் பறை கொட்டும் ஓர் உவச்ச அடிமையை அரசியல் அதிகாரி ஒருவன் கிபி. *1105*-இல் தந்த செய்தி அவ்வூர்க் கல்வெட்டில் காணப்படுகின்றது.[18] இருமுடி சோழத் தெரிந்த வில்லிகள் என்ற படையின் தலைவன் பெரும்பாணப்பாடி நாட்டுப் பாணபுரத்திலிருந்த கணபதி நம்பியாகிய அழகிய பாண்டிய பல்லவரையன் என்பான் கிபி. *1119*-இல் தன் குடும்பப் பெண்கள் சிலரைத் தேவரடியாராகச் சூல இலச்சினையிட்டுத் திருவல்லங் கோயிலில் பணிபுரிந்து வருமாறு விட்டனன் என்று அவ்வூரிலுள்ள முதற் குலோத்துங்க சோழன் *49*-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டொன்று உணர்த்துகின்றது.[19] எதிரிலி சோழ கங்க நாடாள்வான் என்பவன் கிபி. *1219*-இல் திருமறைக் காட்டுக் கோயிலுக்கு ஆடவர் ஐவரையும் பெண்டிர் ஐவரையும் அவர்கள் பரம்பரையினருடன் ஆயிரம் காசுக்கு விற்ற செய்தி அக்கோயிலிலுள்ள கல்வெட்டொன்றால் புலப்படுகின்றது.[20] தஞ்சாவூர் ஜில்லா அச்சுதமங்கலத்திலுள்ள ஒரு கல்வெட்டும் அவ்வூர் மடத்தில் விலைக்கு வாங்கப்பட்ட கல்தச்சன் ஒருவனும், அவன் மனைவியும் அன்னாரின் புதல்வர் நால்வரும் கிபி. *1219*-இல் பணி மக்களாக இருந்தனர் என்று கூறுகின்றது.[21]

பஞ்சம் பிழைக்க அடிமைகளாதல்

மூன்றாம் குலோத்துங்கன் ஆட்சியில், *1201*-இல் தஞ்சைப் பகுதியில் நிகழ்ந்த பஞ்சம் தாங்கமாட்டாமல் திருப்பாம்புரம் கோயிலுக்கு ஒரு வேளாளன் தன்னையும் தன்னுடைய இருபெண் மக்களையும் விற்றுக் கொண்டு அடிமையான அளவில் தன் குடும்பத்தோடு உயிர் பிழைத்தான். தேவதானக் கோயில்கள் பொருளாதார நலிவிலிருந்தும் சமூக விரோதிகளிடமிருந்தும் அரசினரால் நன்கு பாதுகாக்கப்பட்டன. அரசினரால் பாதுகாக்கப்பட்ட இடம் கோயில் என்றளவில் இன்னலுற்ற மக்கள் அடிமைகளாக அடைக்கலம் புகுந்தனர்.[22]

---

17. Ins. 149 of 1936-37; A.R.E. for 1936-37 Part-II, Para-21.
18. Ins. 230 of 1927-28.
19. Ins. 230 of 1921. A.R.E. 1921-22. Part - II Para-19.
20. Ins. 499 of 1904
21. Ins. 409 of 1925.
22. மா. பாலசுப்ரமணியன், மு. சுட். நூல்ப. *237*.

அரசினர் ஏற்படுத்திய அடிமைகள்

குலோத்துங்கனின் ஆட்சியில் *1088*-இல் காளஸ்திக் கோயிலுக்குரிய தேவரடியார்கள் தவறான முறையில் அரண்மனைச் சேவகத்திற்குக் கொண்டு வந்து சேர்க்கப்பட்டார்கள் என்பது கண்டுபிடிக்கப்பட்டு அவர்களைத் திரும்பவும் காளஸ்திக் கோயிலுக்கே குலோத்துங்கன் அனுப்பி வைத்தான். நாகப்பட்டினத்துத் திருக்காரோணக் கணக்கர் இருவர், தம் அடிமைப் பெண்களை "ஆள்விலைப் பிரமாண இசைவுச் சீட்டு" எழுதிச் சூலமங்கலக் கோயிலுக்குக் கி.பி. *1208*-இல் விற்றமை அவ்வூர்க் கல்வெட்டில் பொறிக்கப்பட்டுள்ளது.[23] அவ்விசைவுச் சீட்டில் அப்பெண்கள் தங்களுக்கு "கிரமாகதமாய் வருகின்ற அடியார்" என்று கூறப்பட்டிருத்தல் உணரற்பாலதாம். தஞ்சாவூர் மாவட்டம் மாயூரம் வட்டத்திலுள்ளதும் அட்ட வீரட்டங்களுள் ஒன்றுமாகிய கொறுக்கையில் இரண்டாம் இராசாதிராச சோழன், மூன்றாங் குலோத்துங்க சோழன், மூன்றாம் இராசராச சோழன் ஆகியோர் ஆட்சிக் காலங்களில் திருக்கோயிலுக்கு விலைக்கு வாங்கப்பட்டவர்களும் பரிசிலாகக் கிடைத்தவர்களுமாகிய ஆண், பெண் அடிமைகள் நூற்றுக்கு மேற்பட்டவர்கள் பெயர்கள் வரையப்பட்டிருக்கின்றன.[24]

அடிமை ஆன பட்டினவர்

இலச்சினையைத் தாங்கி, குறிப்பிட்ட இடத்தில் காலமெல்லாம் பணி செய்கின்ற அடிமைகளைப் போலல்லாமல் தங்களுடைய பணிகளை வெளியிடத்தில் மேற்கொண்ட நிலையில் அப்பணிகளின் வருவாயை எஜமானருக்குத் தந்துவிடுகின்ற அடிமைகள் சோழர் காலத்தில் காணப்பட்டனர். இந்த வகைக்குச் சான்றாக முதலாம் ராஜராஜன் காலத்தில் "நாடுகண்காட்சி" என்ற அதிகாரியும், "நாடுவகை" அதிகாரியும் *12* மீன் பிடியாளரின் குடும்பங்களை அடிமைகளாக்கியதைக் கூறலாம். இது *1002*-இல் நடந்தது. பட்டினவர் என்றழைக்கப்பட்ட அந்த *12* குடும்பங்களும் செங்கை மாவட்டம் திருவாதந்தை என்ற இடத்துக்குரிய கோயிலின் ஸ்ரீவராகத் தேவர் என்ற மூலவருக்கு அடிமைகளாக்கப்பட்டனர். இவ்வடிமைகள் தங்களுடைய நெய்யும் தொழிலிலிருந்தும், மீன் பிடித்தலிலிருந்தும் வருகின்ற வருவாயில் கழஞ்சுப் பொன்னைக் கோயிலுக்கு வழங்க வேண்டும். ஆண்டுக்கு இருமுறை நடக்கின்ற கோயில் திருநாட்களுக்குரிய பணிகளை மேற்கொள்ள வேண்டும். இத்திருவிழாக்களில் ஒன்று இராஜராஜனின் பிறந்த நாளான ஆவணிச்சதயத் திருநாள் என்பதும் அது நடந்த ஏழு நாட்களில் பட்டினவர் தங்கள் உழைப்பையும், உடைமைகளையும் கொடுத்தார்கள் என்பதும் சிறப்புச் செய்தியாகும். உற்சவ நாட்களில் கடவுளர்க்குரிய உணவுப் படையல்களை

---

23. Ins. 296 of 1911.

24. Ins. 223 of 1917.

அவர்கள் பிரசாதமாகப் பெற்றார்கள். இவ்வாறு கோயிலோடு பிணைக்கப்பட்டுப் போன இந்த *12* பட்டினவர் குடும்பங்களை அவர்களுடைய பணிகளை மேற்கொள்ள வைக்க வேண்டிய அதிகாரத்தைச் செலுத்துகின்ற பொறுப்பை, திருவாதந்தை ஊரிலுள்ள 'சபா' என்ற பிராமணரின் ஊராட்சி மன்றமும், 'ஊர்' என்ற ஏனையோரின் ஊராட்சி மன்றமும் ஏற்றுக் கொண்டிருந்தன. இந்த அடிமை முறை ஏற்பாட்டை முன்னின்று செய்த அரசாங்க அதிகாரிகள் இருவர். இரண்டு ஊராட்சி மன்றங்கள், கோயில் அதிகாரிகள் ஆகியோர் அரசு, மக்கள், தெய்வம் என்று மூன்று சக்திகளையும் பிரதிநிதித்துவப்படுத்தினர். இவ்வாறு கொத்தடிமைத்தனம் அம்மூன்று சக்திகளின் ஏகோபித்த வற்புறுத்தலுக்குட்பட்டுச் சோழர் கால தமிழக வரலாற்றின் கருமை படர்ந்த பகுதிக்குரியதாகக் காணப்பட்டது.[25]

எதிர்ப்புணர்வு

கொத்தடிமைக் கொடுமை தாங்காது கோயில்களை விட்டு ஓடிச் சென்ற அடிமைகளைத் திரும்பவும் பிடித்து வந்து அவர்களைத் தண்டித்து மீண்டும் அடிமைகளாக அவர்கள் வேலை செய்ய வைக்கப்பட வேண்டும் என்ற உத்தரவை மூன்றாம் குலோத்துங்கள் பிறப்பித்தான் என்று திருச்செங்காட்டாங்குடி கோயில் கல்வெட்டு கூறுகிறது. வயிராதராயன் *1208*-இல் திருவாலங்காட்டு கோயிலுக்குரிய மடத்திற்கு விற்ற அடிமைகள் கோயில் அதிகாரிகளான ஸ்தானப்பட்டார் என்பவர்களை எதிர்த்து முரண்படத் தொடங்கினர். அடிமைகளும் வாழ்வின் அழிநிலையை ஏற்றுக்கொள்ளாத முறையில் எதிர்ப்புத் தெரிவித்தனர் என்பது மேற்சொன்ன செய்தியிலிருந்து புலப்படுகிறது.[26]

நாயக்கர் காலத்தில் நாட்டு நிலை

நாயக்கர் ஆட்சி தமிழகத்தில் நடைபெற்ற போது அடிமை முறை நிலவி இருந்தது என்பதற்குச் சான்றுகள் கிடைத்துள்ளன. பண்ணையாள் என்பவன் கிராமங்களில் பயிர்த் தொழில் புரிபவன். அடிமைகள் என்போர் நகர்ப் புறங்களில் நிலப் பிரபுக்களின் வீடுகளில் பணிபுரிவோர். பண்ணையாள் நிலத்தோடு தொடர்புடையவன். அடிமை தன் முதலாளியோடு தொடர்புடையவன். அப்துல் ரசாக், நிக்கேலோ, டைகாண்டி மற்றும் பார்போசா இவர்களுடைய குறிப்புகளிலிருந்து அடிமை முறை நாயக்கர் ஆட்சிக்காலத்தில் நிலவி இருந்தமையை அறிந்து கொள்ளலாம்.[27] அடிமைகள் பலவகைகளில் உருவாயினர். சிலர் தம்மைத் தாமே விற்றுக் கொண்டனர்.

25. மா. பாலசுப்பிரமணியன், சோழர்களின் அரசியல் கலாசார வரலாறு, பக். *238-239.*

26. மேலது, ப. *239.*

27. T.V. Mahalingam, Administration and Social Life under Vijayanagar, University of Madras, 1975, p. 10.

சந்ததியினரையும் அடிமைகளாக்கினர். கடன் பெற்றுக் கொண்டு திருப்பிச் செலுத்த முடியாதவர் கடன் கொடுத்தவருக்கு அடிமையாயினர். போர்க் கைதிகளாகப் பிடிக்கப்பட்டு வந்தவர்கள் அடிமையாயினர். 1930-ஆம் ஆண்டு தென்னகத்தில் நிலவிய கொடிய பஞ்சத்தால் பல குடும்பங்கள் அடிமையாயின.

சதி

சோழர் காலத்தில் கோயிலுக்குப் பெண்கள் தானமாக அளிக்கப்பட்டது போலவே நாயக்கர் காலத்திலும் பெற்றோர் சிலர் தங்கள் பெண்களைக் கோயிலுக்குத் தானமாக அளித்தனர். அதன் அடையாளமாக ஒரு சிறப்பு நிகழ்ச்சி செய்து அப்பெண்களின் நெற்றியில் பொட்டுக் கட்டி விடுவர். திருவாரூர் கோயில் விழாவில் அப்படிப்பட்ட தேவரடியார் ஆடிச் சென்றதை "இம்மானுவேல் டி லைக்கா" என்ற அடிகளார் குறிப்பிடுகின்றார்.[28] அடுத்ததாக உயர்குடி மக்களிடம் பல பெண்களை மணக்கும் பழக்கம் இருந்ததும் இங்குக் கருதத்தக்கது. திருமலை நாயக்க மன்னனுக்கு 200 மனைவியார் இருந்தனர். கிழவன் சேதுபதிக்கு 47 மனைவியர் இருந்தனர். இவ்வுயர் குடி மகளிரிடம் உடன் கட்டை ஏறும் வழக்கமும் காணப்பட்டது. திருமலை நாயக்க மன்னன் இறந்த போது அவனது 200 மனைவியர் உடன்கட்டை ஏறியதாக அறிகிறோம்.[29] அரச குடுபத்தினர் மட்டுமே உடன்கட்டை ஏறுவதாக நாம் கருதிக் கொண்டிருக்கும் கருத்துக்கு மாறாக நடுத்தரக் குடும்பத்தினர் கணவன் இறந்த பிறகு உடன்கட்டை ஏறி உயிர் துறந்ததைப் பல இடங்களில் நேரில் பார்த்தாக பாதிரிமார் விவரித்து இருக்கின்றனர். சில பெண்கள் உடன்கட்டை ஏறத் தமக்கு விருப்பம் இல்லை என்றாலும் மற்றவர் வற்புறுத்தலுக்காக உடன்கட்டை ஏறி இறந்திருக்கின்றனர். 1817-இல் ஏறத்தாழ 706 இடங்களில் உடன்கட்டை ஏறிய பெண்டிர் நிகழ்ச்சியைப் பற்றிக் குறிப்பிடுகிறார், அப்பேதுப்வா என்ற அறிஞர்.[30]

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் அடிமை முறை பெற்ற உருமாற்றம்

நாடு முழுவதும் பண்ணை அடிமை முறை நிலவி வந்தாலும் மாவட்டத்திற்கு மாவட்டம், சில வேறுபாடுகள் காணப்பட்டன. 19-ஆம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் இந்த அடிமை முறை நாட்டின் பல பகுதிகளில் பரவி இருந்தாலும் நாளடைவில் இம்மாநிலத்தில் பண்ணை அடியாட்களின்

28. க.ப. அறவாணன், தமிழர்மேல் நிகழ்ந்த பண்பாட்டுப் படையெடுப்புகள், தமிழ்க்கோட்டம், சென்னை, 1989, ப. 252.

29. ஆ. இராமகிருஷ்ணன், தமிழக வரலாறும் தமிழர் பண்பாடும், சர்வோதய இலக்கியப் பண்ணை, மதுரை, 1983, ப. 276,

30. க.ப. அறவாணன், முகட்.நூ. ப. 253

எண்ணிக்கையில் ஒரு வீழ்ச்சி காணப்பட்டது. *1819*-ஆம் ஆண்டில் செய்யப்பட்ட ஆய்வு சில விவரங்களைத் தருகிறது. விவசாயத் தொழிலாளர்களின் தேவை அதிகரிப்பு, அவர்களின் பாதுகாப்பின்மை, நடைபெற்ற போர்களினால் முதலாளிகளும், தொழிலாளர்களும் அவர்கள் வசித்த கிராமங்களில் இருந்து இடம் பெயர்ந்தமை முதலிய காரணங்களால் பண்ணை அடியாட்களின் எண்ணிக்கை குறைந்தது. தென்னாற்காடு, தஞ்சை, திருச்சி, திருநெல்வேலி முதலான மாவட்ட ஆட்சியாளர்கள் அனுப்பிய குறிப்புகள் பண்ணை அடியாள் முறை அழியாமல் நிலவி வருகின்றது என்கிற உண்மையைக் கூறுகின்றன. மதுரையிலும், வட ஆற்காட்டிலும் சில அடிமைகள் உள்ளனர் என்றும், சேலத்தில் பண்ணை அடியாட்கள் முறையின் அடிச்சுவடு இல்லை என்றும் பஞ்ச காலத்தில் சிறு பிள்ளைகள் பெற்றோரால் விற்கப்படுகின்றனர் என்றும் அறிக்கை தெரிவிக்கின்றது. கோவை மாவட்டத்தில் இந்தப் பண்ணை அடிமைகள் நிலத்தோடு சேர விற்கப்படுகிறார்கள் என்றும் அறிக்கை கூறுகிறது.[31]

விவசாயத் தொழிலாளி - பண்ணையாள் - வேறுபாடு

பொருளாதார நிலையைப் பொறுத்த வரையில் விவசாயத் தொழிலாளர்களுக்கும், பண்ணை அடியாட்களுக்கும் நுண்ணிய வேறுபாடு இல்லை. வெளிப்படையாகத் தெரியக் கூடிய வேறுபாடு ஒன்று உண்டு. அது என்னவெனில் விவசாயத் தொழிலாளர்கள் அந்தப் பயிர்ப் பருவம் முடிந்ததும் தங்கள் முதலாளிகளை விட்டு வேறு இடங்களுக்குச் செல்ல முடியும். பண்ணை அடியாள்கள் அப்படிச் செய்ய முடியாது. ஆனால், நடப்பில் விவசாயத் தொழிலாளி தன் முதலாளியிடம் முன் பணமாக ஒரு தொகையைப் பெற்றுக் கொள்வதால் அவனும் பண்ணையாளுக்கு உள்ள சுதந்திரத்தையே பெறுகின்றான். நிலத்தோடு சேர வாங்கப் பெற்ற பண்ணையாள் அந்த நிலத்தைப் பயிரிடுகின்ற உரிமையைப் பெறுகின்றான். விவசாயத் தொழிலாளர்களுக்கு அந்த உரிமை இல்லை. பண்ணை அடியாள் குடி இருக்க ஒரு குடிசையும், படியாக சில தானியங்களும், ஆண்டிற்கு இரண்டு உடைகளும், எப்போதேனும் ஒரு போர்வையும், ஒரு ஜோடி செருப்புகளும் வழங்கப் பெற்றான். முதலாளியின் இல்லத்தில் நடைபெறுகின்ற சடங்குகளின் போதும், விழாக்களின் போதும் வழக்கமான சில பரிசுப் பொருள்களைப் பெற்றான். நிலத்தோடு சேர வாங்கப்பெற்ற இந்தப் பண்ணை அடியாள் நிலம் விற்கப்பட்ட போது மற்றொருவனுக்கு இவனும் விற்கப்பெற்றான். விவசாயத் தொழிலுக்கு ஆட்கள் கிடைப்பது கடினமாக இருந்த காலத்தில் கூடத் தென்னாற்காடு மாவட்டத்தில் ஒரு குடும்பத்தின் விலை *10*

31. A. Sarada Raju, Economic conditions in the Madras Presidency (1800-1850), University of Madras, 1941, pp. 272-273

வராகனிலிருந்து *50* வராகன் வரை சென்றது. திருச்சியில் ஓர் அடிமையின் விலை சராசரியாக *20* ரூபாயாக இருந்தது.[32]

விதிக்கப்பட்ட தடைகள்

பண்ணை அடியாட்கள் வளர்ச்சியைத் தடை செய்வதற்காக அரசாங்கம் பல்வேறு ஒழுங்கு விதிகளையும், அவசரச் சட்டங்களையும் அவ்வப்போது இயற்றிக்கொண்டே வந்தது. *1789*-இல் கிழக்கிந்திய கம்பெனி அடிமைகளை ஏற்றுமதி செய்வதோ, போரில் இருந்து வீரர்களைப் பிடித்து வந்து அடிமையாக்குவதோ கூடாது என்று தடை விதித்தது. *1811*-இல் அடிமைகளை இந்தியாவில் கொண்டுவந்து இறக்குவதற்குத் தடை விதிக்கப்பட்டது. *1819*-இல் வருவாய் பாக்கிக்காக அடிமைகள் விற்கப்படக் கூடாது என்று ஒரு சட்டம் பிறப்பிக்கப்பட்டது. *1832*-இல் ஒரு மாவட்டத்திலிருந்து மற்றொரு மாவட்டத்திற்குப் பண்ணை அடியாள் விற்கப்படக் கூடாது என்று ஒரு சட்டம் வந்தது. ஆனால், இந்த ஒழுங்கு விதிகளும், அவசரச் சட்டங்களும் எதிர்பார்த்த வெற்றியை ஈட்டித் தரவில்லை.[33]

அடுத்த படியாக *1840*-இல் இந்தியாவில் அடிமைகள் நிலை என்ற தலைப்பில் ஒரு ஆய்வறிக்கை தயாரிக்கப்பட்டது. அவ்வாய்வறிக்கையிலிருந்து *1843*-ஆம் ஆண்டு அடிமைகளை விற்பதும், வாங்குவதும் சட்டப்படி குற்றமாகும் என்று சட்டம் பிறப்பிக்கப்பட்டது என்றாலும் தஞ்சாவூர், திருநெல்வேலி, திருச்சி மாவட்டங்களில் இம்முறை முற்றிலும் ஒழியவில்லை. பணப் பொருளதாரத் தோற்றம் பண்ணையாட்களைக் கொஞ்சம் கொஞ்சமாக, கூலித் தொழிலாளர்களாக்கியது. நிலங்களுக்கு விதிக்கப்பட்ட பெருத்த நிலவரி உழவர்களைத் தங்கள் குடும்பங்களோடு விவசாயத்தில் ஈடுபடுமாறு தூண்டுவது மற்றும் இந்து மதத்தில் இருந்து இஸ்லாமிய மதத்திற்கு மாற்றுவது என்ற நிலை பண்ணையாட்கள் முறையில் வீழ்ச்சியை ஏற்படுத்தியது. மற்றும் நகர்ப் புறங்களிலும் தோட்டங்களிலும் மிகுதியான கூலி வழங்கப்பட்ட காரணத்தால் பண்ணையாட்கள் தங்கள் இல்லங்களை விட்டு வெளியே புறப்படத் தயாராயினர். ஆனால், பல பண்ணையாட்கள் தங்கள் முதலாளியிடம் கொண்ட அன்பினால் வெளியே புறப்படவில்லை என்றாலும் *19*-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பண்ணை அடியாள் முறை முழுவதுமாக மறைந்தது.[34]

கொத்தடிமை முறை

அடிமை முறை மறைந்தவுடன் அதனை ஒத்த கொத்தடிமை முறை இந்தியாவிலும், வேறு பல நாடுகளிலும் இருந்தது வந்தது. நிலத்தில்

---

32. Ibid. pp. 270-271.

33. Ibid. p. 274

34. Ibid. p. 276

பாடுபடும் பண்ணை ஆட்கள் வறுமை காரணமாகத் தத்தம் நிலச் சொந்தக்காரரிடம் கடன் வாங்கும் பொழுது அவர் பணியாளிடமிருந்து 'கொத்தடிமை ஒப்பந்தம்' ஒன்று செய்து கொள்வார். இந்த ஒப்பந்தத்தின் படி பணியாள் நில உரிமையாளர் வீட்டிலும், நிலத்திலும் ஊதியமின்றி உழைப்பார்.[35] ஒரு கொத்தடிமை இறந்துவிட்டால், அவன் சந்ததியினர் உடமையாளனுக்கு அடிமைகள் போல் உழைப்பர். பணம் கடன் வாங்குபவர்கள் பொதுவாகப் படிக்காதவர்களாக இருப்பர். மேலும், எவ்வளவு தொகை தமக்கு வழங்கப்பட்டதாகக் குறிக்கப்பட்டுள்ளது என்பதை அறியமாட்டார்கள். அப்படிக் குறிக்கப்பட்ட தொகையும் தொகை கொடுக்கப்பெற்றதை விடக் கூடுதலானதாகவே ஏமாற்று வேலையாகக் குறிக்கப்பட்டிருக்கும். மேலும் அரசாங்கமும் பலவீனப்பட்டுப் போனவர்களுக்கு உறுதுணையாக இருப்பதில்லை. கடன் பெற்றவன் தன்னுடைய எதிர்ப்பினைக் காட்ட முடியாது. காரணம் அதிகாரக் கட்டமைப்பு எல்லாம் பணம் வழங்கும் முதலாளிக்குத் துணைபோகின்ற வகையில் தான் உள்ளன. ஏழ்மையும், தாழ்ந்த நிலையும் படிப்பறிவின்மையும் கடனாளியை மேலும் எழ முடியாத பள்ளத்தில் தள்ளி விடுகின்றன. இதுதான் இந்நாட்டில் கொத்தடிமை முறையில் அமைந்து கிடக்கிற அடிமை முறையின் நடைமுறையாகும்.[36]

கொத்தடிமை தன் தலைவரிடமிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள விரும்பினாலும், அவனால் அப்படிச் செய்ய முடியாது. ஏனெனில் அவனுக்கு வேறெங்கும் வேலை கிடைக்காது. மற்ற முதலாளிகளால் கொத்தடிமையாக இவன் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டான். மேலும், பணி செய்துகொண்டிருக்கும் இடத்திலிருந்து அவனால் அப்படி நகர முடியாது. இப்படி அவன் ஒரே இடத்தில் வேலை செய்யக் கட்டுப்படுத்தப்படுகின்றான். அவனுடைய வாழ்நாள் முழுவதும் வேலை செய்தும் அவன் வாங்கிய கடனுக்காக அவன் குடும்பத்தார் வேலை செய்ய வேண்டி வருகிறது. அவன் முதலாளிகள் மிகச் சுலபமாக அவன் குடும்பத்தாரை இந்தக் கொத்தடிமை முறையில் இழுத்துத் தள்ளி விடுகின்றனர்.

ஒரு பெண் தன்னையும் தன் பிள்ளைகளையும் விற்றுக் கொள்வதனையும் கொத்தடிமை என்பர். அதாவது, ஒரு கொத்தாக குடும்பமாக - கூட்டமாக அடிமையாதல் என்பது இதன் பொருள். அந்தப் பெண்ணை அவள் தலைவனைத் தவிர வேறு யாரும் விற்க முடியாது. ஒரு வேளை அவள் தலைவன் இல்லையென்றால் அவளுடைய நல் மாமன் (தாயுடன் பிறந்தவன்) விற்கலாம். தலைவனோ, நல்மாமனோ அவளுக்கு இல்லையென்றால் அவள் "பரதேசிக் கொத்து" என அழைக்கப்படுவாள்.

---

35. வாழ்வியற் களஞ்சியம், தொகுதி - I, தபு கழகம், தஞ்சாவூர், *1986*, ப. *223*
36. Bonded Labour Invisible to official Eyes - "Economic and Political Weekly" - Vol. XI No-45. Nov-6-1976, p. 1754.

அவளுடைய பணிகளை நாட்டாண்மைக்காரர் நிர்ணயிப்பார்; அவளை விற்கின்ற உரிமையும் அவருக்கு உண்டு.[37] மதிப்பில்லாத கழித்துக் கட்டப்பட்ட இந்தக் கொத்தடிமைகளில் பெரும்பாலோர் ஏழைகளில் ஏழைகளாய் உள்ள "தீண்டத் தகாதவர்" என்று மேல் சாதியினரால் புறக்கணிக்கப்பட்ட இனத்தைச் சார்ந்தவர்களேயாவர். இடைக்கால நிலவுடைமை பிரபுத்துவ முறையின் வெளிப்பாடே இக்கொத்தடிமை முறை என்று பலர் கருதுகின்றனர் என்றாலும் இது இந்திய நாட்டின் -சாதிப் பாகுபாட்டின் நீண்டகால வரலாற்றில் ஓர் அம்சம் என்பது தான் சரியான மதிப்பீடாகும்.[38]

ஒதுக்கப்பட்ட இனம்

தீண்டத்தகாத இம்மக்கள் கொடுமையான சமூக இழிவுகளுக்கு உள்ளாக்கப்பட்டிருந்தனர். இவர்கள் உயர் சாதியாரைத் தொடக்கூடாது. உயர் சாதியார் தெரு வழியே நடக்கக் கூடாது; மண்பாத்திரங்களையன்றிப் பிற பாத்திரங்களை உபயோகிக்க கூடாது; காலில் செருப்பணியக் கூடாது. ஆண்கள் மட்டுமின்றிப் பெண்களும் கூட, தங்கள் மார்புப் பகுதியை மறைக்கும் வண்ணம் ஆடை ஏதும் அணியக் கூடாது என்பன போன்ற சமூகக் கட்டுப்பாடுகள் சாதியின் பெயரால் இவர்கள் மேல் திணிக்கப்பட்டிருந்தன.

நிலவரி ஒன்றே அரசாங்கத்தின் முக்கிய வருவாயாக அமைந்திருந்த ஆரம்ப காலகட்டங்களில் பண்ணைகளை விட்டுத் தப்பியோடிய கொத்தடிமைகளை பண்ணையார்களுக்கு மீட்டுத்தரும் முயற்சியில் மாவட்ட ஆணையர்களே ஈடுபட்டனர். *1830*-இல் திருச்சி மாவட்ட ஆணையர் சேலம் மாவட்ட ஆணையருக்கு நிலத்திலிருந்து தப்பியோடிய பத்துப் பள்ளர்களை மீட்டுத்தரக்கோரி எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாவது, "பள்ளர்கள் நிலத்தின் அடிமைகள்; நிலத்தை விட்டு வெளியேறும் உரிமை அவர்களுக்குக்கிடையாது; நிலவுடைமையாளரான பிராமணர் அவர்களுடைய உதவியின்றி நிலத்தைச் சாகுபடி செய்ய இயலாது. அவருக்கு அடிமைகளை மீட்டுத் தராவிடில் நிலமும் பாழாகும்; அரசாங்கமும் நஷ்டமடையும்" என்று குறிப்பிட்டுள்ளார். நீதிமன்றங்களும் கூட, அடிமை முறை மரபு வழிப்பட்ட நடைமுறை என்று பண்ணையாட்களை விற்கும், அடகு வைக்கும் பண்ணையார் உரிமைக்குச் சாதகமாகவே ஆரம்பக்காலங்களில் தீர்ப்பளித்தன.[39]

கொத்தடிமை முறைக்கு ஒரு முற்றுப் புள்ளி

ஆண்டாண்டுக் காலமாக வாழையடி வாழையாக அரிதாள் அறுத்துவர மறுதாள் பயிராதலைப் போலத் தமிழகத்தில் அடிமை முறை

37. S. Manickam, A study of Slavery in Tamil Country, - Historical over-view, C.L.S. Madras, 1981, p. 43
38. N.D. Kamble, Bonded labour in India, Uppal Publishing House, New Delhi, 1982. p.4.
39. Dharma Kumar, Land and Caste in South India, p. 17.

வளர்ந்து வந்திருக்கின்றதென்பது இப்போது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இதிலிருந்து கொத்தடிமை முறை அடியோடு ஒழியவில்லை என்பதை ஒருவாறு அறிந்து கொள்ளலாம்.[40]

நமது மாநிலத்தில் நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்த கூடலூர் வட்டாரத்தில் 'பணியர்கள்' என்னும் பழங்குடி மக்கள் வாழ்ந்து வருகின்றனர். நாட்டில் எவ்வளவோ முன்னேற்றம் ஏற்பட்ட போதிலும் இவர்களுள் ஒரு பகுதியினர் இன்னமும் அறியாமை என்னும் இருளில் மூழ்கிக்கிடக்கின்றனர்.[41]

கூடலூர் வட்டாரத்தில் மொத்தமுள்ள *5,667* பணியர்களில் *481* பேர் *250* வயநாடு செட்டிக் குடும்பங்களுக்கு அடிமைகளாக ஆண்டாண்டுக் காலமாக ஆட்பட்டிருந்துவந்திருக்கின்றனர். இங்கு உரிமையோடு பிறந்த ஆண்களும் பெண்களும் தங்கள் வாழ்நாளெல்லாம் அடிமைகளாக விலங்குகளைப் போல உழைத்திருக்கின்றனர். நாளெல்லாம் கூலியென்ற பெயரில் சில காசுகளையும் இரண்டு சேர் நெல்லையும், கிடைத்த உணவையும் பெற்றுக்கொண்டு பாடுபட்டுத்தேயும் இவர்கள் உழைக்க முடியாத நிலையை அடையும்போது தங்களுடைய பிள்ளைகளை வேலைக்கு அனுப்புகின்றனர். அப்பிள்ளைகளும் செக்கு மாடுகளைப் போல் உழைத்து ஒரே வட்டத்தில் சுற்றி உழன்றுகொண்டிருந்து வந்திருக்கின்றனர்.[42]

இந்த, கொத்தடிமை ஒப்பந்தத்தை ஒவ்வோர் ஆண்டும் மலையாளப் புத்தாண்டு (*விசு*) நாளன்று இரண்டு வேட்டிகளும், *10* சேர் நெல்லும், *10* ரூபாய் பணமும் கொடுத்துப் புதுப்பித்துக்கொள்வார்கள். இந்த அடிமை முறையிலிருந்து விடுபட வேண்டும் என்ற எண்ணம் அவர்களுக்கு எழுந்ததில்லை. மாற்று வேலை வாய்ப்பின்மையும், அச்சமும் அவர்களைக் கட்டுண்டு கிடக்கச் செய்துள்ளன.[43]

1975 அக்டோபர் *25*-ஆம் நாள் முதல் சட்டத்தின் மூலம் அடிமை முறை முற்றிலும் ஒழிக்கப்பட்டுவிட்டது. எனினும் கொத்தடிமை நடைமுறையில் ஆங்காங்குக் காணப்படுகின்றது. கொத்தடிமை முறையை ஒழிப்பதில் நாடு இப்போது துணிந்து இறங்கியிருக்கின்றது. அடிமை முறைக்கு ஆட்பட்டவர்கள் தாங்கள் படுகின்ற துயரங்களைக் கூற அஞ்சுகின்றனர். அடிமை முறையை கட்டிக் காப்பவர்கள் செல்வம் படைத்தவர்களாகவும், சிற்றூர் சமுதாய அமைப்பில் செல்வாக்குடையவர்களாகவும், எதற்கும் துணிந்தவர்களாகவும் இருக்கின்றனர். ஆதலால் அரசு முழு மூச்சோடு முயன்றால் தான் கொத்தடிமை முறையை முற்றிலும் ஒழிக்க இயலுமென்பதை உணர்ந்திருக்கின்றது.[44]

---

40. மா.பா. குருசாமி, ஏற்றம் பெற *20* நோக்கத்திட்டம், திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை, *1976*, ப, *32*,

41. மேலது, ப. *33*

42. மேலது, ப. *33*.

43. மேலது, ப. *33*.

44. மேலது, ப. *34*.

சமுதாய முன்னேற்றத்திற்குச் சமணர்களின் பங்களிப்பு

சு. சுனந்தாதேவி

முன்னுரை

சமணம் என்பது ஓர் உயர்ந்த வாழ்க்கை நெறி. இயற்கைக்கு ஏற்ற வழியில் மனிதனை மனிதனாக வாழச்செய்வது சமணம். இது ஒரு மதமாக உலகில் தோன்றவில்லை. அதை எவரும் தோற்றுவிக்கவும் இல்லை. அகிம்சையை ஆதாரமாகக் கொண்டு சமுதாயத்தில் ஒரு பிரிவினர் தூய வாழ்க்கையை அமைத்துக்கொண்டனர். அகிம்சை ஒன்றினாலேயே அமைதி நிலவ முடியும் என்று நம்பினர். அகிம்சையை உறுதியாகப் பின்பற்ற வேண்டும் என்பதற்காகத் தங்களுக்கு நேர்ந்த துன்பங்களையும் பொறுத்துக் கொண்டனர். அகிம்சைக்காக எதையும் துறக்கத் துணிந்தனர். ஆனால் எதற்காகவும் அகிம்சையைத் துறக்கத் துணியவில்லை. இதன் மூலம் வாய்மை, நேர்மை, தூய்மை, பணிவு, எளிமை, இரக்கம் முதலிய பண்புகள் அவர்களின் வாழ்க்கைப் பண்புகளாயின. இத்தகைய ஒழுக்க வாழ்வின் காரணமாக அவர்கள் உலகை வென்றவர்கள் ஆகின்றார்கள். இவர்களே பின்னர் ஜைனர் என்று அழைக்கப்பட்டனர்.

தொன்மை

இந்திய நாட்டு மிகப் பழைய சமயங்களுள் சமணம் ஒன்றாகும். அது தோன்றிய காலத்தைத் திட்டமாகக் கூற இயலவில்லை. சமண சமயக் கொள்கைகளை முதன் முதலில் உலகில் பரப்பியவர் விருஷப தேவர்.

விருஷப தேவரைப் பற்றிப் பண்டைய வேதங்கள் குறிப்பிடுகின்றன. பாகவத புராணம் பகவான் விருஷப தேவர், ஜைன தர்ம ஸ்தாபகர் என்பதை ஆமோதிக்கிறது. யஜுர் வேதம் பகவான் விருஷபநாதர், அஜித நாதர், அரிஷ்ட நேமி ஆகிய தீர்த்தங்கரர்களின் பெயர்களைக் கூறுகிறது. வேதங்கள் எழுதப்படுவதற்கு முன்னரே ஜைன தர்மம் இருந்ததென்பதில் சிறிதும் ஐயமில்லை என்று டாக்டர். இராதாகிருஷ்ணன் அவர்கள் இந்தியத் தத்துவங்கள் என்னும் தம் நூலில் குறிப்பிட்டுள்ளார்.[1]

சமுதாயச் சிந்தனைகள்

சமணர்கள் வகுத்துள்ள நெறிகள் யாவும் சமுதாய நலனைக் குறித்தனவே தவிர, சமணர்களுக்கு மட்டும் உரியதன்று. சமுதாயத்தில் வாழும் அனைவரையும் சகோதர பாசத்துடன் அணுகிய காரணத்தினாலும், அவர்கள் அனைவரும் உயர்நிலை அடைய வேண்டும் என்ற உயரிய

---

1. சமணம், தா.ஏ. ஞானமூர்த்தி, ப. 1.

நோக்கத்தினாலும் சமணர்கள் அனைவருடைய மேம்பாட்டிற்காகவும் பாடுபட்டுள்ளனர். அனைத்துயிர்களிடத்தும் அன்பு செலுத்த வேண்டும் என்பதே சமணர்களின் அடிப்படைக் கொள்கையாக உள்ளது. அகிம்சை தான் அவர்கள் போற்றும் நெறி. அந்த அகிம்சை அனைத்துயிர்களிடத்தும் அவர்கள் கொண்ட அன்பு காரணமாகத் தோன்றியதாகும்.

'சமண முனிவர்கள் தம் சமயக் கருத்துக்களோடு சமுதாயத்தைச் சீர்திருத்தும் கருத்துக்களை மக்களிடம் வெளியிட்டு அன்றைய சமுதாயத்தின் தடுமாற்றமான சூழ்நிலையைத் திருத்த முயன்றனர்.[2]

ஜைனர்

ஜினர் என்றால் வெற்றி பெற்றவர் என்று பொருள். ஜைனர்கள் என்றால் ஜினரைப் பின்பற்றுவோர் என்பது பொருள். ஜினா என்ற பிராகிருத மொழிச் சொல்லின் வழியே வழங்கப்பட்டதே 'ஜைன்' என்கின்ற சொல். ஜெயம், ஜெயிப்பு என்பதெல்லாம் வெற்றியைக் குறிக்கின்ற வடமொழிச் சொற்கள். ஆகவே ஜைனன் என்றால் உயர்ந்த நெறிகளைக் கடைப்பிடித்து ஒழுகியதன் மூலம் உலகாயதப் பற்றை வென்றவன் என்ற சிறப்புக்குரியவன் ஆகிறான். எனவே ஜைனம் என்ற சொல்லே வாழ்கை நெறியைக் குறிக்கின்ற வகையில் அமைந்துள்ளது. ஒரு தனிப்பட்ட நபரைக் குறிக்கும் வகையில் மதத்தின் பெயர் அமையவில்லை. எனவே, அந்த மதத்தைச் சார்ந்தவர்கள் சமுதாயச் சிந்தனையிலேயே - சமுதாயத்தில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காகத் தம் கோட்பாடுகளை வகுத்துத் தந்திருக்கின்றனர் என்பது புலனாகிறது.

பிற்காலத்தில் மனித சமுதாயம் விரிய விரிய மனிதர்களுக்கு ஆசைகளும் விரிந்து அதனால் துன்பங்களும் பெருகின. அத்துன்பங்களிலிருந்து மனிதர்களை மீட்க ஜைன முனிவர்கள் முற்பட்டனர். அவர்கள் கடுந்தவத்தை மேற்கொண்டு தங்களைத் தாங்களே அடக்கிக் கொண்டு நன்னெறிகளை உணர்த்தினர். பிறர் எப்படி வாழ வேண்டும் என்று அறிவுறுத்தினார்களோ அப்படியே தாம் வாழ்ந்து காட்டினர். அவர்களே 'தீர்த்தங்கரர்கள்' எனக் குறிக்கப்பட்டனர். 'தீர்த்தங்கரர்' என்றால் 'உண்மை ஒளி பரவியவர்' அதாவது பரிசுத்தமானவர் என்று பொருள். மேலும் தீர்த்தம் என்றால் கடல், கரர் என்றால் கடப்பவர், பிறவியாகிய கடலைக் கடப்பவர் என்று பொருள்படும். இந்தத் தீர்த்தங்கரர்கள் ஜைன நெறிகளின் மேம்பட்ட சீலர்களாக அந்நெறிகளைப் பின்பற்றி வாழும் சமுதாயத்தின் வழிகாட்டிகளாக மதிக்கப்பட்டு மக்களின் வணக்கத்துக்கு உரியவர்களாயினர். சமணம் என்பது சிரமணம் என்ற வட சொல்லின் தமிழாக்கமாகும். சிரமணர் என்றால் துறவியர் என்று பொருள். துறவை

2. சமூகவியல் நோக்கில் நீதி இலக்கியம், கே.எம்.கே. கோமதி சங்கர், ப. 3.

வற்புறுத்துகின்ற சமயம் என்ற பொருளில் சமணம் என்று வழங்கப்பட்டது. எனவே இவற்றையெல்லாம் நோக்கும்பொழுது சமணம் என்பது வாழ்க்கை நெறியே என்பது பெறப்படுகின்றது.

சமண மந்திரம்

சமண சமயத்தின் முக்கிய மந்திரமாகப் பஞ்ச நமஸ்கார மந்திரம் சொல்லப்படுகின்றது.

'அருகரை வணங்குகிறேன்,
சித்தரை வணங்குகிறேன்,
ஆசாரியரை வணங்குகிறேன்,
உபாத்தியாயரை வணங்குகிறேன்,
சாதுக்கள் எல்லாரையும் வணங்குகிறேன்'.

என்பதே அவ்வணக்கமாகும். இந்த ஐவர் வணக்கம் எல்லாத் தீமைகளையும் ஒழிப்பதற்காகச் சொல்லப்படுவது.

முதல்நிலை அருகர் நிலை, இது மிக உன்னத நிலை. அடுத்த நிலை சித்தர் நிலை. இவர்கள் முக்தி அடையக்கூடியவர்கள். அடுத்த நிலை ஆசாரிய நிலை. ஆசாரங்களை அணிகலன்களாகக் கொண்டவர் ஆசாரியர். தான் கற்றவற்றைப் பிறருக்கும் எடுத்துக் கூறி நல்வழிப்படுத்துபவர் உபாத்தியாயர். சாதுக்கள் அனைவரும் முனிவர்கள்; இவர்களையும் வணங்குகிறேன், என்பது இவ்வணக்கத்தின் பொருள். ஆசாரியர், உபாத்தியாயர், சாதுக்கள் ஆகியோர் ஒரு நிலையினர். ஒழுக்க நிலையில் இவர்களிடையே வேறுபாடு இல்லை. கடமையில் வேறுபாடு உண்டு. தன்னளவில் தர்மம் காத்தல் சாதுவின் கடமை. அதனுடன் அமையாது பிறருக்குக் கற்பித்தலையும் மேற்கொள்ளுதல் உபாத்தியாயர் கடமை. இவற்றுடன் தீட்சை அளித்தலும், சாது சங்கத்திற்குத் தலைமை ஏற்றலும் ஆசாரியர் கடமை.

இந்த வணக்கம் குறிப்பிட்ட ஒரு கடவுளை வணங்குவதாக அமையாமல் அந்த நெறியைப் பின்பற்றி நடப்பவர்களை வணங்குகிறேன் என்ற பொதுமை நிலையில் அமைந்திருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

சாதி

சாதிகள் மனிதன் கற்பித்துக் கொண்டவை. மனிதனை மனிதனாக மதிக்க வேண்டுமேயொழிய அவனைச் சாதி அடிப்படையில் மதிப்பதை அறவே அகற்ற வேண்டும். தம்மினத்தை இழிவாகக் கருதும் மனப்பான்மை மனிதனிடம் மட்டுமே காணப்படும் இழிகுணம். இத்தவறு அறவே களையப்படுதல் வேண்டும் என்பது சமணத்தின் கொள்கை. பிறப்பினால் உயர்வு தாழ்வு காணும் குறுகிய மனப்பான்மையைச் சமணர்கள் வெறுத்தனர். தாழ்ந்த குலத்தில் பிறந்தவராக இருப்பினும் தம் சமயக் கொள்கைகளைப் பின்பற்றுவாராயின் அவரை

இறைவனாகவே ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று அருங்கலச் செப்பு கூறுகிறது. இன்றைக்கும் சமண சமயத்தில் சாதிகள் இல்லை. 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்ற வள்ளுவர் வாக்கு சமண சமயத்தாரின் மிகச் சிறந்த அறமாகப் போற்றப்படுகிறது. சமுதாய முன்னேற்றத்தில் சமணர்கள் கொண்ட அக்கறை இதன் மூலம் பெறப்படுகின்றது. சமண சமயத்தைப் பின்பற்றுபவர்கள் எல்லோரும் வேறு வேறு மாநிலத்தைச் சேர்ந்தவர்களாயிருப்பினும் அவர்களுக்குள் திருமணங்கள் நடைபெறுவதை இன்றும் காணலாம். இதற்குக் காரணம் சமண சமயக் கொள்கைகள் எல்லோராலும் ஒரே விதமாகப் பின்பற்றப்படுகின்றன. ஒரு முனிவருக்கும் மற்றொரு முனிவருக்கும் இடையிலோ அல்லது ஒரு மாநிலத்திற்கும் இன்னொரு மாநிலத்திற்கும் இடையிலோ அல்லது ஒரு நாட்டுக்கும் இன்னொரு நாட்டுக்கும் இடையிலோ சமண சமயக் கொள்கைகள் மாறுபடுவதில்லை. சமணம், மக்கள் வாழ வேண்டிய முறைகளையே பெரிதும் வற்புறுத்துவதால் அறத்தின் முன் அனைவரும் சமம் என்ற வகையிலே அவர்கள் வாழ்ந்துவருகின்றனர்.

அடிப்படைக் கொள்கைகள்

சமண சமயத்தில் இல்லறத்தார் சாவகர் என்றும், துறவறத்தார் சாரணர் என்றும் அழைக்கப்படுகின்றனர். இருசாரர்களும் கடைப்பிடிக்க வேண்டிய நெறிகளாகப் பல அறங்கள் கூறப்பட்டுள்ளன. அதில் இல்லறத்தார் கடைப்பிடிக்க வேண்டியவை கொல்லாமை, பொய்யாமை, கள்ளாமை, பிறனில் விழையாமை, மிகுபொருள் விரும்பாமை ஆகிய ஐந்தும் ஆகும். துறவிகள் கடைப்பிடிக்க வேண்டியன கொல்லாமை, பொய்யாமை, கள்ளாமை, துறவு, அவாவறுத்தல் ஆகியன.

இந்த விரதங்களை அணுவளவும் தவறாமல் கைக்கொள்ள வேண்டும். சிறு சிறு இடையூறுகள் நேருமாயினும் விரதம் பாழ்படும். விரதத்தின்போது அதற்கு ஏற்படும் இடையூறு அதிசாரம் எனப்படும்.

கொல்லாமையின் அதிசாரங்கள்

விலங்குகளின் உறுப்புகளை அறுத்தல், சாட்டை முதலானவற்றால் அடித்தல், உணவு இல்லாமல் அடைத்துவைத்தல், கயிற்றைக் கொண்டு கட்டிவைத்தல், தாங்க முடியாத சுமையை ஏற்றித் துன்புறுத்தல். மேலும் மனத்தாலும் பிறருக்குத் தீங்கு நினைக்காமலிருத்தல் வேண்டும். கத்தி, கயிறு போன்ற வலிய பொருள்களை யாராவது கேட்டாலும் தரக்கூடாது.

பொய்யாமை

கோள் சொல்லுதல், இரகசியங்களை வெளிப்படுத்துதல், தன்னிடம் தரப்பட்ட பொருளை இல்லை என்று கூறுதல், புறங்கூறுதல், பொய்க்கடிதம் எழுதுதல் ஆகியன.

கள்ளாமை

விற்கும்போது பொருளைக் குறைவாகக் கொடுத்தல், வாங்கும்போது மிகுதியாகப் பெறுதல், அரச ஆணையை மீறி அதிக விலைக்கு விற்றுக் கொள்ளையடித்தல், கலப்படம் செய்தல், கள்ளருடன் கூடி அவர்க்குத் திருட வழி கூறுதல், திருட்டுப் பொருளை விலை குறைவாக வாங்குதல் என்பன.

பிறனில் விழையாமை

காம இச்சைக்கு மாறான இடத்தில் அவ்விச்சையைப் போக்க விரும்புதல், எப்போதும் காம வேட்கையுடன் இருத்தல், விலைமாதிடம் மனம் செலுத்துதல், அவளையே விரும்புதல், வற்புறுத்தி ஒருத்தியைக் கைக்கொள்ளுதல் ஆகியன இதனுள் அடங்கும்.

மிகுபொருள் விரும்பாமை

பொருள்களை வாங்கி நெடுநாள் சேமித்து வைத்தல், ஈயாதிருத்தல், பிறர் செல்வம் கண்டு அழுக்காறடைதல், பொருளாசையால் செய்யவியலாத பணிகளை ஏற்றல், வாகனங்களில் தேவையில்லாமல் சவாரி செய்தல் ஆகியன இதனுள் அடங்கும்.

சாவகர் வாழ்க்கையில் சமணர்கள் கடைப்பிடிக்க வேண்டிய நெறிகள் மதச் சடங்குகளாக இல்லை என்பதை அறிய வேண்டும். இவை அனைத்து மக்களுக்கும் பொருந்தக்கூடிய நெறியே. தனிமனிதன் இவற்றையெல்லாம் பின்பற்றினால் நாடு செழிப்பாக மாறும் என்று அவர்கள் கருதியிருக்கின்றனர். இந்த அறங்களில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடியது 'மிகுபொருள் விரும்பாமை' என்னும் அறமாகும்.

உள்ளத்தாலும், உரையாலும், செயலாலும் பிறருக்கு ஊறு நேரா வகையில் அருளறத்தைக் கடைப்பிடிப்பது போன்று பொருளாலும் பிறருக்கு இன்னல் விளைவிக்கலாகாது என்ற கொள்கையை முதன்முதலில் உலகுக்கு உணரச் செய்த பொருளாதார நிபுணராக விருஷப தேவர் என்ற முதல் தீர்த்தங்கரர் விளங்குகின்றார். மக்கள் சமுதாயம் சமாதானத்துடனும், சகோதர உணர்ச்சியுடனும் வாழ 'கொல்லா நெறி' எத்துணை இன்றியமையாததோ அத்துணை இன்றியமையாதது மிகுபொருளை விரும்பாமை என்னும் கொள்கை.

இல்லற நெறியில் இருப்போர் பொருளின்றி வாழ இயலாது. ஆயினும் பொருள் ஆசை எல்லாத் துன்பங்களுக்கும் காரணமாக இருப்பதால் சிறிது சிறிதாக ஆசையை, பொருள் தேவையை ஒரு வரையறை செய்தல் வேண்டும். பொருளாசையே எல்லா அறங்களுக்கும் பகையாகும். பொருட்பற்று மிகுதியானால் பொய்யுரைக்கவும், களவாடவும், கொலை செய்யவும் மனிதன் துணிந்துவிடுகிறான். எனவே எல்லாத் துன்பங்களுக்கும் மூல காரணமாக விளங்கும் பொருளாசையை வளரவிடாது ஒரு வரையறை செய்ய வேண்டும்.

பொருளை ஓரளவு மட்டுமே வைத்துக்கொள்வது என்ற நிலையை மேற்கொண்டால் அதனை அறவழியில் செலவிடலாம். சமுதாய நலனுக்கும் பயன்படுத்தலாம் என்ற அடிப்படையில் சமண சமயம் மிகுபொருள் விரும்பாமையை வற்புறுத்துகிறது. இந்த மிகுபொருள் விரும்பாமை அறம் ஆதாய நோக்கமற்றது; சமுதாய நலமே அடிப்படையாகக் கொண்டது. இதனால் சுரண்டலின்மை, ஏற்றத் தாழ்வின்மை ஏற்படும்; போட்டியில்லை, பொறாமையில்லை. நிலையான பொருளாதாரச் சூழல் இருக்கும். பொருளாதார ஏற்றத் தாழ்வுக்கு வாய்ப்பின்மையால் வர்க்கப் போராட்டம் ஏற்படுவதற்கான வாய்ப்புகளும் குறைவு. இதனால் பரந்த மனப்பான்மையும் ஓர் ஒழுங்குமுறையும் அனைத்திற்கும் மேலாக மனநிறைவும் ஏற்படும்.

'*1776*-இல் பொருளியலின் தந்தையாகக் கருதப்படுகின்ற ஆடம்ஸ்மித் எழுதிய "நாடுகளின் செல்வம்" என்னும் நூல் வெளிவந்தது. ஆடம்ஸ்மித் பொருளியல் சிந்தனைக்கு அறிவியல் அடிப்படையில் ஓர் உருவம் அமைத்தளித்தார். இதனையே பொருளியல் சிந்தனை வரலாற்றின் தொடக்கமாகக் கருதலாம்'[3] என்று பொருளியல் நிபுணர்கள் பொருளியல் சிந்தனை தோன்றிய காலமாக *18*-ஆம் நூற்றாண்டைக் குறிக்கின்றனர். அறிவியல் அடிப்படையில் பொருளியல் *18*-ஆம் நூற்றாண்டில் தொடங்கியது என்றால் அற அடிப்படையில் பொருளியல் சிந்தனை சமணர்களால் வித்திடப்பட்டது குறிப்பிடத்தக்கது.

மேலும் உணவு, அடைக்கலம், மருந்து, கல்வி என்னும் நான்கு அறங்களைச் செய்வதைத் தம் சமயநெறியாகச் சமணர்கள் கொண்டிருந்தனர். இந்த நான்கும் அன்னதானம், அபயதானம், அடைக்கலதானம், சாத்திரதானம் என்று சொல்லப்படும். இந்த நான்கினையும் இன்னார், இனியார் என்றில்லாமல் அனைவருக்கும் வழங்க வேண்டும் என்பது சமணர்களின் கொள்கை.

நால்வகைத் தானங்களிலும் சிறந்தது அன்னதானம், என்பதனால் அது முதலில் வைக்கப்பட்டது. 'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே' என்பது மணிமேகலை. ஏழை மக்களின் பசியைப் போக்குதல் மிகச் சிறந்த அறம் என்று சமணர்கள் கருதினர். உணவு வடிவில்தான் கடவுள் ஏழையர்க்குக் காட்சியளிப்பான் என்று காந்தியடிகள் கருதியதும் இதன் பொருட்டேயாகும்.

நாடி வருபவருக்குப் பாதுகாப்பு அளித்தல் அபயதானம் என்று சொல்லப்படும். அடைக்கலம் அடைந்தவர்களைக் காப்பதற்கென்று குறிப்பிட்ட சில இடங்கள் இருந்தன. இந்த இடங்கள் பெரும்பாலும் சமணக் கோயில்களை அடுத்தே இருந்தன. இந்த இடங்கள் 'அஞ்சினான் புகலிடம்' என்று பெயர்பெற்றிருந்தன. தென்னார்க்காடு, வட ஆர்க்காடு மாவட்டங்களில் காணப்படும் சாசனங்களில் சில இந்த அஞ்சினான் புகலிடங்களைப் பற்றிக் குறிப்பிடுகின்றன.

---

3. பொருளாதாரச் சிந்தனை வரலாறு, மா.பா. குருசாமி, ப. 1.

'வட ஆர்க்காடு மாவட்டம் போளூர் தாலுகா வட மகாதேவி மங்கலம் என்னும் ஊரில் உள்ள சாசனம் சாசம்புவராயர் சகலலோக சக்கரவர்த்தி ராஜநாராயணனுடைய *19*வது ஆண்டில் எழுதப்பட்டது. இது மகாதேவி மங்கலத்தைச் சேர்ந்த தனிநின்று வென்றான் நல்லூர் என்னும் இடம் அஞ்சினான் புகலிடமாக இருந்தது என்று கூறுகிறது'.[4]

சமணர்கள் தம் மடங்களில் இலவசமாக மருந்து கொடுத்து மக்களின் நோயைத் தீர்த்து வந்தனர். சமணர்கள் மருத்துவத் துறையில் சிறந்திருந்தமையை அவர்கள் இயற்றிய திரிகடுகம், ஏலாதி, சிறுபஞ்ச மூலம் என்ற நூல்களால் அறியலாம்.

அடுத்ததாகிய சாத்திர தானத்தையும் சமணர்கள் மிகுதியாகப் போற்றி வந்தனர். தம் பள்ளிகளில் ஊர்ச் சிறுவர்களுக்குக் கல்வி கற்பித்து வந்தனர். இதனால்தான் கல்விக் கூடங்களுக்குப் பள்ளிக் கூடங்கள் என்ற பெயர் ஏற்பட்டது. ஊர்ச் சிறுவர்களுக்குக் கல்வி கற்பிப்பதோடு மட்டுமின்றிச் செல்வம் படைத்த சமணர்கள் தம் இல்லங்களில் நடைபெறும் திருமண நாள்களிலும் இறந்தோர்க்குச் செய்யும் இறுதிக்கடன் நாள்களிலும் தம் சமய நூல்களைப் பலருக்குத் தானம் செய்வதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். இன்றும் இது நடைமுறையில் உள்ளது.

இந்த நால்வகை தானங்களையும் சமணர்கள் இன்னார் இனியர் என்றில்லாமல் எல்லோருக்கும் வழங்கியதிலிருந்தே சமண சமயத்தவர் அனைவரையும் சம நோக்குடன் நேசித்ததை அறியலாம்.

அனைத்திலும் தலையாய அறம் அகிம்சைதான். அகிம்சையை நேரிய முறையில் கடைப்பிடித்தால் மற்ற அறங்களும் அதற்குள் அடங்கிவிடும். யாரும் தம் உயிரை அருமையாகவும், தூய்மையாகவும் நேசிப்பார்கள். இறப்பதற்கு எந்த உயிரும் விரும்பாது. நோய், சாவு, துன்பம் இந்த மூன்றையும் எந்த உயிரும் விரும்புவதில்லை. ஆகவே அகிம்சைதான் அனைத்திலும் மேலான அறம் ஆகும். ஆதலால் தன்னை நேசிப்பது போலவே பிறரையும் நேசிக்க ஒவ்வொருவரும் முயல வேண்டும். அன்பு செய்ய வேண்டும். உதவி செய்ய வேண்டும். மாறுபட்ட கருத்துடையவர்களையும் பகைத்தல் கூடாது[5] என்பது சமணத்தின் கொள்கை.

இந்தச் சமயத்தின் அடிப்படையானவற்றுள் முக்கியமானவை - துறவு, உள்ளத் தூய்மை, ஒழுக்கத் தூய்மை, தன்னலமின்மை, பிறர்நலம் கருதுதல், கடுங்கோபம் மூட்டப்பட்ட காலத்தும் மன்னித்தல், துன்பம் வந்துற்றகாலை பொறுமையோடு சகித்தல், எல்லா உயிரினங்களிடத்தும் அன்பு பாராட்டுதல் ஆகியன ஆகும். சமண இலக்கியங்கள் இந்தக் கொள்கைகளின் அடிப்படையிலேயே அமைக்கப்பட்டிருக்கின்றன.

---

4. சமணமும் தமிழும், சீனி வேங்கடசாமி, ப. 43.

5. ஜைனரின் தமிழ் இலக்கண நன்கொடை, க.ப. அறவாணன், ப.1.

சமண சமயத்தில் கூறப்பட்டுள்ள சில முறைகள் பின்பற்றுவதற்கு அரியனவாக இருக்கலாம். ஆனால் அவற்றைக் குறைவாக மதிப்பிடுதல் கூடாது. ஆன்மாவின் ஆற்றலை உணர்ந்து கொள்வதற்கு வேண்டிய கடுமையான தன்னொழுக்கம் சாதாரண மக்களிடையே காண்பது அரிதுதான். ஆனால் அதன் காரணமாக அந்த மதத் கொள்கைகள் நடைமுறைக்கு ஒத்தனவல்ல, இயலாதன என்று ஒதுக்கிவிட இயலாது; பெருமுயற்சியின்றிப் பெருநலன்களை அடைய முடியாது. தளர்ச்சியில்லாமலும், இடைவிடாமலும் உழைத்து வந்தால் பெரிய இலட்சியங்களை அடைய முடியும். அதற்கு நெடுங்காலம் பிடிக்கலாம். இலட்சியத்தை அடைவதற்குப் பெருமுயற்சி தேவை; ஆனால் இந்த முயற்சி வீணாகாது.

இலக்கியங்கள் : 'சமணக் காப்பியங்களில் அங்காங்கே சமண சமய ஒழுக்கங்கள் வலியுறுத்தப்படுகின்றன. பொதுவாக இவை காப்பியங்களின் முதன்மைப் பாத்திரங்கள் வழிக் குறிக்கப்படுவதைக் காணலாம்'.[6]

சிலப்பதிகாரத்தில் கதைத் தலைவனாகிய கோவலனின் அறச் செயல்கள் மாடல மறையோன் வாயிலாகக் கூறப்படுகின்றன. மேலும் கோவலனும், கண்ணகியும் ஒரு பூம்பொழிலில் தங்கியிருந்த போது தவறாகப் பேசிய காமுகனுக்கும், பரத்தைக்கும் கவுந்தியடிகள் சாபமிட்ட போதும் கோவலன் அவர்களை அச்சாபத்தினின்றும் விடுவிக்கின்றான். இன்னா செய்தார்க்கும் இனியவே செய்ய வேண்டும் என்ற கொள்கை இதனால் பெறப்படுகின்றது.

சீவகன் வேடுவர்களோடு நடத்திய போரில் வேடுவர்களுக்கு வாள்வடு, அம்புத் தழும்பு ஏற்படாமல் போரிட்டு ஆனிரைகளை மீட்டு ஆயர்களிடம் ஒப்படைத்ததைச் சீவக சிந்தாமணி கூறுகிறது. மேலும் நாய்க்கும் இரங்கிப் பஞ்ச மந்திரத்தை ஓதுதலையும் இக்காப்பியம் உணர்த்துகிறது.

'சூளாமணியில் பயாபதி பாத்திரப்படைப்பில் அகிம்சையுணர்வு ஊடுருவியிருப்பதனை நாம் உணரலாம். வித்தியாதர மன்னன் சுவலனசடி என்பவன் தன் மகள் சுயம்பிரபையைப் பயாபதி மன்னனின் மகன் திவிட்டனுக்குத் திருமணம் செய்துகொடுக்க விரும்புகிறான். இம்மகிழ்ச்சிக்குரிய செய்தியைப் பயாபதிக்கு மரீசி உரைக்கிறான். அதைக் கேட்டுப் பயாபதி ஒன்றும் கூறாமல் அமைதியாக இருக்கிறான். உண்மையில் அவ்வின்பச் செய்தி பயாபதியை எல்லையற்ற மகிழ்ச்சியில் ஆழ்த்துகிறது. மகிழ்ச்சியுணர்வின் பெருக்கால் அவன் ஒன்றும் பேச இயலாதவன் ஆகிறான். ஆனால் அவன் பதில் ஒன்றும் பேசாது இருப்பதை மரீசி தவறாக நினைக்கிறான். பயாபதி தன்னை அவமானப்படுத்தியதாக கருதுகிறான். அவன் சீற்றம் மிக்கவனாய்ப் பயாபதியை மிகவும் இகழ்ந்து பேசுகிறான். ஆனால் பயாபதி சிறிதும் பொறுமையிழக்காமல்

6. சமணம் ப. 54.

நல்வினைப்பயனை எய்தியவர்தாம் வித்தியாதரரின் செல்வத்தை அடையும் பேறு பெறுவார்கள் என்று கூறுகிறான்'.[7]

'பயாபதி இந்நிலவுலகத்தையாளும் பெருமன்னன், பேராற்றல் வாய்ந்தவன். பகைவர் அனைவரையும் புறங்கொண்ட வீரன். இத்தகைய பெருமன்னன் தன்னை இகழ்ந்துரைத்த மரீசியினைத் தன் சீற்ற உரைகளால் கடிந்துரைத்திருக்கலாம். தண்டித்தும் இருக்கலாம். அதற்குப் பதிலாகப் பணிவும், அடக்கமும் நிறைந்தவனாய்த் தான் பேசாமல் இருந்ததற்குரிய காரணத்தை அமைதியாக விளக்குகிறான். இதிலிருந்து தன்னை இகழ்ந்தார் மாட்டும் இனியவே செய்யும் பெருந்தகைப் பண்பு அவனிடத்தில் விளங்கித் தோன்றுவதைக் காண்கிறோம்.'[8]

சிலப்பதிகாரத்தில் பொற்கொல்லனின் கள்ளச் செயலாலும், அரசனிடத்தில் அவன் கூறிய பொய்யாலும் ஏற்படும் மோசமான விளைவுகள் காட்டப்படுகின்றன. சீவக சிந்தாமணி கட்டியங்காரனின் வஞ்சகச் செயலால் நேரும் துன்பங்களை விளக்குகின்றது. சச்சந்தனின் காமத்தால் ஏற்படும் அழிவும் நன்கு விளக்கப்படுகின்றது. மிகுபொருள் விரும்பாமையாகிய அறம் கோவலனின் அறச் செயல்களால் அடைக்கலக் காதையில் விளக்கப்படுகிறது.

இங்ஙனம் கொல்லாமை, பொய்யாமை, கள்ளாமை, பிறர்மனை நயவாமை, மிகுபொருள் விரும்பாமை ஆகிய அறங்களோடு கள்ளுண்ணாமை, ஊனுண்ணாமை, தேனுண்ணாமை, இரவுண்ணாமை போன்ற பிற அறங்களையும் சமண இலக்கியங்கள் வற்புறுத்துகின்றன.

இரவில் நுண்ணுயிர்கள் உணவில் கலந்து விடும் என்பதாலும், உடல் நலத்தையொட்டியும் சமணம் இரவுண்ணாமையை வற்புறுத்துகிறது.

'உண்ணும் உணவு செரிப்பதற்கு மூன்று மணி நேரம் தேவையென்றும் ஆதலால் இரவில் உறங்கப்போகும் சமயத்தில் உணவு உண்ணல் சுகாதாரக் கேடென்றும் கூறி வருவதைக் காண்கிறோம். மேலும் கதிரவன் மறைந்ததும் எபிமிரா என்னும் கண்ணுக்குப் புலனாகாத விஷக்கிருமிகள் உற்பத்தியாகின்றன வென்றும் விஞ்ஞானிகள் கூறுகின்றனர். இதையெல்லாம் என்றோ அறிந்த ஜைன சமயத்தவர்கள் இரவுண்ணலைப் புகழவில்லை'[9].

இலக்கணத் தொண்டு

'தமிழ் இலக்கண அழகிற்குப் பலர் காரணர் எனினும் ஜைனரே தலையாய காரணியர். அவர்தம் பணிகள் தமிழிலக்கணத்தைப் பல கோணங்களில், கோலங்களில் வளமைப்படுத்தின. எழுத்து, சொல், அகப்பொருள், புறப்பொருள்,

7. சமணம், ப. 60.

8. சமணம், ப. 61.

9. தமிழகத்தில் ஜைனம், டிஎஸ். ஸ்ரீபால், ப. 103.

யாப்பு பாட்டியல் என இலக்கண மூலப்படைப்பில் அவை விரிந்தன. குறிப்புரை, பொழிப்புரை, அகல உரை என இலக்கண உரைகளாக அவை பெருகின. செழுமைமிக்க தமிழ்ச் சொல் வளத்தைக் குவித்துக் காட்டும் நிகண்டுகளாக அவை மலர்ந்தன. ஆக, ஜைனரின் இலக்கணப் பணிகள் இலக்கணம் படைப்பது, உரை வரைவது, நிகண்டுகள் எழுதுவது என்று மும்முனைகளில் அமைந்தன,'[10]

'இலக்கியம் முதலான பிற துறைகளை விட இலக்கணத்திற்குச் சைனர் ஆற்றிய பணி மிகுதி. இது ஏன்? வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் கட்டுப்பாட்டோடு வாழ்ந்தவர் சைனர். உலகச் சமயங்களிலேயே மிகுந்த கட்டுத் திட்டம்வாய்ந்தது சைனம் என்பது அறிஞர் கருத்து. உண்பது, உடுப்பது, உறைவது, வாழ்வது அனைத்திலுமே கட்டுப்பாடு, கட்டுப்பாடு என்று வரையறைகளை அமைத்துக் கொண்ட அறிஞர்களின் உள்ளம், மொழியிலும் வரையறை காணத்துடித்தது. அத்துடிப்பின் விளைவே மொழியை வரையறைப்படுத்தும் இலக்கணமாக வளர்ந்தது, விரிந்தது, மலர்ந்தது',[11]

சமணர்களின் இலக்கியப் போக்குகள்

'சமண சமயத்தின் செல்வாக்குத் தமிழகத்தில் பெருகிய காலத்தில்தான் நீதி என்ற சொல்லாட்சி தமிழ் மொழியில் வழங்கத் தொடங்கியது எனலாம்.'[12] காப்பியங்கள், நீதி நூல்கள், நிகண்டுகள், இலக்கண நூல்கள் என்று சமணர்களின் தமிழ்த் தொண்டு விரிந்துறைகின்றது.

'ஜைன இலக்கியத்தினுடைய தனித்தன்மை என்ன என்று கூறினால் அது பல்வேறு மொழி பேசுகின்றவர்களுக்கு மத்தியிலேயும் கூட பொதுமையான ஓர் எண்ணத்தைத் தோற்றுவிக்கக் கூடிய அற அடிப்படையுடையதாக இருக்கிறது. ஏனென்றால் சமணர் கோட்பாடுகள் பொதுவானவையாக அமைந்திருக்கின்றன. ஒழுக்க நெறியாகச் சிந்திக்கிற இயல்பினைத் தமிழ் இலக்கியப் போக்குக்கு இந்தச் சமண இலக்கியங்கள் தந்திருக்கின்றன. மெய்ஞ்ஞானத்தையும், விஞ்ஞானச் செய்திகளையும் இந்தச் சமண இலக்கியங்கள் தந்திருக்கின்றன. அற்புதமான விஞ்ஞானச் செய்திகளை நீலகேசியிலே பார்க்கலாம்.. சூரியனுடைய ஒளிக்கதிர்மேல், மழைத்துளி படுகிறபொழுது வானவில் தோன்றுகிறது என்று விஞ்ஞானம் சொல்கிறது. இந்த விஞ்ஞானத்தை நீலகேசியும் சொல்கிறது.'[13]

'சமணர்கள் தங்களுடைய பெயர்களைக் கூடப் பத்திரப்படுத்தவில்லை. சில சமயங்களிலே சில நூல்களிலே எழுதியவர்கள் யார் என்பதே தெரியாமல் போய்விடுகிறது. அவர்கள் தம்முடைய பெருமைகளைப் பேசாமல் போகிற போக்கை நாம் பார்க்கலாம். அது மட்டுமல்ல. வெளிப்படையாகப் பேசுகிற போக்கு

10. சைனரின் தமிழிலக்கண நன்கொடை ப. 137.

11. மேற்படி.

12. திருக்குறள் நீதி இலக்கியம், க.த. திருநாவுக்கரசு ப. 2.

13. சமண, பௌத்த, கிருஸ்தவ, இஸ்லாமிய இலக்கியங்கள் ப, 23.

அவர்களுடைய நூலிலே காணப்படுகிறது. நீலகேசி ஆசிரியர் சொல்லுகிறார், தான் கனவிலே கண்ட ஒரு நிகழ்ச்சியைத்தான் காவியமாக எழுதுகிறேன் என்று வெளிப்படையாகச் சொல்லியிருக்கிறார்.'[14]

'சமண இலக்கியத்திலே இன்னொரு போக்கு இருக்கிறது. குறிப்பிட்ட இனத்தையோ, குறிப்பிட்ட மொழி பேசுகிறவர்களைப் பற்றிய பழிப்போ இருக்காது. அவர்களைக் கேவலப்படுத்துகின்ற செய்தி இருக்காது. தர்க்க ரீதியாகத் தங்களுடைய கொள்கைகளை நிறுவும் ஒரு பணியிலேதான் அந்தச் சமண இலக்கியங்கள் வளர்ந்திருக்கின்றன.'[15]

மொத்தத்தில் சைன இலக்கியங்கள், படைப்பு விருப்பம், சமுதாய விருப்பம், மதம் பரப்பும் விருப்பம், மதத் தத்துவங்களைப் பரப்பும் விருப்பம் என்ற அடிப்படையிலேயே காணப்படுகின்றன.

'இந்திய இலக்கிய வரலாற்றில் இலக்கியம் சமுதாய நலனுக்காகவே படைக்கப்படல் வேண்டும் என்ற கோட்பாட்டைப் பெரிதாக்கிப் பரப்பியவர்கள் சைனர்களே. "அறம் பொருள் இன்பம் வீடு அடைதலே நூற்பயன்" என்பது சைனர்தம் உள்ளார்ந்த கோட்பாடாகும். எனவே தான் தமிழ், கன்னடம், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளில் எழுதப்பட்டுள்ள அற இலக்கியங்களில் குறிப்பிடத்தக்க பெரும்பங்கைச் சைனர்களே பெறுகிறார்கள்.'[16]

மேலும் அந்தந்தப் பகுதியிலே பேசப்படும் தாய்மொழிக்கே முதன்மை கொடுத்து அந்தந்த மொழியிலேயே இலக்கிய, இலக்கணங்களைப் படைத்த பெருமைக்குரியவர்கள் சமணர்கள்.

கல்வெட்டுகள்

'தமிழகத்தில் வாழ்ந்த ஏராளமான சமண சமயப் பெரியோர்களது பெயர்கள் கழுகுமலை, திருக்காணத்துமலை, சமணர் மலை முதலிய பல்வேறு மலைகளிலுள்ள கல்வெட்டுகளிலும், கட்டிடக் கோயில்களிலுள்ள கல்வெட்டுகளிலும் இடம்பெற்றுள்ளன. இவர்கள் ஆற்றிய தொண்டுகளும், வழங்கிய தானங்களும் அவற்றில் பொறிக்கப்பட்டுள்ளன. இதுபோன்ற கல்வெட்டுப் பாடல்களும் சமண சமய முனிவர்களது பெயர்களையும் அவர்கள் ஆற்றிய அருஞ்செயல்களையும் கூறுகின்றன.'[17]

'சமண சமயச் சான்றோர் தமிழ் சமுதாய வளர்ச்சிக்குப் புரிந்த தொண்டுகள் ஏராளமாகும். குறிப்பாகக் கல்வி, மருத்துவம், வாணிபம் முதலியன நிறைவு பெற அரும்பணி மேற்கொண்டனர். இவைபோன்று இயற்கையன்னையை நம்பி வாழும் ஏருழவர்கள் நலம்பெறவும் தொண்டாற்றி உள்ளனர். திருமலையில்

---

14. மேற்படி, பக். 24-25.
15. மேற்படி, ப. 26.
16. முக்குடை, ஜனவரி 87, ப. 12.
17. கல்வெட்டில் சமணம், ஏகாம்பர நாதன் ப. 17.

கணிசேகர மருபொற் சூரியன் என்பவர் கலிங்கு ஒன்றைக் கட்டியுள்ளதையும், திருநறுங்கொண்டையில் ஆற்றூரைச் சார்ந்த பெருமாள் என்பவர் பயிர் செழித்து அதிக விளைச்சல் கொடுக்கக் குந்தவைப் பேரேரியில் மதகு ஒன்றினைக் கட்டியுள்ளதையும் இங்குள்ள பாடல்கள் வாயிலாக அறிய வருகிறோம். விவசாயப் பெருங்குடி மக்கள் உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற இவர்கள் செய்த அருஞ்செயல்கள் போற்றத்தக்கவையாகும்.[18]

முடிவுரை

இதுவரை சமுதாய உயர்விற்காகச் சமண சமயம் செய்த பணிகள் சொல்லப்பட்டன. அந்தப் பணிகளைச் சமணர்கள் கொள்கை வாயிலாகவும், நடைமுறை வாழ்க்கையாலும், இலக்கியங்களாலும் செய்து வந்தனர் என்பது பெறப்படுகிறது. இதற்கான சான்றுகள் கல்வெட்டுகளின் மூலமும் பெறப்படுகின்றன.

இக்கட்டுரை வாயிலாகப் பெறப்படும் கருத்துக்கள் வருமாறு :

1. சமணம் என்பது ஒரு வாழ்க்கை செறி.
2. சமண நெறிகள் சமுதாய நலனைக் குறிக்கோளாகக்கொண்டு எழுந்தன.
3. சமுதாயத்தில் வாழும் அனைவரும் சமம் என்ற விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியவர் சமணர்.
4. மதத்தாலும், இனத்தாலும், பொருளதாரச் சூழ்நிலையாலும், வேறுபாடுகள் இருந்த காலகட்டத்தில் அனைத்துயிர்களிடத்தும் அன்பு செலுத்த வேண்டும் என்ற கோட்பாட்டை உருவாக்கியவர் சமணர். இதனால் மக்களை ஒருங்கு திரட்டுதல், ஒற்றுமை உணர்வை வளர்த்தல் நம்பிக்கையை வளர்த்தல் ஆகிய நன்மைகளை உருவாக்கினர்.
5. ஜைனம், சமணம், தீர்த்தங்கரர் ஆகிய சொற்கள் வாழ்க்கை நெறி என்ற பொருளையே தருகின்றனவே தவிரக் குறிப்பிட்ட ஒரு கடவுளைக் குறிப்பதாக இல்லை.
6. சமண சமயக் கடவுள் வாழ்த்தும் குறிப்பிட்ட ஒரு கடவுளை வணங்குவதாக அமையாமல் சான்றோரை வணங்கும் வணக்கமாக அமைந்திருக்கின்றது.
7. சமண சமயத்தில் சாதிகள் இல்லை. பிறப்பினால் உயர்வு, தாழ்வு காணும் பழக்கம் இன்றுவரை சமணத்தில் இல்லை.
8. சமண சமயத்தின் அடிப்படைக் கொள்கைகளும் சமுதாய நலனைக் கருத்தில் கொண்டவையாகவே உள்ளன. மதச் சடங்குகளாக இல்லை.
9. மிகுபொருள் விரும்பாமை என்ற அறத்தால் பொருளாதாரக் கோட்பாட்டை நிறுவியவர் சமணர்.

---

18. மேற்படி, ப. 17.

10. அன்னதானம், அடைக்கலதானம், அபயதானம், சாத்திர தானம் என்று நடைமுறை வாழ்க்கையிலும் சமுதாயத் தொண்டு புரிந்தவர் சமணர்.

11. இந்த அறங்களைச் சமணர் மட்டும் அல்லாமல் எல்லோருக்கும் செய்ய வேண்டும் என்ற சமத்துவத்தை ஏற்படுத்தியவர் சமணர்.

12. இலக்கியங்கள் வாயிலாகவும், சமுதாயத் தொண்டிற்கு வழி வகுத்தவர் சமணர்.

13. வாழ்க்கையில் கட்டுப்பாட்டுடன் வாழவேண்டும் என்று கூறிய சமணர் மொழியிலும் வரையறை காணத்துடித்ததன் விளைவே அவர்களின் இலக்கணத் தொண்டாக உருவெடுத்தது.

14. சமயப் பொதுமையை இலக்கியங்கள் வழி வலியுறுத்தினர்.

15. சமணர் பொதுவாக விளம்பரங்களை விரும்புவதில்லை. அதனால் இலக்கியங்கள் சிலவற்றில் ஆக்கியோர் பெயர் இல்லை.

16. குறிப்பிட்ட மொழியையோ, இனத்தையோ பழிக்கும் போக்கு சமண இலக்கியங்களில் இல்லை.

17. படைப்பு விருப்பம், சமுதாய விருப்பம், மதம் பரப்பும் விருப்பம், மதத் தத்துவங்களைப் பரப்பும் விருப்பம் என்ற அடிப்படையிலேயே இலக்கியங்கள் உள்ளன.

18. அந்தந்தப் பகுதியிலேயே பேசப்படும் தாய்மொழிக்கே முதன்மை இடம் தந்திருக்கின்றனர்.

19. கல்வெட்டுகளாலும் இவர்களுடைய தொண்டுகளை அறிய முடிகின்றது.

20. மொத்தத்தில் சமணர் தங்கள் கொள்கைகளாலும், நடைமுறை வாழ்க்கையாலும், இலக்கியங்களின் வாயிலாகவும், சமுதாயத் தொண்டிற்கே வழி வகுத்திருக்கின்றனர். இதனால் ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி இருக்கின்றனர் என்பது மிகையில்லை.

துணைநூற் பட்டியல்

1. கப. அறவாணன், சைனரின் தமிழிலக்கண நன்கொடை, ஜைன இளைஞர் மன்றம், சென்னை, *1974*.

2. ஏகாம்பர நாதன், கல்வெட்டில் சமணம், ஜைன இளைஞர் மன்றம், சென்னை, *1979*.

3. மா. பா. குருசாமி, பொருளாதாரச் சிந்தனை வரலாறு, நான்காம் பதிப்பு, வண்ணன் வெளியீடு, *1970*.

4. கே.எம்.கே. கோமதிசங்கர், சமூகவியல் நோக்கில் நீதி இலக்கியம், சரயு பப்ளிகேஷன்ஸ், தென்காசி, *1989*.

5. தா. எ. ஞானமூர்த்தி, சமணம், சென்னைப் பல்கலைக்கழகம், *1977*.

6. க.த. திருநாவுக்கரசு, திருக்குறள் நீதி இலக்கியம், சென்னைப் பல்கலைக்கழகம், *1977*.

7. சீனி. வேங்கடசாமி, சமணமும் தமிழும், சைவதித்தாந்த நூற்பதிப்புக் கழகம், *1954*.

8. டி.எஸ். ஸ்ரீபால், தமிழகத்தில் ஜைனம், ஜைனமடம், கோலாப்பூர், *1975*.

கட்டுரைகள்

1. க.ப. அறவாணன், சைனர்தம் தமிழிலக்கியப் படைப்புகள் - சில பார்வைகள், முக்குடை, ஜைன இளைஞர் மன்ற இருமொழி திங்களிதழ், ஜனவரி *1987*.

2. மு. மேத்தா, 'சமண இலக்கியம்', சமண பௌத்த, கிறிஸ்தவ, இஸ்லாமிய இலக்கியங்கள், தொகுப்பாசிரியர் - மணவை முஸ்தபா, மீரா பப்ளிகேஷன்ஸ், சென்னை.

சமூக விழிப்புணர்விற்குப் பெரியார் ஈ.வெரா.வின் கொடை

இரா. சக்குபாய்

இந்தியத் துணைக்கண்டத்தில் இந் நூற்றாண்டில் வாழ்ந்தவர்களுள் முதலிடம் பெறத்தக்க மனித நலச் சிந்தனையாளர் இருவர். ஒருவர் மராட்டிய மாநிலத்தில் தோன்றிய பாபா சாகேப் அம்பேத்கார். மற்றவர் தமிழ்நாட்டில் தோன்றிய பெரியார் ஈ.வெ. இராமசாமி.

தம் தொண்டின் நோக்கம், காரணம், நடைமுறைப்படுத்தும் முறை ஆகியன பற்றிப் பெரியாரே கூறியுள்ளார். அது வருமாறு:

> ஈ. வெ. ராமசாமி என்கின்ற நான் திராவிட சமுதாயத்தைத் திருத்தி உலகில் உள்ள மற்ற சமுதாயத்தினரைப் போல் மானமும் அறிவும் உள்ள சமுதாயமாக ஆக்கும் தொண்டை மேற்போட்டுக் கொண்டு அதே பணியாய் இருப்பவன். அந்தத் தொண்டு செய்ய எனக்கு யோக்கியதை இருக்கிறதோ இல்லையோ, இந்த நாட்டில் அந்தப் பணி செய்ய யாரும் முன்வராததினால் நான் அதை மேற்போட்டுக்கொண்டு தொண்டாற்றி வருகிறேன்.
>
> இதைத் தவிர வேறு பற்று ஒன்றும் எனக்கு இல்லாததாலும் பகுத்தறிவையே அடிப்படையாய்க்கொண்டு கொள்கைகளையும் திட்டங்களையும் வகுப்பதாலும், நான் இத்தொண்டுக்குத் தகுதி உடையவன் என்றே கருதுகிறேன்.
>
> சமுதாயத் தொண்டு செய்பவனுக்கு இதுபோதும் என்றே கருதுகிறேன்'[1]

பதவி நோக்கமின்றி, தமிழ்ச் சமூக விழிப்புணர்வுக்கு அவர் ஆற்றிய தொண்டுதான் அவரைப் பெரியாராக உயர்த்திற்று. பெரியார் (தமிழ்ச்) சமூக விழிப்புணர்வுக்கு ஆற்றியுள்ள பங்கைப் புரிந்து கொள்ளவும், மதிப்பீடு செய்யவும் வேண்டுமானால் அவர் காலத்துச் சமூக நிலையைப் பற்றி ஓரளவேனும் அறிந்திருத்தல் முதல் தேவை.

வருணப் பாகுபாடு

'ஆறறிவு பெற்ற உயிரே மக்கள்'[2] எனப்படும் என்பார் தொல்காப்பியர். அறிவினடிப்படையில் சமமான மக்கள் பிறப்பினடிப்படையிலும் சமமாவர் என்ற பொருளில் திருவள்ளுவர் "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்"[3] என்கிறார். இதுவே

---

1. வே. ஆனைமுத்து (ப.ஆ.), பெரியார் ஈ.வெரா. சிந்தனைகள், முதல் தொகுதி
2. தொல்காப்பியர், தொல்காப்பியம்-பொருளதிகாரம், 571.
3. திருவள்ளுவர், திருக்குறள், 972.

தமிழர் வகுத்த நெறி. இந் நெறிதான் எச் சமூகத்தவருக்கும் இருக்க வேண்டிய மனிதநெறி; ஆனால் ஆரியர் வகுத்த வேதங்களும் தரும சாத்திரங்களும் 'பிறப்பு ஒவ்வா' என்கின்றன. இன்றளவும் வைதீக நெறித் தலைவர்கள் இக் கருத்தையே வற்புறுத்தி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

> அந்தப் பிரம்மாவானவர் இந்த உலகத்தைக் காப்பாற்றுவதற்காக தன்முகம் தோள் தொடை பாதம் இவைகளினின்றுமுண்டான பிராமண, க்ஷத்திரிய, வைசிய, சூத்திர வருணத்தார்க்கு இம்மைக்கும் மறுமைக்கும் உபயோகமான கருமங்களைத் தனித் தனியாகப் பகுத்தார்[4]

என்கிறார் மனு. தரும சாத்திரம் என்ற பெயரில் வகுக்கப்பட்ட அறமற்ற நீதி இது. இதன் விளைவாகப் பார்ப்பனராகப் பிறக்காத அனைவரும் தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் சூத்திரர்தான். நால் வருணப் பாகுபாட்டை ஏற்காதவர்களைப் பஞ்சமர், அவர்ணஸ்தர் என இழிவு செய்தனர்.[5] இம் மண்ணின் மைந்தர் மீது சுமத்தப்பட்ட இவ்விழிவை சென்னை மாநிலத்தின் *1901*-ஆம் ஆண்டு குடிக்கணக்கு படம் பிடித்துக் காட்டுகிறது. அதுவருமாறு:

தகுதி	சாதிகளின் பெயர்	மொத்த மக்கள் தொகையில் அந்தச் சாதியினரின் விழுக்காடு
1	பிராமணரும் உட்பிரிவினரும்	3. 50
2	க்ஷத்திரியரும் உட்பிரிவினரும்	1. 00
3	வைசியரும் உட்பிரிவினரும்	1. 50
4	சத் சூத்திரர் (அ) நல்ல சூத்திரர்	31. 00
5	பிராமணர்களைப் புரோகிதர்களாக அமர்த்திக் கொள்கிற-தொட்டால் தீட்டு மிகக் கொஞ்ச அளவே இருக்கிற சூத்திரர்கள்	1625
6	பிராமணர்களை எப்போதாவது புரோகிதர்களாக உபயோகிக்கிற-ஆனால் தொட்டால் தீட்டு உண்டாக்குகிற சூத்திரர்கள்	11. 00
7	பிராமணர்களைப் புரோகிதர்களாக உபயோகிக்காத - தொட்டால் தீட்டு உண்டாக்குகிற சூத்திரர்கள்.	575
8	தொடாமலேயே தீட்டு உண்டாக்குகிற - ஆனால் மாட்டு இறைச்சி சாப்பிடாத சாதியினர்	825
9	மாட்டு இறைச்சி சாப்பிடுகிற - ஆனால் தொடாமலிருந்தால் தீட்டு உண்டாக்காமல் இருக்கிற சாதியினர்	350

4. மனுநீதி ஒரு குலத்துக்கு ஒரு நீதி, ப.*11* (அத்.*1*, சு.*100*).

5. முரசொலி மாறன், திராவிட இயக்க வரலாறு, ப.*38*.

10	மாட்டு இறைச்சி சாப்பிடுகிற - ஆனால் தொடாமல் கூட தீட்டு உண்டாக்குகிற சாதியினர்	1475
11	பிராமணர்களின் புரோகித அதிகாரத்தை மறுக்கும் சாதியினர்	300

மூன்றரை விழுக்காட்டுப் பார்ப்பனர் 94 விழுக்காடு உள்ள மண்ணின் மைந்தரை சற் சூத்திரர், தொட்டால் தீட்டு உண்டாக்குபவர், தொடாமலேயே தீட்டு உண்டாக்குபவர் என இழிவுபடுத்தியுள்ளனர்.

சுவர்க்கத்தின் பொருட்டும், உயிர் (சீவனம்) வாழ்க்கையின் பொருட்டும் பிராமணனையே தொழ வேண்டும்.[6] பிராமணனுக்குத் தொண்டு செய்யவே சூத்திரனைப் பிரம்மா படைத்திருக்கிறார். ஆதலின் சூத்திரனைக் கூலி கொடுத்தோ, கொடாமலோ பிராமணன் வேலை வாங்கலாம்.[7] என்ற மனு தரும நெறி நடைமுறையிலும் பின்பற்றப்பட்டுவந்தது.

மனித சமத்துவத்திற்கு எதிரானதும், சமூகச் சுரண்டலை உள்ளடக்கியதுமான ஆரிய வருணைப் பாகுபாடு தமிழர்க்கு உரிய நெறியன்று என்று அம்பலப்படுத்துகிறார் பெரியார்.

> ஜாதிகள் பார்ப்பனரால் (ஆரியர்களால்) ஏற்படுத்தப்பட்டவையேயாகும். ஆரியர் நம் நாட்டிற்கு வருவதற்கு முன் நம் நாட்டில் ஜாதி என்பதே கிடையாது.
>
> ஜாதி என்ற சொல் தமிழ் அன்று. ஆரிய மொழிச் சொல்லேயாகும். ஜாதிகளின் பெயர்களான பிராமணன்-க்ஷத்திரியன் -வைசியன்-சூத்திரன் என்ற சொற்களும் தமிழ் அல்ல; ஆரியமொழிச் சொற்களேயாகும். ஜாதிகள் பற்றி ஏற்படுத்தப்பட்டிருக்கிற ஆதாரங்களான சாஸ்திரம், மனுதர்மம், புராணம் முதலியயாவும் ஆரிய மொழியில் ஆரியர்களால் ஏற்படுத்தப்பட்டவையே ஒழிய இவை எவையும் தமிழ் மூலம் அல்ல. ஜாதிக்கேற்ப உரைக்கப்பட்ட கடவுள்கள் யாவும் ஆரிய மொழிப் பெயரைக் கொண்டவையே ஒழியத் தமிழ்ப் பெயைரக் கொண்ட கடவுள் எதுவுமே இல்லை. ஜாதி இழிவை நிலைக்க வைக்க ஏற்படுத்திய கர்ப்ப கிருகம் என்னும் சொல்லும், மூலஸ்தானம் என்னும் சொல்லும், ஆகமம் என்னும் சொல்லும் யாவுமே ஆரிய மொழிச் சொற்களேயாகும். ஆகவே ஜாதி சம்பந்தமான எந்தக் காரியமும் க்ருத்தும் யாவும் தமிழனுக்குச் சம்பந்தப்பட்டவை அல்லவே அல்ல.[8]

'பார்ப்பனன் தன்னை மேல்சாதி என்றும் பிராமணன் என்று அழைத்துக் கொள்ளுவதிலும், நாமும் அவனைப் பிராமணன் என்று சொல்லுவதிலும் அவனுக்குப் பெருமை உண்டு. ஆனால் நம்மை அவன் சூத்திரன் என்று அழைப்பதிலும், சாத்திரம், சட்டம் நம்மை சூத்திரர் என்று

6. மனுநீதி ஒரு குலத்துக்கு ஒரு நீதி, ப.15 (அத்.8சு.235).
7. மே. நூல், ப.15 (அத்.8, சு.413).
8. கோ. இமயவரம்பன், உண்மை, மலர் 1, இதழ் 2, பிப்ரவரி 1970, ப. 1.

குறித்து வைத்துள்ளதிலும் நமக்கு இழிவும், வாழ்க்கைக் கேடும், முன்னேற்றத் தடையுமிருக்கின்றன. அதனால் நாம் திராவிடன் அல்லது தமிழன் என்ற பெயரை வைத்துக்கொள்ள வேண்டும்[9] என்று சூத்திர இழிவுப் பட்டத்தை தூக்கியெறிய வழி காட்டினார்.

போரில் புறங்காட்டி ஓடுபவன்; போரில் கைதியாகப் பிடிக்கப்பட்டவன்; பிராமணனிடத்தில் பக்தியினால் ஊழியம் செய்கிறவன்; விபசாரி மகன்; விலைக்கு வாங்கப்பட்டவன்; ஒருவனால் கொடுக்கப்பட்டவன்; தலைமுறை தலைமுறையாக ஊழியம் செய்கிறவன்[10] எனச் சூத்திரர்க்கு இலக்கணம் உரைக்கிறார் மனு. இவ் இழிவைப் புரிந்து கொண்டால் மட்டுமே பெரியார் இம் மண்ணின் மைந்தர்க்கு மொழியினடிப்படையில்-இனத்தின் அடிப்படையில் வழங்கிய பெயர்களின் அருமை புரியும்.

தீண்டாமை

தீண்டாமை, அண்டாமை, காணாமை ஆகியன வைதீக மதமான இந்து மதம் பெற்றெடுத்துப் போற்றும் நச்சுக் குழவிகள். வேத நெறியை ஏற்காத, பார்ப்பன மேலாதிக்கத்தை மறுத்துவிட்ட மக்களையே பஞ்சமர் அவர்ணஸ்தர் என்றனர். அவர்கள் தொடாமலேயே தீட்டு உண்டாக்குவர் என்றனர். தீண்டாமையின் கொடுமையினை,

> தீண்டத்தகாதவர் என்ற சொல்லே அவர்களின் நோய்கள், துன்பங்கள் ஆகியவற்றின் சுருக்கம்தான்; அது தனிமனித ஆளுமைப் பண்பின் வளர்ச்சியைத் தடுப்பதோடு நல்ல பொருளாதார நிலையை அடையவும் தடையாக உள்ளது; அத்துடன் குடிஉரிமைகளைப் பறித்துள்ளது. சான்றாகக் கொண்கானத்தில் பொதுச் சாலையைத் தீண்டத்தகாதவர் பயன்படுத்த முடியாது; உயர்ச்சாதிக்காரன் தன்னைக் கடக்க நேர்ந்தால் தன் நிழல் அவன் மீது படாத தூரத்திற்குப் பாதையினின்றும் விலகிச் சென்று நிற்க வேண்டும். தீண்டத் தகாதவன் குடிமகன் கூட அல்லன். குடிஉரிமை என்பது உரிமைகளின் தொகுப்பாகும். அவை, *1.* தனி மனித உரிமை, *2.* தனிமனிதப் பாதுகாப்பு, *3.* தனிச்சொத்து வைத்துக் கொள்ளும் உரிமை, *4.* சட்டத்தின் முன் சமம், *5.* மனச்சான்று உரிமை, *6. (ஒன்றைக் குறித்து)* கருத்து கொள்ளவும் பேசவும் உரிமை, *7. (கூட்டமாகக்)* கூடும் உரிமை, *8.* நாட்டு அரசியலில் பங்குபெறும் உரிமை, *9.* அரசு நிறுவனத்தை நிர்வகிக்கும் (பங்குபெறும்) உரிமை என்பனவாகும். இவற்றுள்

---

9. வே. ஆனைமுத்து (ப.ஆ.), பெரியார் ஈ.வேரா. சிந்தனைகள், முதல் தொகுதி, ப.85.

10. மனுநீதி ஒரு குலத்துக்கு ஒரு நீதி, ப.14, (அத்.8, சு.415).

> நாட்டு அரசியலில் பங்குபெறும் உரிமையும் அரசு நிறுவனத்தை நிர்வகிக்கும் உரிமையும் குடி உரிமையும் தரவல்ல மிக முக்கியமான உரிமைகளாகும். தீண்டத்தகாதாரின் தீண்டாமை இவ்வுரிமைகளை அவர்கள் எட்ட முடியாத தொலைவில் வைத்துள்ளது.[11]

என்று அம்பேத்கார் விளக்குவார். இக்கொடுமையினைப் பட்டறிந்தால் மட்டுமே உணரமுடியும்.

நீக்ரோக்களைக் கொடுமைப்படுத்தும் வெள்ளையரின் இனவெறியை நிறவெறியைக் கண்டிக்க முற்பட்டவர்கள் தாங்கள் அதனினும் சிறிதளவும் குறையாத கொடுமையைத் தாழ்த்தப்பட்டவர்க்கு இழைக்கத் தயங்குவதில்லை. இதனைச் சுட்டிக் காட்டும் பெரியார்,

> தீண்டாமை என்னும் விஷயத்திலிருக்கும் கொடுமையும் மூடத்தனமும் மூர்க்கத்தனமும் யோசித்துப் பார்த்தால், அதை மன்னிக்கவோ அலட்சியமாய்க் கருதவோ, நாளை பார்த்துக் கொள்ளலாம். இப்போது அதற்கு என்ன அவசரம்? என்று காலந்தள்ளவோ சிறிதும் மனம் இடந்தருவதில்லை.[12]

என உடனடியாய் அதை ஒழித்துக் கட்ட வேண்டிய தேவையை வலியுறுத்துவார்.

மனிதத் தன்மைக்கும், நியாயத்திற்கும், பகுத்தறிவிற்கும் ஒவ்வாத கொடுமைகள் பல இருப்பினும் முக்கியமாகவும் அவசரமாகவும் ஒழிக்கப்பட வேண்டிய கொடுமைகள் இரண்டு. அவற்றுள் முதலாவது,

> இந்திய மக்களிலேயே பலகோடி ஜனசங்கியையுள்ள பல சமூகங்களைப் பிறவியிலேயே தீண்டாதவர்கள் என்று கற்பித்து, அவர்களைப் பகுத்தறிவற்ற மிருகங்களிலும் கேவலமாகவும், உணர்ச்சியற்ற பூச்சி புழுக்களினும் இழிவாகவும் நடத்துவதாகும்.[13]

என்கிறார்.

ஆதலின் தீண்டாமை ஒழிப்புப் போராட்டத்தை முனைப்புடன் முன்னின்று நடத்த ஒருபோதும் அவர் தயங்கவில்லை. இந்நாட்டு மக்களுக்குக் கல்வி வழங்க சேரமாதேவி குருகுலம் தொடங்கப்பட்டது. அது வ.வே.சு. அய்யர் தலைமையில் நடைபெற்றது. அப்போது தமிழ்நாடு காங்கிரசுக் கட்சியின் இன்றியமையா பொறுப்புக்களை பெரியார் வகித்து வந்தார். கானாடு காத்தான் சண்முகம் குருகுலம் நடத்துவதற்கான நிலம் அளித்தார். உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வாழ்ந்த தமிழர்கள் நிறையப் பொருள்

---

11. Dr. Babasaheb Ambedkar Writings and Speeches, vol.1, p.256.
12. வே. ஆனைமுத்து (ப.ஆ.), பெரியார் ஈ.வெரா. சிந்தனைகள், முதல் தொகுதி, ப.167.
13. மே. நூல், ப.166.

வழங்கினர். தமிழ்நாடு காங்கிரசு இயக்கத்தினின்றும் முதல் தவணையாக ரூபாய் 5 ஆயிரம் வழங்கப்பட்டது. இக் குருகுலத்தில் பார்ப்பன மாணவர்க்கு உள்ளும், பார்ப்பனரல்லா மாணவர்க்கு வெளியிலும் உணவு வழங்கப்பட்டது. இவ்வாறு வழங்கப்பட்டதற்குக் காரணம் 'சூத்திரர் பார்வையே பார்ப்பனர் உண்ணும் உணவைத் தீட்டாக்கிவிடும்'[14] என்ற மனுதருமக் கொள்கையைப் பின்பற்றியதேயாகும். வ.வே.சு. அய்யரின் இச்செயலைக் கடுமையாகக் கண்டித்ததுடன் இரண்டாவது தவணைப் பணத்தை வழங்க மறுத்துவிட்டார், பெரியார்.[15] எதிர்ப்பு வலுத்து, பின்னாளில் குருகுலம் மூடப்பட்டது.

1924-ஆம் ஆண்டு கேரளத்தில் உள்ள வைக்கத்திலேயே தாழ்த்தப்பட்டவர் தெருவில் நடக்கும் உரிமை வேண்டி ஜார்ஜ் ஜோசப், வழக்கறிஞர் மாதவன், பாரிஸ்டர் கேசவமேனன், டி.கே.மாதவன் முதலானவர் சேர்ந்து போராட்டத்தைத் தொடங்கினர். அவர்களைத் திருவனந்தபுர அரசு சிறைப்படுத்திவிட்டது. இந்நிலையில் அவர்கள் விடுத்த அழைப்பை ஏற்று அப்போராட்டத்தை முன்னின்று நடத்தினார் பெரியார். அரசின் தடை ஆணையை மீறிப்போராட்டம் நடத்தியதால் இருமுறை சிறையிலடைக்கப்பட்டார். நாளொன்றுக்கு 1000 பேர் அளவில் இப்போராட்டத்தில் கலந்து கொண்டனர். அரசன் இறந்துபட்டான். இறுதியில் போராட்டத்தை நிறுத்த வேறு வழியின்றி தெருவில் நடக்கும் உரிமையைத் தாழ்த்தப்பட்டவர்க்கு வழங்கினாள் அரசி. காந்தியார், இராசகோபாலாச்சாரியார், எஸ். சீனுவாச ஐயங்கார் ஆகியோர் இப்போராட்டத்திற்கு ஆதரவாக இல்லாதது ஈண்டு குறிப்பிடத்தக்கது.[16]

இந்தியாவில் நடந்த முதல் சாதி ஒழிப்புப் போராட்டம் வைக்கம் போராட்டம்தான். இதில் வெற்றி ஈட்டக் காரணமான பெரியாருக்குத் திரு.வி.க. "வைக்கம் வீரர்" என்று பாராட்டுரை வழங்கினார்.

இந்தியாவில் முதன்முதலில் சுசீந்திரம் கோயிலில்தான் கோயில் நுழைவுக்கென போராட்டம் துவக்கப்பட்டது. கோட்டயத்தில் பெரியாரின் தலைமையில் நடைபெற்ற மாநாட்டில் சாதி ஒழிப்பு, கோயில் நுழைவு உரிமை தொடர்பான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அடுத்து எர்ணாகுளத்தில் பெரியார் தலைமையில் கூட்டப்பட்ட மாநாட்டில் சாதி ஒழிப்புக்காகச் சாதியில்லாத இசுலாம் மதத்தில் சேர்ந்துவிடுவது என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. கிறித்துவ மதத்தில் சேர்வது என்றும் தீர்மானம் கொண்டுவந்தனர். இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்ட அன்றே 50 பேர் இசுலாமிய மதத்தில் சேர்ந்துவிட்டனர். பிறகு பலர் மதம் மாறினர். முசுலீமாக மதம் மாறிய (புலையர்), நாயர் கடையில் ஏறி பொருள் வாங்கச் சென்றார். இதனால் கடைக்காரன் அடிக்க இந்து-முசுலீம் கலவரம் ஏற்பட்டது. புலையர்கள்

14. மனுநீதி ஒரு குலத்துக்கு ஒரு நீதி, ப.14 (அத்.3, சு.241).
15. வே. ஆனைமுத்து (ப.ஆ.), பெரியார் ஈ.வெரா. சிந்தனைகள், பக். 351-352.
16. மே. நூல், பக்.87-92.

இசுலாமிய மதத்தில் சேர்வதைத் தடுக்க சர். சிபி. இராமசாமி அய்யர் (திவான்), அரசன், 'கோவிலைத் திறந்து விடுவதுதான் வழி' என்று கூறினார். அதன்படி அரசன் கோயில் எல்லா இந்துக்களுக்கும் திறந்துவிடப்படும் என்று அறிவித்தார்.[17]

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, பார்ப்பனரால் சூத்திரர் என இகழப்படும் பார்ப்பனரல்லாதார் கொடுமைகள் இழைத்துவருகின்றனர். இம்மக்களை,

> சூத்திரன் என்கின்ற 'கலத்தில்' நீங்கள் பதியப்பட்டிருப்பதில் உங்களுக்குச் சிறிதாவது மானம் இருந்தால் பறையன் என்கின்ற பட்டம் போகவேண்டுமென்பதில் கடுகளவாவது வருத்தமிருக்குமோ? பறையன் பட்டம் போகாமல் உங்களுடைய சூத்திரப் பட்டம் போய்விடும் என்று கருதுவீர்களேயானால் நீங்கள் வடிகட்டின முட்டாள்களேயாவீர்கள்[18]

எனக் கடுமையாக இடித்துரைக்கின்றார்.

தீண்டாமையை வற்புறுத்தும் மதத்தையும், மத ஆதாரங்களையும் போற்றிக் கொண்டே தீண்டாமையை ஒழிக்கப் பாடுபடுவோர் 'அடியற்ற ஓட்டைக் குடத்தினால் நீரிறைக்கும் மூடருக்கு ஒப்பானவர்'[19].

இந்து மதத்தைப் போற்றுவோர் மட்டுமன்று, தங்கள் இழிவை ஒழித்துக்கொள்ள முற்படும் தாழ்த்தப்பட்டவரும் மதத்தை விட்டொழித்தாலல்லது ஈடேற வழியில்லை.

> உங்கள் மதம் போகாமல் ஒருநாளும் உங்களது தீண்டாமைத் தன்மையோ, பறைத் தன்மையோ ஒழியவே ஒழியாது என்பது கல்லுப் போன்ற உறுதி.[20]

என்பது அவர் துணிபு.

சாதியில்லா நாட்டினின்றும் வந்த கிறித்துவ நெறியும் இங்குள்ள தீண்டாமைக்கு இந்நாட்டில் இடம்கொடுத்துவிட்டது. ஆதலின் தீண்டாமைக்கு இடமளிக்காத 'இசுலாமே இழிவு நீக்க மருந்து' என்றார்.

காலமெல்லாம் சாதி ஒழிப்புக்காகப் பாடுப்பட்ட அம்பேத்கார் இறுதியில் தமது காலம், பணம், முயற்சியெல்லாம் விழலுக்கிறைத்த நீரானது கண்டு மனம் வெதும்பியே 'நான் ஒரு இந்துவாகச் சாகமாட்டேன்'[21] என்று

---

17. மு.நூல், ப.93.

18. மு.நூல், ப.60.

19. மு.நூல், ப.63.

20. மு.நூல், ப.64.

21. அரசியல் சட்ட வரைவுக் குழுவின் தலைவராக இருந்த டாக்டர் அம்பேத்கார், இப்பணியில் தாம் முற்றிலும் புறக்கணிக்கப்பட்டதை மனம் நொந்து 'நான் ஒரு வாடகைக் குதிரையாகத்தான் இருந்தேன்' எனக் கூறினார்.

வஞ்சினம் பூண்டார். தம்முடன் பல்லாயிரக்கணக்கானவரையும் புத்த நெறியைத் தழுவச் செய்தார். 'ஏன் இந்த மதமாற்றம்?' என்று நாட்டு மக்களுக்குத் தெளிவுபடுத்தினார்.

தமிழ்நாட்டில் நாடார் சமூகத்தினர் உட்பட தாழ்த்தப்பட்டவர் கிறித்துவ நெறியைத் தழுவிக் கொண்டதற்கும் இதுவே காரணம். மீனாட்சிபுரத்தில் தாழ்த்தப்பட்டவர் இசுலாமிய நெறியைத் தழுவிக் கொண்டதற்கும் இதுவே காரணம். இதைவிட்டுவிட்டு மத மாற்றத்துக்கு வேறு காரணங்களைக் கற்பித்துக்கூறுவோர் பேச்சு வாய் புளித்ததோ மாங்காய் புளித்ததோ என்பது தான்.

பெயர் சூட்டல்

சூத்திரனுக்கு இழிவானதும், அடிமை என்ற பொருள் தரும் பெயரைச்சூட்டவும் சொல்கிறது மனுதருமம்.

> பிராமணனுக்கு மங்களத்தையும், க்ஷத்திரியனுக்குப் பலத்தையும், வைசியனுக்குப் பொருளையும் சூத்திரனுக்குத் தாழ்வையும் காட்டுகிறதான பெயரை இடவேண்டியது. சூத்திரனுக்குத் தாசன் என்ற தொடர் பெயராக இடவேண்டியது.[22]

மனு விதித்த இவ்வாணைக்கேற்ப இழிவுப் பெயர்களைச் சுமக்கும் அவல நிலையை மாற்ற முற்பட்டார் பெரியார்.

கடவுள், சாதி, சமயம் தொடர்பானதும், மூடநம்பிக்கையின் பாற்பட்டதும் (பிறமொழிகளுக்குரியதும்) ஆன பெயர்களை விலக்கி அறிவார்ந்த பெயர்களைச் சூட்டும் வழக்கத்தை உருவாக்கினார். அவர் சூட்டிய பெயர்களுள் சில வருமாறு:

வைக்கம்	-	தாழ்த்தப்பட்டோர் தெருவில் நடக்கும் உரிமைக்கென நடத்திய போராட்டம் நடந்த இடம்
உருசியா & மாச்கோ	-	பொதுவுடைமை இயக்கம் வென்ற நாடு, உருசியாவின் தலைநகர்
அன்புமணி, அறிவுமணி, வீரமணி	-	மனிதர், அன்பு, அறிவு, வீரம் உடையவராக இருக்க வேண்டும் என்ற அடிப்படையில் இட்ட பெயர்கள்.

இம்மண்ணில் மனுதருமம் உருவாக்கி வைத்திருந்த அடிமைப்பட்ட எண்ண ஓட்டத்தையே தலைகீழாக இயல்பான, பகுத்தறிவுக்கிசைவானதாக மாற்றிப்போட்டார் பெரியார்.

---

22. மனுநீதி ஒரு குலத்துக்கு ஒரு நீதி, ப.13 (அத்.2, சு.31-32).

சாதி ஒழிப்பு

இந்தியாவை அடிமைப்படுத்தியாண்ட ஆங்கிலேயன் ஆட்சியினின்றும் அகன்றான். *1947*-ஆம் ஆண்டில் இந்தியா விடுதலை பெற்றது. தனக்குரிய சட்டத்தை இயற்றிக் கொண்டு *1950*-இல் குடியரசு நாடாகவும் ஆயிற்று. *1077* நாள் செலவு செய்து உருவாக்கிய இந்தச் சட்டத்தில் மனிதத் தன்மைக்கு மாறான இந்து மதச் சட்டம் இடம்பெற்றுள்ளது. அடிப்படைச் சட்டத்தில் சமத்துவம் பேசிவிட்டு இந்து மதச் சட்டத்தில் பார்ப்பனர் உயர்வும், பார்ப்பனரல்லா மக்கள் இழிவும் பாதுகாக்கப்பட்டுள்ளது. ஆரிய வேதங்களும், மனு தருமங்களும் ஆதார நூல்களாக ஆக்கிவிட்டனர்.

பார்ப்பனரான அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர், டிடி. கிருஷ்ணமாச்சாரி, என். போபால்சாமி அய்யங்கார், கே.எம்முன்ஷி ஆகியோர் சட்டவரைவுக் குழுவில் இடம்பெற்றதே இதற்குக் காரணம். ஆதலின் சூத்திரர் எனப்படும் மக்களின் சார்பாளர் புறக்கணிக்கப்பட்ட நிலையில் செய்யப்பட்ட இந்திய அரசியல் சட்டம் தமிழரை இழிவு செய்தலின் சட்டத்தைத் திருத்தச் சொல்லி சாதி ஒழிப்புக் கிளர்ச்சியைத் துவக்கினார் பெரியார். *1957*- ஆம் ஆண்டு நவம்பர் *26*-ஆம் நாள் கிளர்ச்சிக்கான நாளாகக் குறிக்கப்பட்டது. சூத்திரர் என இகழும் 'சட்டத்தைக் கொளுத்துங்கள், சாம்பலை மந்திரிக்கு அனுப்புங்கள்'[23] என மக்களுக்கு வேண்டுகோள் விட்டார்.

இந்நிலையில் தமிழ் நாட்டிற்கு வந்த இந்தியாவின் தலைமை அமைச்சர் நேரு பெரியாரின் போராட்டத்தில் உள்ள மனிதத் தன்மையைக் கண்கொண்டு பார்க்கவில்லை. "இந்த அரசியல் சட்டம் பிடிக்கவில்லையானால் நாட்டை விட்டு வெறியேறி விடு" என்றார். இதனால் போராட்டம் தீவிரமடைந்தது.

10,000 பேர் அரசியல் சட்டத்தைக் கொளுத்தினர். *7,000* பேரை காவல் துறையினர் கைது செய்யாது விட்டனர். குழந்தைகள், வயதானவர், பெண்கள், கருவுற்ற பெண்கள், இளைஞர் உட்பட *3,000* பேரைச் சிறையிலடைத்தனர். சிறைத்தண்டனை பெறுமுன் நீதி மன்றத்தில் அவர்,

> நான் சாதி ஒழிப்புக் கிளர்ச்சிக்காரன். இந்திய அரசியல் சட்டத்தில் சாதிக்கும் அதை உண்டாக்கிய மதத்துக்கும் பாதுகாப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. அரசியல் சட்டம் தமிழர் நலனுக்காக வகுக்கப்படவுமில்லை; அச்சட்டத்தைத் திருத்தக் கூடிய வசதி தமிழர்களுக்கு இல்லை. ஆதலால், என் எதிர்ப்பைக் காட்டிக் கொள்ளும் அறிகுறியாக இந்த சட்டத்தைக் கொளுத்தினேன். இப்படிக் கொளுத்துவதற்கு எனக்கு உரிமை உண்டு.

---

23. வே. ஆனைமுத்து (ப.ஆ.), பெரியார் ஈ.வெரா. சிந்தனைகள், மூன்றாம் தொகுதி, ப*1865*.

> இதனால் எந்த உயிருக்கும் பொருளுக்கும் சேதமில்லை. ஆதலால் நான் குற்றவாளி அல்ல. இந்த நீதி மன்ற நடவடிக்கையில் நான் கலந்து கொள்ள விரும்பவில்லை. நான் எதிர் வழக்காட விரும்பவில்லை. நான் குற்றவாளி என்று கருதப்பட்டால் அதற்குரிய தண்டனையை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன்.[24]

என்று கூறினார்.

சமத்துவத்திற்காகக் குழந்தைகளும் பெண்களும் போராடவும், சிறைப்படவும், சிறையில் இறக்கவும் துணியும் எழுச்சியைப் பெரியாரால் பெற்றது இச்சமூகம்.

குலக் கல்வி எதிர்ப்பு

சூத்திரனுக்கு வேதக் கல்வியை மறுக்கிறது வைதீக நெறி. மனுதர்மமோ இம்மைக்குப் பயன்தரும் அர்த்த சாஸ்திரத்தை அவனுக்குச் சொல்லக்கூடாது என்கிறது. ஆதி சங்கரரோ சூத்திரனை நடமாடும் சுடுகாடு; சுடு காட்டில் வேத மந்திரம் சொல்லக் கூடாது. ஆதலால் சூத்திரனுக்கும் சொல்லக் கூடாது என்கிறார். மீறி அவனாகவே கற்றால் நாக்கைத் துண்டித்துப் போடு. காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்று. நெஞ்சைப் பிளந்து போடு எனத் தண்டனை வழங்கச் செய்தார்.

வேதக் கல்வியே கல்வி எனப் போற்றப்பட்டு சமற்கிருதக் கல்லூரிகள் நிறுவப்பட்டன. இலவச உணவு, உறையுள் வழங்கிப் பார்ப்பனச் சிறுவர்க்குக் கல்வி வழங்கப்பட்டது. வேதக் கல்வி பெற்றவர்க்கு நல்ல விளை நிலங்களைக் கொண்ட ஊர்கள், அக்கிரகாரங்கள் உட்பட தானமாகக் குடி நீக்கி வழங்கினர் அரசர்கள். வேதக் கல்வி வழி அரசின் முக்கியப் பதவிகளைக் கைப்பற்றினர். இராபர்ட்-டி-நொபிலி, *10,000* க்கும் அதிகமான பார்ப்பனர் சிறுவர் மதுரையில் திருமலை நாயக்கன் காலத்தில் கல்வி பயின்றதைக் குறிப்பிட்டுள்ளார்.[25]

ஆங்கிலக் கல்வி முறை வந்த பின்னர், அதுவும் இடஒதுக்கீடு வந்த பின்னரே பார்ப்பனரல்லாத மக்கள் பெருமளவில் கற்க முன் வந்தனர். இவர்களின் கல்வியில் மண்ணை அள்ளிப்போடும் வண்ணம் குலக் கல்வி முறையைக் கொண்டு வந்தார் தமிழ்நாட்டின் முதலமைச்சர் இராசகோபாலாச்சாரி. அவரவரும் தம் சாதித் தொழிலை அதாவது மனுதர்ம நெறி வகுத்த குலத்தொழிலைச் செய்வதுதான் குலக் கல்வியின் அடிப்படை என்றார். (*1920* களில் திருவாங்கூர் அரசின் திவானாக இருந்தவர்

24. மே.நூல், பக்.*1864-1865*.
25. முரசொலி மாறன், 'திராவிடர் இயக்க வரலாறு', ப.*43*.

சர்.சி.பி. இராமசாமி அய்யர். மருத்துவப் படிப்பை முடித்து எம்.பி.பி.எஸ் பட்டம் பெற்றிருந்த பிலிப் என்ற பெயருடைய ஈழவ இளைஞர் திவானிடம் வேலை வாய்ப்பு நல்க வேண்டினார். திவான் இராமசாமி அய்யர் இரண்டு தென்னம்பிள்ளைகளை அவருக்குக் கொடுக்கச் சொன்னார்.[26] இச்செயல் ஈண்டு ஒப்பு நோக்கத் தக்கது).

2411954- இல் ஆச்சாரியார் கல்வித் திட்ட எதிர்ப்பு மாநாடு கூட்டினார் பெரியார்.

> இந்நாட்டில் உழைக்கிறவர்கள் யார்? நம்மவர்கள் தானே? பாடுபட்டு, கஷ்டப்பட்டு எல்லாவற்றையும் செய்கிறோம்; உடலால் பாடுபடுகிற வேலைகள் அத்தனையும் செய்கிறவர்கள் திராவிட மக்கள் தானே! இன்னும் சர்க்காருக்கு வரி கொடுப்பது நம் மக்கள்-கிராமத்து மக்கள்தானே கொடுக்கிறார்கள்? இப்படியிருக்கும்போது 'உழைக்கிற நமது மக்கள் படிக்கக்கூடாது; பாடுபடாத சோம்பேறிக் கூட்டம்தான் படிக்க வேண்டும்; உத்தியோகம் பார்க்கவேண்டும்' என்று திட்டம் கொண்டு வருவது என்றால் என்ன நியாயம்? இதை எப்படி சகித்துக் கொண்டிருப்பது?[27]

என்பன அவர் மக்களின் முன் வைத்த வினாக்கள்.

குலக் கல்வி எதிர்ப்புப் போராட்டத்தை, சமுதாயப் போராட்டமாக, இன வாழ்வுப் போராட்டமாகக் கருதினார் பெரியார். ஆதலின்,

> எங்கள் இனத்துக்கு - திராவிட இனத்துக்கு, இந்த இனத்தையே தீர்த்துக் கட்டுவதற்காக வைக்கப்படும் பெருத்த வெடிகுண்டு என்று கருதியே இக் கல்வித் திட்டத்தை எதிர்க்கிறோம். இந்த எதிர்ப்பை - போராட்டத்தை நாங்கள் எங்களுடைய ஜீவாதாரமான உயிர்நிலைப் போராட்டமாகக் கருதுகிறோம்.[28]

என ஆட்சியாளருக்கு அறிவுறுத்தினார்.

குலக்கல்வித் திட்டத்தை விலக்கிக் கொள்ள ஆச்சாரியாருக்கு *30* நாள் காலக் கெடு கொடுத்தார். மக்கள் கிளர்ச்சி வலுத்தது கண்டு *15* நாள்களுக்குள்ளேயே இராசகோபாலாச்சாரி பதவி விலகினார். காமராசர் முதலமைச்சரானார். ஆச்சாரியார் அமைச்சரவையில் கல்வியமைச்சராக இருந்து குலக் கல்வித் திட்டத்தைப் பாராட்டிய சி. சுப்பிரமணியத்தின்

---

26. கி. வீரமணி, சொற்பொழிவு, விடுதலை.

27. வே. ஆனைமுத்து (ப.ஆ.), பெரியார் ஈ.வெரா. சிந்தனைகள், மூன்றாம் தொகுதி, ப.*1828.*

28. மே.நூல், ப.*1831.*

வாயிலாகவே அத் திட்டத்தைத் திரும்பப் பெறச் செய்தார் காமராசர் என்பது குறிப்பிடத்தக்கது.

வகுப்புவாரி உரிமை

மண்டலின் அறிக்கை இந்திய அரசின் பெரும் பதவிகளிலெல்லாம் பார்ப்பனரே இன்றளவும் பெருவாரியான இடம் பெற்றுள்ளதைப் படம் பிடித்துக் காட்டுகிறது எனின் பெரியாரின் காலத்தின் நிலைமைப் பற்றிக் கூறாமலே விளங்கும். தென்னிந்திய நலவுரிமைச் சங்கம் பார்ப்பனரல்லாத மக்களின் நலனை முன்னிறுத்தியே பிட்டி. தியாகராயர், டி.எம். நாயர், நடேச முதலியார் முதலானவர்களால் தொடங்கப்பெற்றது. இரட்டை ஆட்சிக் காலத்தில் பனகல் அரசர் வகுப்புரிமைக்கான சட்ட முன் வரைவைச் சட்டமன்றத்தில் கொண்டுவந்தார். அதில்,

> உத்தியோகத் துறையில் எந்த வகுப்பினரும் ஆதிக்கம் செலுத்தும் நிலை இருக்குமானால் அது நாட்டுக்குப் பெருந் தீங்கை விளைவிக்கும்! எல்லா சமூகத்தினரும் ஏற்றம் பெறும் வகையில், மக்கள் தொகையை அடிப்படையாகக் கொண்டு உத்தியோகங்களை வழங்க வேண்டும்.[29]

என்று குறிப்பிட்டிருந்தார். *1921*-ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்களில் கொண்டு வரப்பட்ட இது நிறைவேற்றப்பட்டு அரசு ஆணையும் பிறப்பிக்கப்பட்டது.

முதலமைச்சர் சுப்பராயன் அமைச்சரவையில் இடம் பெற்றிருந்த முத்தையா (முதலியார்) *1928*-ஆம் ஆண்டில் *14* இடங்கள் இருக்குமாயின்,

பார்ப்பனரல்லாதார்க்கு	-	*6* இடங்கள்
பார்ப்பனர்க்கு	-	*2* இடங்கள்
பிற்படுத்தப்பட்டவர்க்கு	-	*2* இடங்கள்
தாழ்த்தப்பட்டவர்க்கு	-	*2* இடங்கள்
கிறித்தவர் & ஆங்கிலோ இந்தியர்க்கு		*2* இடங்கள்[30]

ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்றும் அதற்கான முறையையும் வரையறை செய்தார். *14* இடங்கள் என்பது பின்னர் *12* இடங்கள் என்றாக்கப்பட்டது.

1925-ஆம் ஆண்டில் நடைபெற்ற காஞ்சிபுரம் மாநாட்டில் வகுப்புவாரி உரிமையைக் கொண்டு வர முயன்றார் பெரியார். அவர் கொண்டு வந்த தீர்மானத்தை (தேர்தலில் *50* விழுக்காடு பார்ப்பனரல்லாதார்க்கு இட ஒதுக்கீடு செய்ய வேண்டும்) அவரில்லாத நேரத்தில் மாநாட்டுத் தலைவர் என்ற முறையில் திரு.வி.க.வைக் கொண்டே தள்ளிவிடச் செய்தனர் காங்கிரசார். அதனால் வெகுண்டெழுந்த பெரியார் தம் தோழர்களுடன்

29. பிஎஸ். இளங்கோ, சர்பிட்டி. தியாகராயர் முதல் டாக்டர் கலைஞர் வரை, ப.*64*.

30. ராஜன், வகுப்பு உரிமை நீதி அல்லது சமதர்ம சமூக சாதனம், பக்.*80-81*.

காங்சிரசை விட்டு வெளியேறினார். இவ்வாறு வகுப்புரிமைக்காகக் குரல் கொடுத்து வந்த பெரியார், முத்தையா கொண்டு வந்த வகுப்புவாரி உரிமை ஆணையை வரவேற்றார். 100க்கு 3 விழுக்காடு உள்ள பார்ப்பனருக்கு 16 இடங்கள் ஒதுக்கியதற்காகவும் தாழ்த்தப்பட்டவருக்கும் பிற்படுத்தப்பட்டவருக்கும் உரிய பங்கிற்கும் குறைவான பங்கே ஒதுக்கியதற்காகவும் கண்டித்தார். அதே நேரத்தில் இட ஒதுக்கீடு தவறல்ல என்ற வகையில் இடம்பெறச் செய்தமைக்காக நன்றி தெரிவித்தார். தமிழ் மக்கள் நன்றி உணர்வுடன் அவர் பெயரைத் தம் குழந்தைகளுக்குச் சூட்ட வேண்டும் என்றார்.[31]

இந்தியாவிற்கு விடுதலையும், குடியரசும் வந்தது. ஆனால் வகுப்புரிமைக்கோ ஆபத்து வந்தது. கல்வி, வேலை வாய்ப்பைப் பற்றி அடிப்படைச் சட்டம் பிரிவு எண் 15, 16-வது பிரிவுகள் கூறும். அடிப்படைச் சட்டம் 29-வது பிரிவின் படி இடஒதுக்கீடு முரணானது என வகுப்புரிமைக்கு வேட்டு வைத்தனர்.

செண்பகம் துரைசாமி என்பவரும், சி.ஆர். சீனிவாசன் என்பவரும் முறையே சென்னை மருத்துவக் கல்லூரியிலும், பொறியியல் கல்லூரியிலும் தமது சேர்க்கைக்கு வகுப்புரிமை ஆணை குறுக்கிடலாகாது என உயர்நீதி மன்றத்திற்குச் சென்றனர். இவர்கள் இருவரும் பார்ப்பன மாணவர்கள். அவர்கள் சார்வில் வாதாடியவர்கள் சீனிவாச அய்யங்காரும், முன்னாள் அட்வகேட் ஜெனரல் அல்லாடி கிருஷ்ணசாமி அய்யரும் ஆவர். அரசுத் தரப்பில் குட்டி கிருஷ்ணமேனன் வாதிட்டார்.

வகுப்புரிமை ஆணை இந்திய அரசியல் சட்டத்திற்கு முரணானது; மனுதாரர்கள் கல்லூரியில் சேரக் கொடுத்த விண்ணப்பங்களை அவற்றின் தகுதியின் அடிப்படையிலேயே பரிசீலிக்க வேண்டும். மதம், இனம், சாதி, மொழி ஆகியவை இதில் குறுக்கிடக் கூடாது[32] என்று தலைமை நீதிபதி இராசமன்னார் தீர்ப்பு வழங்கினார். இவரின் தீர்ப்பை ஒட்டியே நீதிபதி விஸ்வநாதசாஸ்திரி நீதிபதி சோமசுந்தரம் ஆகிய இருவரின் தீர்ப்பும் அமைந்திருந்தன.

வகுப்புரிமையை ஈன்றெடுத்தது தென்னிந்திய நலவுரிமைச் சங்கம் (நீதிக்கட்சி) தான். ஆனால் அதைக் காக்கும் பொறுப்பு, வகுப்புரிமையை வற்புறுத்தி வந்தவரும், பின்னாளில் நீதிக் கட்சியின் தலைவரானருவம் ஆன பெரியார் தோளில் விழுந்தது.

> உண்மையான நாட்டு நலத்தைத் தேடுவோர் தாழ்ந்த வகுப்பாருடைய நலத்தையும், பிற்பட்ட வகுப்பாருடைய

---

31. வே. ஆனைமுத்து (ப.ஆ.), பெரியார் ஈ.வெரா. சிந்தனைகள், இரண்டாம் தொகுதி, ப.936.
32. பி.எஸ். இளங்கோ, சர். பிட்டி. தியாகராயர் முதல் டாக்டர் கலைஞர் வரை, பக்.264-265.

> நலத்தையும் தேடுவதைத்தான் நாட்டு நலமென்று நினைப்பார்கள். நாடு என்பது சகல வகுப்பாருக்குமொழிய வலுத்த வகுப்பாருக்கென்று மாத்திரம் ஏற்பட்டதல்ல.[33]

என்ற கருத்துடைய அவர் கிளர்ந்தெழுந்தார். தமிழகம் ஓரணியில் திரண்டது. அதன் விளைவாக இந்திய அரசியல் சட்டத்தைத் திருத்த முன் வந்தார் இந்திய தலைமை அமைச்சர் நேரு. கல்வி வேலை வாய்ப்பு பற்றிக் கூறும் அடிப்படை சட்ட விதி *15, 16*-வது பிரிவுகளில் *4*-வது உட்பிரிவு சேர்க்கப்பட்டது. அதன் படி மாநில அரசுகள் இடஒதுக்கீடு செய்வது *29*வது விதிக்குப் புறம்பானதல்ல - அதாவது *29*-வது விதி இட ஒதுக்கீட்டைக் கட்டுப்படுத்த முடியாது[34] என்றானது.

பெண்ணுரிமை

பெண்கள் மனித சமூகத்தில் சரிபகுதி எண்ணிக்கை உடையவர்கள். ஆண்களுக்கு முழு ஒப்பும் உவமையும் கொண்டவர்கள். ஆனால் பெண் மக்களை மேல் சாதிக்காரன் கீழ்ச்சாதிக்காரனை நடத்துவதை விட, பணக்காரன் ஏழையை நடத்துவதை விட, எசமான் அடிமையை நடத்துவதை விட மோசமாக ஆண்கள் நடத்துகின்றனர்.[35]

ஒவ்வொரு செயலுக்கும் ஓர் எதிர்விளைவு உண்டல்லவா? பெண்களை அடிமைப்படுத்திய ஆண் மக்கள் தாமே அவ்வடிமைத்தளையில் சிக்க நேர்ந்தது. கல்வி, உரிமை, செல்வம் பறிக்கப்பட்ட பெண், தாய் என்ற நிலையில் தன் மக்களை அடிமைப் புத்தியுடையவளாக்குகிறாள். இதனை,

> தாயின் குணம், தாயின் தன்மை பெரிதும் பிள்ளைக்குப் பிறவியிலேயே வருகின்றது என்பதை யார் மறுக்க முடியும்?...... அடிமைப்பெண் சுதந்திர உணர்ச்சியுள்ள பிள்ளையைப் பெறமுடியும் என்று எப்படி எதிர்பார்க்க முடியும்? கல்வி, அறிவு, செல்வம் ஆகியவைகள் இல்லாத தாயானவள் நல்ல தரமான புத்தியும் சமத்துவ ஞானமும் திருப்தியான மனமும் உள்ள பிள்ளைகளை எப்படிப் பெறமுடியும்?[36]

என்று அடுக்கடுக்கான வினாக்களால் உணர வைக்கிறார் பெரியார்.

மனைவி என்ற நிலையில் பெண் ஆணின் வீட்டுச் சமையல்காரி; அவன் வீட்டுப் பொருளைக் காக்கும் காவலாளி; அவன் வீட்டுக்குக் கூலி

---

33. வே. ஆனைமுத்து (ப.ஆ.), பெரியார் ஈ.வெரா. சிந்தனைகள், இரண்டாம் தொகுதி, ப.*930*.
34. ராஜன், 'வகுப்பு உரிமை நீதி அல்லது சமதர்ம சமூக சாதனம்', ப.*167*.
35. வே. ஆனைமுத்து (ப.ஆ.), பெரியார் ஈ.வெரா. சிந்தனைகள், முதல் தொகுதி, ப.*123*.
36. மே.நூல், ப.*193*.

கொடுக்கப்படாத வேலைக்காரி; அவனை இன்புறுத்தும் போகப் பொருள்; அவனுடைய சொத்துக்கு வாரிசான பிள்ளைகளைப் பெறும் எந்திரம் என ஆக்கப்பட்டுள்ளாள். 'வீட்டு வேலை என்பது உயிரை வாங்கும் அலுப்பூட்டும் நச்சரிப்பு வேலை. இதில் தன் முழு நேரத்தையும் ஆற்றலையும் செலவிட்டு ஒடுங்கித் தேய்ந்து போகிறாள். இந்த வேலைகளால் பெண்ணின் பார்வை குறுகி, சிந்தனை மழுங்கி, உள்ளம் ஓய்ந்து, சித்தம் தளர்ந்து போகின்றது.[37] இதனுடைய நடைமுறை விளைவை,

> ....அவனுக்கு அடிமைப்பட்டவள் அவன் மீது பழிதீர்த்துக் கொள்கிறாள். இதுவும் மறைமுகமாகவே நடந்தேறுகின்றது. எப்படியெனில், பெண்ணின் பின்தங்கிய நிலையும் கணவனின் புரட்சி இலட்சியங்களில் நாட்டாமில்லாமையும் கணவனுடைய ஆர்வத்துக்கும், போராட்ட உறுதிக்கும் ஊறுவிளைவிக்கின்றன. கண்ணுக்குத் தெரியாமல் மெல்ல மெல்ல ஆனால் திடமாக அரித்துக் குலைக்கும் சின்னஞ்சிறு புழுக்கள் அவை.[38]

என எடுத்துரைத்து ஆண்களை எச்சரிக்கின்றார் இலெனின். இந்நிலையை,

> "பெண்களின் அடிமைத் தன்மை பெண்களை மாத்திரம் பாதிப்பதில்லை. அது மற்றொரு வகையில் ஆண்களையும் பாதிக்கின்றது"[39]

என நறுக்குத் தெறித்தாற் போல் கூறுவார்.

மனித இனம் அடிமைத் தளையிலிருந்து விடுபெற வேண்டுமாயின் அதற்குள்ள ஒரேவழி பெண்ணுலகை அடிமையாகக் கருதி நடத்தும் ஆணவமும் கொடுமையும் ஒழிய வேண்டும். இவை ஒழிந்தால் மட்டுமே சமத்துவம், சுதந்திரம் என்னும் முளை தோன்ற முடியும்[40]. ஆதலால் பெண் மக்களின் விடுதலைக்காகப் போராடுவது பழக்கத்தின் காரணமாகப் பெண்ணடிமைத் தனத்தை ஏற்றிருக்கும் பெண்களை விழிப்புறச் செய்வது, தங்கள் உரிமைகளில் நாட்டம் கொள்ளச் செய்வது, தங்கள் உரிமைகளுக்காகப் போராட முன் வரச்செய்வது முதலானவை மனித நலச் சிந்தனையாளர் கடமையாகும்.

பெண்கள் தங்கள் விடுதலையின் பொருட்டுத் தாங்களே போராட முன்வரவேண்டும். ஆண்கள், பெண்கள் விடுதலைக்குப் பாடுபடுவது பெண்டிமைத்தனத்தை வலுப்படுத்தவே உதவும்.

> பெண்களுக்கு மதிப்புக் கொடுப்பதாகவும், பெண்கள் விடுதலைக்காகப் பாடுபடுவதாகவும் ஆண்கள் காட்டிக் கொள்வ தெல்லாம் பெண்களை ஏமாற்றுவதற்குச் செய்யும் சூழ்ச்சியே

37. வி.இ. லெனின், மாதர் விடுதலை பற்றி, ப.193.
38. மே.நூல், ப. 194.
39. வே. ஆனைமுத்து (ப.ஆ.), பெரியார் ஈ.வெரா. சிந்தனைகள், முதல் தொகுதி
40. வே. ஆனைமுத்து (ப.ஆ.), மே.நூல், ப.137.

> ஒழிய வேறல்ல. எங்காவது பூனைகளால் எலிகளுக்கு விடுதலை உண்டாகுமா? எங்காவது நரிகளால் ஆடு, கோழிகளுக்கு விடுதலை உண்டாகுமா? எங்காவது வெள்ளைக்காரர்களால் இந்தியர்களுக்குச் செல்வம் பெருகுமா? எங்காவது பார்ப்பனர்களால் பார்ப்பனரல்லாதவர்க்குச் சமத்துவம் கிடைக்குமா? என்பதை யோசித்தால் இதன் உண்மை விளங்கும். அப்படி ஒருக்கால் ஏதாவது ஒருசமயம் மேற்படி விஷயங்களில் விடுதலை உண்டாகி விட்டாலும் கூட ஆண்களால் பெண்களுக்கு விடுதலை கிடைக்கவே கிடைக்காது என்பதை மாத்திரம் உறுதியாய் நம்பலாம்.[41]

என்பது பெண்களுக்குப் பெரியார் தரும் எச்சரிக்கை.

பெண்கள் தாங்கள் அடிமையானதற்கான காரணங்களை அறிந்து கொண்டால் மட்டுமே அவற்றை அகற்றிக்கொள்ள முடியும். ஆதலின் பெண் அடிமையானதற்கான காரணங்களை ஆராய்ந்து பெண் ஏன் அடிமையானாள்? என்ற நூலை எழுதி வெளியிட்டார்.

சொத்துரிமை

குழந்தை பெறுவதற்காக ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே ஏற்பட்ட வேலைப் பிரிவினைதான் சொத்துரிமை இன்மைக்கு இட்டுச் சென்றது. சமூக உழைப்பிலிருந்து விலகிய பெண் தன் உழைப்பைப் பொருள் வடிவில் காட்ட முடியாதவளானாள். ஆணின் உழைப்பு பொருள் வடிவில் காட்ட முடிந்தது. சொத்தை ஆண் தனக்கு உரியதாக்கிப் பின்னர் தன் மகனுக்கு என்றாக்கினான். சொத்துரிமையை இழந்த பெண் அடிமை நிலைக்குத் தள்ளப்பட்டாள். அதனால்தான்,

> பெண் அடிமை என்பதற்குள்ள காரணங்கள் பலவற்றில் சொத்துரிமை இல்லாதது என்பதே மிகவும் முக்கியமான காரணம் என்பது நமது அபிப்பிராயம். ஆதலால் பெண்கள் தாராளமாகவும் துணிவுடனும் முன்வந்து சொத்துரிமைக்குக் கிளர்ச்சி செய்ய வேண்டியது மிகவும் அவசியமும் அவசரமுமான காரியமாகும்.[42]

எனப் போராடத் தூண்டுவார். பெண்களுக்குச் சொத்துரிமை வேண்டும் என மாநாடுகளில் தீர்மானம் கொண்டுவரச் செய்தார். பெண்களுக்கும் சொத்துரிமை உண்டெனத் தமிழ்நாடு அரசு சட்டம் கொண்டுவந்தது இதன் பின்னணியில்தான் என்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

கல்வியும் வேலைவாய்ப்பும்

மனிதருக்குப் பகுத்தறிவு இயற்கையாக அமைந்துள்ளது. என்றாலும் அது விளக்கம் பெறுவது கல்வியாலேதான். அதனால்தான் சாந்துணையும்

---

41. தந்தை பெரியார், 'பெண் ஏன் அடிமையானாள்? பக்.83-84.

42. மே.நூல், ப.77.

கற்குமாறு வற்புறுத்துவார் வள்ளுவர். கல்வி கற்கும் உரிமையும் அதனடிப்படையில் நாட்டு நிர்வாகத்தில் பங்குபெறும் நிலைமையும் பிறப்பினடிப்படையில் பெண்ணுக்கு மறுக்கப்பட்டு வந்துள்ளது.

ஓர் ஆணின் கல்வியைக் காட்டிலும் ஒரு பெண்ணின் கல்வி குடும்ப உறுப்பினர்களுக்கும், சமூகத்திற்கும் பெரும்பயன் நல்க வல்லது. அதனால்

> பள்ளிக்குப் போகத்தக்க சிறுமிகளுக்கு ஆரம்பக் கட்டாயக் கல்வி மாத்திரம் பொது நிதிகளிலிருந்து போதிக்கப்பட வேண்டும்[43]

என்பார். இதனின்றும் பெண் கல்வி வழங்க வேண்டியது சமூகப் பொறுப்பு என்பது பெறப்படும்.

> பெண்பாலரை குறைந்தது *16* வயது வரையிலாவது பள்ளிக் கூடங்களுக்குச் செல்ல விட வேண்டும்.[44]

> பெண்களின் கல்வியை *11* வயதிலேயே நிறுத்தி விடாமல் பெண்களை *30* வயது வரை படிக்க வைக்க வேண்டும்.[45]

என்று பெண்ணின் பெற்றோர்களை வேண்டுகிறார்.

பெண்கள் சமூக உழைப்பில் பங்குபெறவும் ஊதியம் பெறவும் வாய்ப்பளிப்பது வேலைவாய்ப்பு. அதற்கு இசைவாக ஆண்கள் கற்கும் எல்லா வகைக் கல்வியையும், பார்க்கும் எல்லா வேலைகளையும் முறையே கற்கவும், பார்க்கவும் முடியும் என்ற தன்னம்பிக்கையைப் பெண்கள் பெற வேண்டும். ஆதலால்,

> பெண்களை வைத்தியத் தொழிலுக்கும் உபாத்திமைத் தொழிலுக்கும் மாத்திரம் தற்பொழுது எடுப்பது போதாது. அவர்களைப் போலீஸ் இலாகாவிலும் இராணுவத்திலும் சேர்க்க வேண்டும்.[46]

என அரசுக்கு மாநாட்டுத் தீர்மானத்தின் வாயிலாக வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஆரம்ப பள்ளி ஆசிரியர்களாகப் பெண்களையே நியமிக்க வேண்டும் என்றும் பள்ளிக் கூட ஆசிரியர் வேலையிலும் பெண்களை அதிகமாக நியமிக்க வேண்டும்[47] என்றும் வற்புறுத்தியுள்ளார். தமிழ்நாட்டில் கொண்டு வரப்பட்ட சட்டம் பெரியார் ஏற்படுத்திய விழிப்புணர்வாலேயே என்பதை எவரும் மறுக்க இயலாது.

---

43. 'நமது குறிக்கோள்', ப.8.
44. மே.நூல், ப.19.
45. மு.நூல், ப.25.
46. மு.நூல், ப.25.
47. மு.நூல், ப.10.

பெண்களுக்கு அவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப *50* விழுக்காடு இடஒதுக்கீடு செய்ய வேண்டும் எனப் பின்னாளில் அறிவுறுத்துகிறார். *30* விழுக்காடு இட ஒதுக்கீட்டினைத் தமிழக அரசு பெண்களுக்கு வழங்கியது. இது பெரியார் முன் வைத்த பெண்ணுரிமைக் கொள்கை செயல் வடிவம் பெற்றதை எடுத்துக்காட்டுகிறது.

குழந்தை மணம்

வர்ணதர்மக் காப்பின் பொருட்டு உருவாக்கப்பட்டதுதான் குழந்தை மணம். நல்ல வயதுடைய ஆணுக்குப் பெண் குழந்தைகளைத் திருமணம் செய்ததால் அப்பெண் குழந்தைகளின் பிள்ளைப் பருவ இன்பம் பறிக்கப்பட்டது. ஆணின் விருப்பத்தை அறியமுடியாது, நிறைவு செய்ய முடியாது இறந்த குழந்தைகள் ஏராளம். மன நோய்க்கு உள்ளான குழந்தைகள், உடல் உறுப்புகள் சிதைந்து நோய்வாய்பட்ட குழந்தைகள், மீண்டும் குடும்ப வாழ்வு நடத்தவே தகுதியற்ற உடலைப் பெற்ற குழந்தைகள் ஏராளமானவர். மீறித் தப்பித்தவருள் குழந்தை பெற இயலாது இறந்தவர் பலர். இத்தகு துயருக்கு ஆளான குழந்தைகள், சிறுமிகள் நிலை குறித்து காதரைன் மேயோவின் 'இந்திய மாதா' என்ற நூலும், டாக்டர் முத்துலட்சுமியின் குழந்தை மணத் தீமைகள் என்ற நூலும் விரித்துரைக்கின்றன.

குழந்தை மணத் தடைச் சட்டத்தை டாக்டர் முத்துலட்சுமி சட்டமன்றில் கொண்டு வந்தபோது,

> பாலிய விவாகமில்லாவிட்டால் உண்மையான கற்பு என்பது சாத்தியமில்லை. பெண்களின் வாழ்க்கை நாசமடைந்துவிடும். குடும்ப வாழ்க்கை துக்கமயமாகி சதா ஆபத்திற்குள்ளாகி இருக்கும். பாலிய விவாகம் இருந்தாலொழிய வாழ்க்கையில் உண்மையான ஒழுக்கம் ஏற்படுவது அசாத்தியம்.[48]

என்றெல்லாம் எம்.கே. ஆச்சாரியார் மறுத்துரைத்தார். ஆச்சாரியாரின் கருத்தை வரவேற்று சுதேசமித்திரன் முதலான இதழ்கள் குழந்தை மணத் தடைச் சட்டத்தை எதிர்த்தன. ஆச்சாரியாருக்குத் தக்க பதில் கொடுத்த பெரியார்,

> நமது மக்களின் முன்னேற்றத்திற்கும் மனிதத் தன்மைக்கும் ஏற்றதான சீர்திருத்தங்கள் செய்யப் புறப்படும் போதெல்லாம் இப்படி ஒரு கூட்டத்தார் இருந்துகொண்டு நம்மை இழிவுபடுத்தி முட்டுக்கட்டை போட்டுக் கொண்டு வருவதை இனி எத்தனை காலத்திற்குத்தான் பொறுத்துக் கொண்டிருப்பது. . .[49]

என்றார்.

---

48. வே. ஆனைமுத்து (ப.ஆ.), பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள், முதல் தொகுதி, ப.*131*.
49. மே.நூல், ப.*131*.

தேவதாசி ஒழிப்பு

ஆண்களின் ஒழுக்கக் கேட்டால் விளைவது விபச்சாரம். கோவில்களில் ஆண்கள் கூட்டத்தைக் கவர கொண்டுவரப்பட்ட தேவதாசி முறையும் விபச்சாரத்திற்கு உள்ளானது. இளம் பருவத்திலிருந்து இப்பெண்கள் ஆண்களைக் கவர்வதற்கே பயிற்றுவிக்கப்படுகின்றனர். உடலும் உள்ளமும் சீர்கெட்ட இப்பெண்களை மீட்டெடுக்க இசை வேளாளர் மரபில் வந்த மூவலூர் மூதாட்டியார் எனப்படும் இராமாமிர்தத்தம்மாள் முயன்றார். மாநாடுகள் கூட்டி, பொட்டுக் கட்டும் வழக்கத்தை ஒழிக்க வேண்டினார். டாக்டர் முத்துலட்சுமி அம்மையார் தேவதாசி ஒழிப்புச் சட்ட முன் வரைவைச் சென்னை சட்டமன்றில் கொண்டுவந்தார். எஸ். சத்திய மூர்த்தியோ 'என் உயிர் போனாலும் இந்த மசோதாவை நிறைவேற்ற விட மாட்டேன்' என்று எதிர்த்தார்.

> தாசிகள் கோயில் பணிக்கென்று படைக்கப்பட்டவர்கள் அது சாஸ்திர சம்மதமானது.
>
> தாசிகளை ஒழித்து விட்டால் பரத நாட்டியக் கலை ஒழிந்துவிடும், சங்கீதம் அழிந்து விடும்.
>
> ஆண்டவன் கட்டளையை மீறுவது அடாத செயலாகும், அநியாயமாகும்[50]

எனப் பேசி வந்த சத்திய மூர்த்தியை மறுக்கும் வகையில் பெரியார்,

> ஒரு குலத்தில் மட்டும்தான் தாசிகள் தோன்ற வேண்டுமா?
>
> இதுதான் ஆண்டவன் கட்டளையா? மற்ற குலத்துப் பெண்களும் மாறி மாறி பொட்டு கட்டிக் கொள்ளக் கூடாதா?[51]

என்று வினவினார். அத்துடன்,

> ——— இந்து சமூகத்தில் கடவுள் பேரால், மதத்தின் பேரால் விபச்சாரிகளை ஏற்படுத்த வேண்டுமென்று எந்த சமூகத்தாரோ தேசத்தாரோ கருதுவார்களேயானால் அவர்களைப் போல் காட்டுமிராண்டிகளோ, கெட்டவர்களோ இருக்கவே முடியாது. மற்றபடி எந்த சமூகமாவது இம்மாதிரியான தொழில் தங்கள் இழுப்புக்கு இருக்க வேண்டுமென்று கேட்பார்களேயானால் அவர்களைப் போல் சுயமரியாதை அற்றவர்களும் இழிகுல மக்களும் வேறுயாரும் இருக்க முடியாது. எந்தப் பெண்களாவது இந்தத்

---

50. பி.எஸ். இளங்கோ, மு.நூல், ப.*136.*

51. மே.நூல், ப.*137.*

> தொழிலில் ஜீவிக்கலாம் என்று கருதி அதற்காகச் சுவாமியையும், மதத்தையும் உதவிக்கு உபயோகப்படுத்த நினைத்தால் அவர்களைப் போல் ஈனப் பெண்கள் வேறு எங்குமே இருக்க முடியாது[52]

என்று முத்துலட்சுமி அம்மையாருக்கு ஆதரவாகவும், எதிர்ப்பவரைக் கடுமையாகத் தாக்கியும் 'குடிஅரசு' இதழில் தலையங்கம் தீட்டினார்.

விதவை மணம்

1921-ஆம் ஆண்டின் மக்கள் கணக்கெடுப்பு விதவைகள் பற்றித்தந்துள்ள பட்டியல்படி,

1 முதல் *5* வயதுள்ள குழந்தைகள்	-	*18,892*
5 முதல் *10* வயதுக்குட்பட்டவர்	-	*85,937*
10 முதல் *15* வயதுக்குட்பட்டவர்	-	*2,32,147*
15 முதல் *20* வயதுக்குட்பட்டவர்	-	*3,96,172*
20 முதல் *25* வயதுக்குட்பட்டவர்	-	*7,42,820*
25 முதல் *30* வயதுக்குட்பட்டவர்	-	*11,63,720*[53]

ஆவர்.

மனைவி உயிருடன் உள்ளபோது கூட ஆண் மறுமணம் செய்து கொள்ள உரிமை வழங்கியுள்ள மதம், பெண்ணிற்கோ கணவன் இறந்த பிறகும் கூட மறுமணம் செய்து கொள்வதைத் தடுக்கிறது. இளம் விதவைகளைக் கண்டு அவருக்குள்ள கொடுமையைப் பொறுக்க இயலாது,

> உலக இன்பத்தை நுகர்ந்து அலுத்துப் போயிருக்கும் பழுத்த கிழவனே தம் மனைவியார் இறந்துபட்டவுடன் மறுமணம் புரிய முயலுகின்றான். அதுவும் தக்க பருவமும் எழிலும் பொருந்திய இளங்கன்னியர்களைத் துணைவியாகத் தேர்ந்தெடுத்துக் கொள்கிறான். ஆனால் பதினாறு வயது கட்டழகியேயாயினும், உலக இன்பத்தைச் சுவைத்தறியாத வனிதா ரத்னமாயினும் தன் ஆயுட்காலம் முழுவதும் அந்தோ! தன் இயற்கைக் கட்புலனை வலிய அடக்கிக்கொண்டு மனம் நைந்து வருந்தி மடியும்படி நிர்ப்பந்திக்கப்பட்டு வருவது என்னே அநியாயம்.[54]

---

50. பி.எஸ். இளங்கோ, மு.நூல், ப.*136*.

51. மே.நூல், ப.*137*.

52. வே. ஆனைமுத்து, (ப.ஆ.), மு.நூல், ப.*176*.

53. தந்தை பெரியார், 'பெண் ஏன் அடிமையானாள்? ப.*68*.

54. மே. நூல், ப.*68*.

என்று அப்பெண்கள் சார்பில் நீதி கேட்கிறார். விதவை மணத்தை மறுத்தால் விபச்சாரமும் பெருகும் என்று எச்சரிக்கிறார். தீயில் வேகும் கொடுமை சிறிது நேரம் வரைதான். விதவைத் தன்மை என்பதோ வாழ்நாள் பூராவும் உணர்வுத் தீயில் வேகுவதாகும். விதவைக்குள்ள வாழ்க்கை சிறைக்கூட வாழ்வை ஒத்தது என்பதைப் புரிய வைக்கின்றார்.

பெரியாரின் சகோதரி மகள் அம்மாயி என்பவர் *10* வயதில் விதவையாகிவிட்டார். உரிய வயது வந்தபின் அப்பெண்ணுக்கு மறுமணம் செய்து வைத்தார். சொல்லால் மட்டும் அல்லாமல் தம் இல்லத்தில் நடைமுறையில் செயல்படுத்தியும் காட்டினார். தம் இயக்கத் தோழர்களும் விதவைப் பெண்களை மணம் செய்துகொள்ள முன் வந்தபோது முன்னின்று நடத்தினார்; அவர்கள் படங்களை இதழில் வெளியிட்டு விளம்பரப்படுத்தினார்.

இவ்வாறெல்லாம் செயலாற்றிய பெரியார், ஆணையும் பெண்ணையும் இழிவுபடுத்துவதும், பெண்ணை ஆணுக்குத் தானமாக வழங்குவதுமான புரோகித மண முறையை மாற்றி கடவுள் மத மூடச்சடங்குகளை அகற்றியதும் சமயமொழிந்ததும் சாதியொழிந்ததும், விதவை மணத்திற்கு இடந்தருவதும் மறுமணத்திற்கு வாய்ப்பளிப்பதும் மணவிலக்குக்கு இடந்தரவல்லதும் சமற்கிருதத்தை அகற்றித் தமிழுக்கு உரிய இடம் வழங்குவதுமான சுயமரியாதைத் திருமண முறையைக் கொண்டு வந்தார். தமிழ்நாட்டின் முதலமைச்சராக ஆன அண்ணா, இச்சுயமரியாதைத் திருமண முறைக்குச் சட்ட ஏற்பு வழங்கினார்.

இவ்வாறு அடிமைப்பட்டுக் கிடந்த தமிழ்ச் சமூகத்தின் விழிகளைத் திறந்து, விலங்கையொடித்த பெரியார், மானமும் அறிவும் மனிதர்க்கு அழகு என்று வற்புறுத்தினார். இதனடிப்படையில் மானமும் அறிவும் கொண்ட இனமாகத் தமிழ்ச் சமூகத்தை மாற்றும் முயற்சியில் வெற்றி கண்டார். கல்வி மறுக்கப்பட்டிருந்த இத்தமிழ்ச் சமூகம் கல்வி பெறவும், அரசு வேலைவாய்ப்புகளில் புறக்கணிக்கப்பட்டிருந்த சமூகம் அரசு நிர்வாகத்தைக் கைப்பற்றவும் காரணமானவர் பெரியார்.

மராட்டிய மாநிலத்தில் பெண்ணுரிமைக்குப் போராடிய ஜோதிபா பூலேயைப் போன்று பெண்களின் முன்னேற்றத்திற்காகவும் எழுச்சிக்காகவும் உழைத்தவர் அவர். தேவதாசி முறை எனப்படும் சமூக நோயை ஒழித்தவர். அவரே தம்மைப் பற்றிக் குறிப்பிடுவது போல 'அவர் கண்டிக்காத துறைகளே' இல்லை. வெற்றி பெறாத களங்களும் இல்லை. 'தமிழ்நாட்டின் இலையுதிர் காலத்து எழுந்த வசந்தம் அவர். அவர் தமிழர்க்கு மொத்தமாய்க் கிடைத்த முகவரியும் ஆவார்'. கவிஞர் க. நெடுஞ்செழியன் பாடுவதைப் போன்று,

தந்தையவர் எங்கட்கு தளர்ந்த நெஞ்சின்
தன்மானம் பெருக்கெடுக்கும் உணர்வின் ஊற்று!
சிந்தனையின் முழுவடிவம் இந்த மண்ணின்
செழிப்பிற்காய்த் திரண்டிருந்த அறிவின் தேக்கம்
விந்தைமிகு பேச்சாளன் தமிழர் வாழ்வின்
விடியலினை அறிவித்த வெற்றிச் சேவல்!
இந்தத்திரு நாட்டகத்தே ஆரி யத்தின்
இருட்காட்டைக் குலைத்தஒரு ஒளிப்பி ழம்பு!
அவர்தாம் பெரியார் ஆம் ஆம் அவரே பெரியார்.

தமிழருடைய மக்கள்தொகைக் கோட்பாடு

மு. ரா. சஃப்ரா பேகம்

மக்கள் தொகை என்பது குறிப்பிட்ட நிலம், குறிப்பிட்ட ஆட்சி இவற்றிற்குட்பட்ட மக்களின் எண்ணிக்கையைக் குறிப்பதாகும். மக்கள் தொகை என்பதையே மக்கள் ஆடர்த்தியைக் கொண்டு கணிக்கும் வழக்கு வையத்துப் பொது வழக்காக இன்று கருதப்படுகிறது. ஆனால் மக்கள் தொகை பற்றிய ஓர் உணர்வும் கோட்பாடும் பண்டைய தமிழரிடத்து இருந்ததா என்பது ஆய்ந்து காணவேண்டிய ஒன்றாகும். இந்தக் கட்டுரையின் கருத்தும் கணிப்பும் ஒரு முயற்சியே அன்றி முடிவு அன்று. ஏனெனில் இது ஓர் முழுமையான ஆய்வு அன்று, தொடக்கமே.

பண்டைய காலம் முதற்கொண்டு நமக்குக் கிடைக்கின்ற தமிழகம் பற்றிய சான்றாதாரங்களைச் சீர்தூக்கிப் பார்த்தால் மக்கள் தொகை பற்றிய கணிப்பு *1870*-இல் மயோ பிரபு *(Lord Mayo)* தொடங்கும் வரை இருந்ததாகத் தெரியவில்லை. இந்தியா முழுமைக்குமான கணக்கெடுப்பு (காஷ்மீரமும் நேபாலும் தவிர்த்து) *1884*-இல் ரிப்பன் பிரபுவால் முறையாகச் செய்யப்பட்டது.[1] அதுவரை முறையான கணக்கெடுப்பு இல்லை. இதற்கு முதற்காரணம் வரலாறு என்பதே மன்னர் வரலாறாக இருந்திருக்கிறது. மக்கள் வரலாறாக இருந்ததில்லை. மன்னர்கள் மண்ணைப் பற்றிக் கவலைப்பட்ட அளவிற்கு மக்களைப் பற்றிக் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. அதனால்தான் நிலம் பற்றிய அளவு இருந்தது. ஆனால் அங்கு வாழ்ந்த மனிதர்கள் பற்றிய அளவை இருந்ததாகத் தெரியவில்லை.

தொடக்ககாலம் முதலே - சொத்துரிமைச் சமுதாய அமைப்புத் தோன்றிய காலம் முதலே - மக்கள், குடிமக்கள் (அதாவது மேலோர் கீழோர்) என்ற பாகுபாடு வந்துவிட்டது. மேலோர் என்போர் அரசராய், அந்தணராய், வணிகராய் வாழ்ந்த வர்க்கத்தினராகவும், பிறர் 'கீழோர்' எனும் வர்க்கத்தில் உழுதும் தொழுதும் வாழ்ந்தவர்களாகவும் இருந்திருக்கின்றனர். இந்தப் பெரும்பிரிவினை, முழுமையான மக்கள் தொகைக் கணிப்பிற்குத் தடையாக இருந்திருக்கலாம். பிற்காலத்தில் கிடைத்த கல்வெட்டுச் சான்றுகளுக்கு முன் நமக்குக் கிடைக்கும் சிறந்த சான்றாதாரங்கள் இலக்கியங்கள் மட்டுமே. இலக்கியங்கள் அனைத்தும் பொருளாதார ரீதியான மக்கட் சமுதாயத்தையே காட்டுகின்றன. அரசன், கிழான், சேர்ப்பன், நாடன், ஊரன் எனும் உடைமைப் பெயர் கொண்டவர்களே அக இலக்கியத்தில்கூட தலைவன் தலைவியாக உள்ளனர். புற இலக்கியங்களிலும் இவர்களே ஒளியும் ஆற்றலும் ஓம்பா ஈகையும் அளியும் கொண்டவர்களாகப் பாராட்டப்பெற்றனர். எளியோரை

---

1. Four Authors. 'History of India', p. 454.

மதியாக இந்த மனப்பான்மையே முழுமையான கணக்கீடு இல்லாமற் செய்திருக்கலாம்.

அரசர்களுக்குரிய அன்றைய ஆட்சிப்பகுதி என்பது மக்கள் வாழும் நகரப்பகுதி, விளை நிலப்பகுதி, விளைவிப்போர் வாழும் புறநகர்ப்பகுதி எனும் மூன்று திறத்ததாக இருந்திருக்கிறது. போரும் கொடையும் சிறப்பிக்கப்பட்ட அந்தக் காலத்தில் போருக்குரிய பறந்தலை, களம் என்ற பகுதிகளிலும் விளைச்சல் இல்லாத சுரன்களிலும் இந்தக் 'குடிமக்கள்' மிகுதியாக வாழ்ந்திருக்கின்றனர். விளைநிலங்கள் நகரமாந்தரின் உடமைகளாகவும், குடிமக்களின் உழைப்பிற்குரிய களங்களாகவும் இருந்திருக்கின்றன. பெரும்பான்மை உழைக்கும் கரங்களிடத்துக் களங்கள் இல்லை. சிறுபான்மை உழைக்காத மக்களிடத்தே களங்களும் கருவிகளும் இருந்தன. இந்நிலையில் இந்த விளைநிலங்களே அளக்கவும்பட்டு, தானமாக வழங்கவும் பட்டிருக்கின்றன. இவ்வாறு பொதுவாகவே உடமைகள் எல்லாம் மன்னர்கள், வணிகர்கள், அந்தணர்கள் இவர்களிடையே கைமாறியிருக்கின்றன. ஆனால் களங்களின் இழப்பால் வறுமை எய்தியவர்கள் கீழ்க்குடிமக்களே ஆவர். அதுமட்டுமின்றி எரியூட்டப்பெற்ற, கொள்ளையடிக்கப்பட்ட, பாழாக்கப்பெற்ற பகுதிகள் எல்லாம் குடிமக்கள் பரப்பாகவே இருந்திருக்கிறது. உழைப்போருக்கும் போரிலே உயிர் கொடுத்தவர்களுக்கும் மன்னர்கள் கொடுத்த கூலியே 'கொடை' என்ற பெயரிலும் 'வள்ளன்மை' என்ற வகையிலும் மன்னனின் புகழுக்குப் பறைசாற்றலாக அமைந்தது. சமூக ஏற்றத்தாழ்வை, வர்க்கப் பிரிவினையை ஏற்றுக்கொள்ளும் சமுதாய அமைப்பில்தான் கொடை என்ற சொல் கொடிகட்டிப் பறக்கமுடியும். இந்நிலையில் குடிமக்களின் பிரச்சனைகள் பரிசீலிக்கப்படும் எண்ணம் அரசிடம் இருந்திருக்க முடியாது. நாடி வந்தவர்களுக்குப் பரிசில் கொடுக்கும் மனப்பான்மைதான் பெரிதுபடுத்தப்பட்டு வந்தது. வறுமைக்கு விடைகொடுக்கும் தீர்வுச் சிந்தனை தேடப்படவில்லை. இந்நிலையில் போர், பஞ்சம், சீற்றம் எதனாலும் பாதிக்கப்பட்டவர்கள் புறநகர்க் குடிமக்களே.

விளை நிலங்களில் உழைத்தவர்களின் உழைப்பு அபரிமிதமாகிய போது வணிகர்கள் செழித்தனர். செல்வாக்குப் பெற்றனர். உழைத்தவர்கள் எத்தனைபேர் செல்வம் துய்த்தவர்கள் எத்தனைபேர் என்பதற்குக் கணக்கு இல்லை. எனினும் உழைத்தோர் மிகுதியாகவும், செழித்தவர்கள் குறைவாகவும் இருந்ததனால்தான் வணிகர்குலம் செழிக்கவும், வணிகர்கள் போற்றிய சமயங்கள் தழைக்கவும் முடிந்திருக்கிறது.

மன்பதை, குடி என்ற சொற்கள் எல்லாம் ஒரு பொருள் தருபவை போல் தோன்றினும், அவை மதிப்புப் பற்றிய அளவு கோலில் பொருள் வேறுபாடு தருகின்றன. 'மன்பதை' என்பது உயர்குடிச் சமுதாயத்தைச் சித்திரிக்கிறது. 'நிலைத்த உயிர்கள்' என்ற பொருளே இவர்கள் பெருமைக்குரியவர்கள், குல நல, வளத்தில் சிறந்தவர்கள் என்ற குறிப்பைக் கொண்டு விளங்குகிறது. 'குடி' என்பது நிலைபேறு அற்ற, பெருமை குறைந்த தன்மையைக் கொண்டதாகக் குறிக்கப்பட்டிருக்கிறது.

படைகுடி கூழ் அமைச்சு நட்புஅரண் ஆறும்
உடையானாம் அரசருள் ஏறு

என்றார் வள்ளுவரும். இதில் படையும் அரணும் பாதுகாப்புக்குப் பயன்பட்டது. அமைச்சும் நட்பும் அறிவுத்துறையில் பயன்பட்டது. கூழும் குடியும்தான் உயிர்வாழ்க்கைக்குத் தேவையான உணவு வழங்கியது. நால்வகைப்படை, நால்வகை அரண் என்ற எண்ணிக்கை அளவு உண்டு. அமைச்சர்களும் நண்பர்களும் ஐம்பெருங்குழுவிலும், எண்பேராயத்திலும்தான் இருந்திருக்க வேண்டும். 'கூழ்' என்பது பயிர் விளையும் நிலம். அதுகூட அளந்திருக்கப்படும் - வேலி, நிலம், தோட்டம், யோசனை, காவதம் என்ற அளவைப்பெயர்கள் உள்ளன. ஆனால் 'குடி' மக்கள் எத்தனைபோர் என்ற அளவை இல்லை. இங்ஙனம் குடிமக்கள், அவர்களின் உழைப்பு இவை புறக்கணிக்கப்பட்ட காலத்தில் நாட்டின் தரம் என்பது குறைவான மக்கள் தொகை கொண்ட நிறைந்த வளம் பொருந்திய நகரப்பகுதிகளால் நிர்ணயிக்கப்பட்டது. இலக்கியங்கள் போற்றும் பதியெழுவறியாப் புகாரும், மதுரையும், வஞ்சியும் மக்கள் விரும்பி உறைகின்ற இடங்களாகத் திகழ்ந்தன. இங்கு வாழ்ந்த மக்களும் சமுதாய மதிப்பும், சமய மதிப்பும், சாதி உயர்வும், செல்வச் செழிப்பும், பாதுகாப்பும் நிரம்பிய வாழ்க்கைச் சூழலில் இருந்தனர். நமக்குக் கிடைக்கும் இலக்கியச் சான்றுகளால் மேட்டுக்குடியில் ஒரு கண்ணகி, ஒரு மாதவி, ஒரு கோவலன், ஒரு மணிமேகலை என்று சிறிய குடும்ப அமைப்புக் காண்கிறோம். கண்ணகி மதுரையை எரிக்கும்போது,

பார்ப்பார் அறவோர் பசு பத்தினிப்பெண்டிர்
மூத்தோர் குழவி என்றிவரை விட்டுத்
தீத்திறத்தார் பக்கமே சேர்க *(சிலப்பதிகாரம்)*

என்று சாபமிடுகிறாள். இத்தகைய அழிவுகளினால் துன்புற்றவர்கள் 'தீத் திறத்தார்' என்று உரைக்கப்பெற்ற தாழ்ந்த குடியினரே. 'கூடார் முனை கொள்ளை சாற்றி வீடறக் கவர்ந்த' *(பு.வெ. மாலை - தும்பை)* நிலைக்கு ஆளானவர்களும் இத்தாழ்ந்த குடியினரே. ஒருபுறம் செல்வம், கல்வி, சமூக மதிப்பு, பாதுகாப்பு ஆகியவையும் சிறுகுடும்ப அமைப்பும், மற்றொருபுறம் இவற்றிற்கு மாறான பாதுகாப்பு, பொருளாதார, கல்வி, சமூக மதிப்பு இவை இல்லாத உழைக்கின்ற மிகுதியான மக்கள். இந்த அமைப்பிலே நமக்குத் தெளிவாகப் புரிவது சிறுகுடும்ப அமைப்பும் வாழ்க்கைத்தரமும் தொடர்பு கொண்டிருக்கின்றன என்ற உண்மையாகும். உழைக்கும் பிரிவினரிடையே உழைக்கும் கரங்களை உருவாக்கும் வேகம் ஒரு தொழில் ஆயுத உற்பத்தியைப் போன்ற வேகத்தில் நடக்கும். ஆனால் உயர்ந்த சமுதாயமாகக் கருதப்பட்ட சமூகத்தில் வாரிசுக் கருத்தியல், குலப்பெருமை, குடும்பநலம், கௌரவ வளர்ப்பு, பொருள் பாதுகாப்பு என்ற தன்மைகளைக் கருத்தில் கொண்டு உருவாக்கங்கள் குறைவாகவே இருக்கும்.

மக்கள் தொகை ஆராய்ச்சியில் இன்றியமையாத செய்தி இடமாற்றம் (Migration) ஆகும். நமது தமிழகத்தில் அகவலசைதான் ஓரளவு

இருந்திருக்கிறது. புறவலசை இல்லை. அந்தணர்களும் பிற நாட்டினரான மகத வினைஞரும் மராட்டக் கம்மரும் அவந்திக் கொல்லரும் யவனத்தச்சரும் விரும்பி அழைக்கப்பட்டனரேயன்றி, மிகுதியாக வரவில்லை[2]. அதனால் இடமாற்றங்கள் மக்கள் தொகையில் நிர்ணய சக்தியாய் இருந்திருக்க முடியாது. எனினும் போர், பஞ்சம், நோய் என்பனவற்றின் தாக்குதலால் இடம்பெயர்வு நிகழ்ந்திருக்கும். பாண்டியன் காலத்தில் பன்னீராண்டு வற்கடத்தில் மன்னனே மக்களை நிலம்பெயர்ந்து சென்று பிழைத்துக் கொள்ளச் சொன்ன செய்தி உண்டு.[3]

பண்டைத் தமிழரிடத்து உயிரைப்பற்றிய கவலை இருக்கவில்லை. மண்ணாசையாலும், மானப்பிரச்சனை என்பதாலும் பல உயிர்கள் போரில் பலியாயினர். போரில் துறந்த உயிர்களின் எண்ணிக்கை கணக்கில் இல்லை. 'தொகைநிலை' என்ற புறத்துறையில் 'ஒழிவின்று களத்தொழிதல்' சிறப்பிக்கப்படுகிறது. களத்தில் படுவது மன்னரும் மறவரும் என்றால் அவருடன் நெருப்பிலேபடுகின்ற பெண்டிரும் இருந்தனர். 'தன்னை வேட்டல்' என்னும் துறையில் 'மன்னன் விசும்படைந்தமைக்காக, வெம் முரணான் உயிர் வேட்ட' (பு.வெ.மாலை) செய்தி கூறப்படுகிறது. உயிர்க்கொலை என்பது சாதாரண செய்தியாக நிகழ்ந்துள்ளது. மக்கட்தொகைக்கு மிக இன்றியமையாத பிறப்பு இறப்பு புள்ளியியல் (Vital Statistics) எதுவும் கிடைக்கப்பெறவில்லை.

பிறப்பு விகிதம், இறப்பு விகிதம், எச்ச விகிதம் என்ற எந்தக் கணக்கெடுப்பும் இல்லை. 'குழவி இறப்பினும் ஊன்தடி பிறப்பினும்' (புறம்) என்ற பாடலும் அரச பரம்பரை வீரத்தைப் பறைசாற்றவே ஒரு எடுத்துக்காட்டாக வருகிறது. தாய் சேய் மரணம் பற்றிச் செய்திகள் இல்லை.

மக்கட் செல்வம் பெருஞ்செல்வம் எனக்கருதப்பட்ட நிலை இருந்திருக்கிறது. நன்மக்கள் பேறு பற்றிய ஆவல் இருந்திருக்கிறது. 'புதல்வரைப் பெறுதல்' என்றொரு அதிகாரமே வள்ளுவத்தில் உண்டு. அதியமான் தன் மகனைக் காணவரும் காட்சியை ஒளவையார்,

> செருநரை நோக்கிய கண்கள் தன்
> சிறுவனை நோக்கியும் சிவப்பானவே[4]

என்று வர்ணிக்கிறார். பொலிவு மங்கலம் என்று ஒரு துறை பாடாண் திணையில் போற்றப்படுகிறது.

---

2. Srinivasa Aiyenga - Tamil Studies, p. 60.
"We have neither heard nor read any extensive immigrations within historic times, of other races from outside the Tamil country. Of course we leave out of consideration the handful of skilled artisans from Magadha, machanics from Marattam, smiths from Avanthi and carpenter from Yavana".
3. இறையனாரகப் பொருள், உரையுடன், கழக வெளியீடு, ப.6.
4. புறநானூறு, ஒளவையார் பாடல்.

வேல் வேந்தன் உள்மகிழ
பாலன் பிறப்ப பலர் புகழ்ந்தன்று (பு.வெமா.)

என்கிறது அத்துறை.

மயக்குறு மக்களை இல்லோர்க்குப் பயக்குறை
இல்லை தாம் வாழும் நாளே[5]

என்ற உணர்வு இருந்திருக்கிறது.

மக்கட்செல்வம் என்பது இறைக்கொடை என்ற நம்பிக்கையால், மக்கட்செல்வம் தேவை, தேவையின்மை என்ற உணர்வே இல்லாத, கணக்கீடுகூட இல்லாத நிலை இருந்திருக்கலாம். அது மட்டுமின்றி, வாழ்க்கைத்தரம் பற்றிய உணர்வு அனைத்துப் பகுதி மக்களுக்கும் உரியதாக அரசு கருதவில்லை. அதனால்தான் ஏற்றத்தாழ்வுகள் நிறைந்திருந்தன. பாலுக்கு அழும் குழந்தைக்குப் பாலூட்ட இயலாத வறுமுலை கொண்ட தாய் ஒருபுறம், இட்டும் தொட்டும் துழந்தும் மெய்பட விதிர்த்தும் உண்ணும் குழந்தை ஒருபுறம் என்ற இருவேறு நிலை இருந்திருக்கிறது. ஒவ்வொரு குடிமகனுக்கும் உணவு, உடை, உறையுள் என்னும் அடிப்படைத் தேவைகளேனும் கிடைக்க வேண்டும் என்ற கோட்பாடு இல்லை. பொருளியல் தொடர்பான ஒரு தெளிவான கண்ணோட்டம் இன்மையால் மக்கட்தொகை பற்றியும் சரியான கணக்கீடு இல்லை.

நமது வரலாறுகளும், இலக்கியங்களும் மன்னனைச் சார்ந்தவையாக இருப்பதால் மக்கள் பற்றிய செய்திகள் கிடைத்தில. அதில் பெண்மக்கள் பற்றிய செய்திகள் சிறிதும் இல்லை. மக்கள் என்பது இங்கு ஆண்மக்களைக் குறிக்கும் சொல்லாக இருந்தது. தந்தைக்கு வீடுபேறு கிடைக்க வழி வகுப்பவன் தனயனே என்ற நம்பிக்கை இருந்தது. அதனால்தான் ஆண்குழந்தை அற்றவர்களை இயலாதவர் பட்டியலில் சேர்த்தனர்.

ஆவும் ஆனியல் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடையீரும் பேணித்
தென்புலம் வாழ்நருக்கு அருங்கடன் இறுக்கும்
பொன்போற் புதல்வர் பெறாதீரும்[6]

என்ற வரிகள் இவற்றை உணர்த்துகின்றன.

குழந்தை வேண்டும் என்ற உணர்வுடன், கருவதை கொடிய செயலாகக் கருதப்பட்டதும் அறியமுடிகிறது.

---

5. மேலது, பாண்டியன் அறிவுடைநம்பி.

6. புறநானூறு, பா.6.

ஆன்முலை அறுத்த அறிவிலோர்க்கும்
மாணிழை மகளிர் கருச் சிதைத்தோர்க்கும்
குரவர்த் தப்பிய கொடுமை யோர்க்கும்
வழுவாய் மருங்கில் கழுவாயும் உளவென[7]

எனும்போது மகளிர் கருச்சிதைத்தல் குற்றம் என்ற உணர்வு வெளிப்படுகிறது. அதனால் குழந்தைக் குறைப்புப் பற்றிய நோக்கம் இருந்திருக்காது. அதேபொழுதில் கணவன் மனைவி உடலுறவு என்பது குழந்தைப் பேற்றுக்கானது என்ற எண்ணம் இருந்திருக்கிறது. அதனால் ஓர் ஆடவனுடன் உறவு அவனது தேவைகளுக் கேற்றவாறு மனைவி, காமக்கிழத்தி, கணிகை இவர்களோடு பரந்துபட்டதாக இருந்தது.

பூப்பின் புறப்பாடு ஈராறு நாளும்
நீத்தகன் றுறையார் என்மனார் புலவர்
பரத்தையிற் பிரிந்த காலை யானே (தொல். அகத்திணை)

பரத்தையிற் பிரிவு மிகச் சாதாரண வழக்கில் இருந்தமையால் தலைவன் மனைவியிடத்து எப்போதெல்லாம் நீங்காதிருப்பான் என்ற இலக்கணமே வகுக்க முடிந்தது. தன் மனைவி குழந்தைப் பேற்றுக்கு உரிய பக்குவம் அடையத்தக்க காலங்களில் அவன் அவளிடத்து வந்துவிடுவான் என்ற செய்தி தெரிகிறது. இங்ஙனம் மனைவியைப் பிள்ளைப் பேற்றுக்குரிய எந்திரமாகப் பயன்படுத்திய சூழல் இருந்திருக்கிறது. ஏன் எனில், மனைவி என்பவளின் நிலை, பத்தினி என்ற தகுதியில் இயல்பான பெண்ணாக இருக்க இடங்கொடுக்கவில்லை. அனைத்துக் கட்டுப்பாடுகளிடையே பாலியல் உணர்வுகூட அவளுக்குக் குறிப்பிட்ட காலங்களுக்காக, பயன்பாடு கருதப்பட்ட எல்லைக்குட்பட்டதாக இருக்கிறது. இதில் பெண்ணின் பாதிப்பு, உணர்வு பற்றி எவரும் கவலைப்படவில்லை. பத்தினி என்ற பெயரால் அவள் பேசாதிருந்தாள். ஆனால் ஆடவனோ தனது தேவைகளுக்காக எங்கும் செல்லும் உரிமை பெற்றிருந்தான். உடலுறவு பற்றிய சரியான கண்ணோட்டம் இன்மையால் விலை மகளிரிடம் செல்லும் வழக்குப் பொதுவாக இருந்தது. 'உடலுறவு பாவம்' என்பது பத்தினிக் குடும்பப் பெண்களுக்கான போதனையாக ஒருபுறமும், உடலுறவு ஒரு கட்டாயம் என்பது விலைமகளுக்கு ஒரு சூழ்நிலையாகவும் ஒரு கொடுமை இருந்தது. பெண்களுக்கும் பிள்ளைப்பேற்றுக்கும் இடையே உரிய தொடர்பும் துன்பமும் புறக்கணிக்கப்பட்ட நிலையும் இதற்குக் காரணம் ஆகும். இதனால்தான் குலமகளுக்கோ விலைமகளுக்கோ எத்தனைக் குழந்தை என்பது செய்தியாக வரவில்லை. ஆனால், இலக்கியம் என்பது உணர்வு ரீதியான ஆக்கமாகவும், சிலருடைய வெளியீடாகவும் இருக்கும் நிலையில் அதில் நமக்குத் தேவையான கணக்கெடுப்புகளைத் தேடினால் கிடைக்கும் வாய்ப்பு இன்மையை ஒரு குறையாகவும் கொள்ள இயலாது.

---

7. புறநானூறு, பா.36.

மக்கள் தொகை பற்றிய அறிவியல் ரீதியான ஆய்வுகள் இன்றைய நாட்களில் நடைபெறுகின்றன. மக்கள் தொகைக் கணக்கீடு என்பது தேவையா என்ற வினா எழலாம். கணக்கீடு என்பது பிரச்சனைகள் எழுந்த பின் தோற்றவேண்டியது அன்று. பிரச்சனைகள் எழாதவண்ணம் காக்கும் கருவியும் இதுவே ஆகும். முன்னைய நாட்களில் தமிழிரிடையே மக்கள் தொகை பற்றிய கோட்பாடு இல்லை. மக்கள் தொகை என்பது எவ்விடத்தும் என்றைக்கேனும் ஒரு பிரச்சனையாகவே இருந்திருக்கும். ஏனெனில் அடர்த்திக் குறைவு, கூடுதல் இரண்டுமே ஒவ்வொரு வகையில் பிரச்சனையே. மக்கள் அடர்த்தி என்பது பொருளாதார வளம் நிறைந்த பகுதியில் மிகுதியாக இருக்கும் அல்லது வளம் இல்லாத நிலையிலும் குறைவான தரத்திலே மக்கள் வாழப்பழகிவிடும் போது மிகுதியாக இருக்கும். மக்கள் விரும்பி உறைவதால் கூடலாம் அல்லது வேறு வழிஇன்றி உறைவதால் கூடலாம்.

“அக்காலத் தமிழகத்தில் மக்கள்தொகை அடர்த்தி குறைவாக இருந்திருக்க முடியாது. ஏனெனில் நாம் ஏராளமான புலவர்கள், படைகள், சுறுசுறுப்பான அங்காடிகள், அலுவலர்கள், படை ஆகியவற்றைப் பற்றி அறிகிறோம். மேலும் செங்குட்டுவன் காலத்தில் ஒற்றர்கள் மட்டும் ஆயிரம்பேர் இருந்தனர் என்று காண்கிறபோது மக்க்ள் தொகை நிறைந்த நகரங்கள் பற்றி அறிகிறோம். தொடர்ந்து ஏற்பட்ட போர்கள் பொருளாதாரத்தில் எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தினாலும் அதன் அமைப்பின் எளிமை, வளைந்து செல்லக்கூடிய தன்மை ஆகியவை இந்த அளவிற்குப் போரின் அழிவுகளிலிருந்து காப்பாற்றியது”[8] என்கிறார் ந.க. மங்கள முருகேசன். நகர்ப்புறத்து நாகரிகக் காட்சிகளும், அரசியல் நடவடிக்கைகளும், அங்குள்ள விழாக்காலக் கூட்டம் என்பதும் நிலையான மக்கள் தொகை ஆகாது. மேலும் இந்த நகரும் மக்கள் தொகை கொண்ட (Floating Population) நகர்ப்புறத்துச் சிறப்பு மட்டுமே முழுமையான மக்கள் தொகை ஆகாது. போரினால் பாதிக்கப்படாத வளைந்து செல்லத்தக்க பொருளாதாரநிலை என்பது மேட்டுக்குடியினர் எதனாலும் பாதிக்கப்படாத நிலையையும், கீழோரின் அழிவு பற்றிய அக்கறை இன்மையையும் எடுத்துக்காட்டுகிறது. மொத்தத்தில் முழுமையான மக்களைப் பற்றிய அக்கறை செலுத்த இயலாத அரசியல், சமூக நிலை முழுமையான மக்கள் தொகை கணக்கெடுப்பு பற்றியும் கவலைப்படவில்லை.

மக்கள் தொகை கணக்கெடுப்பு என்பது முதன்முதலில் பிரான்ஸ் நாட்டில் தோன்றியது. மக்கள் தொகை பற்றி ஆய்வு ரீதியான ஒரு நூலை, 'மக்கள் தொகையின் தத்துவம்' (The Principles of Population) என்ற பெயரில் ராபர்ட் மாத்யூஸ் வெளியிட்டார். மக்கள் தொகை கணக்கெடுப்பு என்பது ஓர் அரசின் அலுவல் மட்டுமன்று. நாட்டின் சமூக, பொருளாதார, சுகாதார, மருத்துவத் துறைகளுடனும் தொடர்புடைய அடிப்படைத் தேவையாகும். அது மக்களைப் பற்றிய

8. ந.க. மங்கள முருகேசன், தமிழக ஆட்சிமுறை.

சிந்தனையும் அக்கறையும் உடைய அரசு தன் கடமைகளைச் செயலாற்ற இவ்வாய்வு முதல் தேவையாகும்.

மக்கள் தொகை கோட்பாடு எளியோர்க்கு உரிய வாழ்வு தரும் சிந்தனையில் தோன்றும் மக்களின் தரம் பற்றிய அக்கறையில் பிறக்கும். மக்கள் தொகை கட்டுப்பாடற்றுப் பெருகும்போது அதனைத் தவிர்க்க வழியும் வாய்ப்பும் பற்றிச் சிந்திக்கும். மக்கள் தொகை கோட்பாடு பொருளியல் அடிப்படையிலும், சமூகவியல் அடிப்படையிலும் பிறக்கும். ஆனால் மக்கள் தொகை பெருக்கம் என்பது இடத்திற்கு இடம் மக்களின் மனநிலை, அரசின் நிலை, சமூக அமைப்பு, இவற்றைப் பொறுத்து வெவ்வேறு தாக்கம் தரலாம்.

மால்த்யூஸ், உணவு கணித விகிதத்தில் பெருகும், மனிதன் ஜியோமிதி விகிதத்தில் பெருகுவான் என்றார். நிலம் எல்லைக்குட்பட்டது. வளம் குறையும் தன்மை வாய்ந்தது. இந்நிலையில் எந்த நாட்டிலும் இயற்கையான உடல் ரீதியான குழந்தைப்பேற்று வாய்ப்புக் குறைவாக இருந்தால் ஒழிய மக்கள் தொகை பெருகவே செய்யும். இந்த வகையில் அகிலமெங்கும் மக்கள் தொகைப் பெருக்கம் என்பது தவிர்க்கமுடியாதது. எனினும் நாட்டின், சமுதாயத்தின், குடும்பத்தின், தனிமனிதனின் வாழ்க்கைத்தரம், தேவைப்பூர்த்தி, இவற்றை ஒரு சமுதாயம் கவனத்தில் கொள்ளாமல் இருக்கமுடியாது. மக்கள் தொகைப்பெருக்கம் ஒரு எல்லைக்கு உட்படுத்தப்பட வேண்டியது அடிப்படை ஆகிறது. போர், பஞ்சம், நோய் இவை மனிதப் பெருக்கத்தை அழிக்கும் சக்திகள். ஆனால் இவை விரும்பத்தக்க சக்திகள் அல்ல. பகுத்தறிவு படைத்த மனிதன் இந்த அழிவுகளிலிருந்து தன்னைக் காத்துக்கொள்ளவும் வேண்டும், அதே பொழுதில் சிறந்த வாழ்விற்கேற்ற மக்கள் தொகைக் கணக்கீடு கொண்டவனாகவும் இருக்க வேண்டும். திருமணமின்மை, காலந்தாழ்ந்த திருமணம் இவை மக்கள் தொகை பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும். ஆனால் இவை மட்டுமே சிறந்த வழிகள் என்று கூறமுடியாது.

முந்தைய நாளில் மக்கள் தொகைக் கோட்பாடு இல்லாமைக்குக் காரணம் ஊழில் நம்பிக்கை, சமத்துவ சமுதாய அமைப்பின்மை, பொதுமக்கள் பற்றி கருத்து வெளிப்பாடு இன்மை, வாழ்க்கைத் தரத்திற்கும் மக்கள் தொகைக்கும் தொடர்பு உள்ளது என்ற எண்ணம் இன்மை, மக்கள் தொகைக்கும் பெண்களின் நிலைக்கும் உள்ள தொடர்பு பற்றிய அக்கறை இன்மை, பெண்களின் பாதிப்புகள் பற்றிய எண்ணமே இன்மை, கடைக்குலத்து மனித உயிர் பற்றிய மதிப்புக் கணிப்பு (Values) இன்மை, இவையனைத்தும் காரணமாக இருக்கலாம். அதுமட்டுமின்றிப் பிறப்பு இறப்பு பற்றிய மதிப்பீடுகளே (Values) சரியான வகையில் இல்லை.

நமது சமுதாயம் சாதி அடிப்படையிலான அமைப்பு உடையது. அதனால் நமது மக்கள் தொகைக் கணிப்பும் இதன்படியே அமைய முடியும். இந்தியா முழுமைக்குமாக (காஷ்மீர் & நேபாளம் நீங்கலாக) *1884*-இல் முதன்முதலாகக் கணக்கெடுப்பு முறையாக நடந்தது. தமிழகத்துக்கு முதல் முறையாக நடந்த

கணக்கெடுப்பில் இருந்த சாதிவாரியான அளவையும், பண்டைய நாட்களில் இந்த மக்கள் எந்த நிலப்பிரிவு மக்களாகக் கணிக்கப்பட்டனர் என்பதையும் தொடர்புபடுத்தும் பட்டியல் தருகிறார், வரலாற்றாசிரியர் எம். ஸ்ரீநிவாச ஐயங்கார்.[9] பண்டைய நிலப்பாகுபாடுகளில் ஐந்து நிலத்து மக்களும் உழைப்பாளர் குடிமக்களாகவே காட்டப்படுகின்றனர். காடுறை உலகம், தீம்புனல் உலகம், மைவரை உலகம், பெருமணல் உலகம் எனும் உலகங்கள் தொழில்ரீதியான சாதியைக் கொண்டிருந்தன. தொல்காப்பியரும் 'திணை நிலைப் பெயர்கள்' என்று அகத்திணைக்கு உரிய கருப்பொருள்களில் இவர்களையே குறிப்பிடுகிறார். எம். ஸ்ரீநிவாச ஐயங்கார் காட்டும் பட்டியலின்படி,

1.	அந்தணர்	-	3%				
2.	வேளாளர்	-	15%				
3.	வலையர்	-	3%	-	நெய்தல்		
4.	பள்ளன்	-	5%				
5.	ஷானான்	-	4%	-	மள்ளர்	5%	- மருதம்
6.	இடையன்	-	5%	-	முல்லை		
7.	மறவர்	-	2% }	-	இடையர்		
	அகம்படியர்	-	2% }				
	பறையர்	-	14% }				
	கம்மாளர்	-	3% }				
	கைக்கோளர்	-	2% }	-	பாலை		
	வன்னியன்	-	17% }				
	கள்ளன்	-	3% }	-	பாலை		
	அம்பலக்காரர்	-	2%				
	குரவர்	-	2%	-	குறிஞ்சி		

மேலே கூறப்பட்ட ஐந்து நிலம் சார்ந்த இன்றைய சாதிப்பிரிவினரே 80% மக்களாக இன்று உள்ளனர்.

1871-இல் தமிழகத்தில் மக்கள் அடர்த்தி 317 ஆகவும், 1981-இல் 372 ஆகவும் இருக்கிறது. ஏறக்குறைய 10 ஆண்டுகளுக்கு ஒருமுறை கணக்கெடுப்பு நடக்கிறது.

1971	-	41199168
1981	-	48408077

ஏறக்குறைய ஐந்து கோடி மக்கள் வாழும் தமிழகத்தில் இன்றும் மக்கள் தொகைப் பெருக்கம் ஒரு பிரச்சினையாக உள்ளது.

---

9. ஸ்ரீநிவாச ஐயங்கார், Tamil Studies, p.50.

கணக்கெடுப்புகள் இல்லாத காலம் ஒரு அறியாமைக்காலம் என்றால் கணக்கெடுப்புகள் இருந்தும் தீர்வுகள் இல்லாத இன்றைய நிலையும் துயரமானதே. மக்களுக்கு விழிப்புணர்வும், சமுதாயச் சிந்தனையுமே ஒரு கல்வியாகப் புகட்டப்பட வேண்டும். மக்கள் தொகைப் பெருக்கம் என்பது ஒரு தனித்த பிரச்சனை அன்று. பெருக்கமே ஒரு துயரமாக இருப்பதாலேயே சலுகைகள் பற்றிய சிந்தனையும் தோன்றுகிறது. மக்கள் தொகை பெருகியும் சமுதாய நிலை தாழ்ந்தும் இருக்கும் மக்கள் அடித்தளத்து மக்களாக இருக்கின்றனர். அவர்களும் சமநிலை அடையும்வரை பாகுபாடுகள் தவிர்க்க இயலாதவை. சமய ரீதியாக குறிப்பிட்ட சமயத்தவரால் சமய நம்பிக்கை காரணமாக மக்கள் தொகைப் பெருக்கம் தடைப்படுத்தப்படாமை ஒரு பிரச்சனையாகச் சிலரால் இன்று எழுந்துள்ளது. எனினும் இது, ஒரு சிறுவாதமே. சமயம், மொழி, சாதிய நம்பிக்கைகளைக் கடந்து சமுதாய உணர்வு, நாட்டுணர்வு, சொந்த நலன், வாழ்க்கை வசதி இவை காரணமாகவும் அல்லது இவை பற்றிய ஞானம் இல்லாமை காரணமாகவும் மக்கள் குடும்ப எண்ணிக்கையை நிர்ணயிக்கின்றனர்.

இறுதியாக நமது சிந்தனைக்கு எட்டுகின்ற அளவு முன்னும் பின்னும் சென்று நோக்குகையில் ஒரு சமனற்ற வளர்ச்சித் தன்மை கொண்ட சமூக அமைப்பின் பிரதிபலிப்பாகவே மக்கள் தொகை பற்றிய சிந்தனையும் இருக்கிறது எனலாம். மக்கள் தொகை என்பது ஒரு பிரச்சனையாக அமைவதும் பிரச்சனைகளின் மையமாக அமைவதும் மக்களின் உழைப்பாற்றல், சிந்தனை சமூக அமைப்பு இவற்றைப் பொறுத்தும் அமையும். பல்வேறு பிற்போக்குச் சக்திகளின் கையிலிருந்து விடுபடும் விழிப்புணர்வே நமது பிரச்சனைகளின் மையத்தைத் தவிர்க்க முடியும்.

பயன் நூல்கள்

1. இறையனார் களவியலுரை, கழக வெளியீடு.
2. கலைக்களஞ்சியம், தமிழ் வளர்ச்சிக்கழகம், தொகுதி எட்டு, *1961*.
3. கோ. கேசவன், 'மண்ணும் மனித உறவுகளும்', சென்னை புக் ஹவுஸ்.
4. திவை. சதாசிவ பண்டாரத்தார், 'பிற்காலச் சோழர் வரலாறு', மூன்றாம் பகுதி, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், *1971*.
5. திருக்குறள்.
6. இரா. நாகசாமி, நடன காசிநாதன், கு. தாமோதரன் & ஹரிஹரன், 'கல்வெட்டியல்', தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை.
7. புறப்பொருள் வெண்பாமாலை.

8. ந.க. மங்கள முருகேசன், 'தமிழக ஆட்சிமுறை - சங்க காலம்'.

9. K.K Dewett. 'Modern Economic Theory', S. Chand & Co., Ram Nagar, New Delhi.

10. Four Authors, History of India.

11. Manorama Year Book, 1981, Kottayam, Kozhikodu.

12. M. Srinivasa Aiyengar, 'Tamil Studies', Asian Educational Service, New Delhi, 1982.

13. Tamil Lexicon, Vol.V. Part - I, 1982.

14. C. Vire Raghavan, States of Our Union - Tamilnadu, Publication Division, Govt. of India, Oct. 1973.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை – 600 113
அண்மை வெளியீடுகள்

உ. வே. சா. பதிப்புப் பணியும் பன்முக மாட்சியும்	35.00
தமிழக வரலாறு மக்களும் பண்பாடும்	125.00
தெசிணி-யின் தமிழாக்கப் பாடல் திரட்டு	50.00
மிருச்சகடிகம்	50.00
தனிநாயகம் அடிகளாரின் சொற்பொழிவுகள்	40.00
தமிழ்ச் சமூகவியல் ஒரு கருத்தாடல்	25.00
பெரியாரின்பண்பாட்டுப்புரட்சி	25.00
வ. உ. சி. வளர்த்த தமிழ்	20.00
பெ.நா. அப்புசுவாமியின் அறிவியல் கட்டுரைகள் தொகுதி-2	80.00
ஜப்பானியக் காதல் பாடல்கள்	75.00
குறுந்தொகை - ஒரு நுண்ணாய்வு	80.00
தமிழ் நாட்டுப்புறவியல் ஆய்வின் வரலாறு	50.00
தமிழ் நாடகம் – நேற்றும் இன்றும்	30.00
நாடகமும் நாடகக் கம்பெனி அனுபவங்களும்	60.00
திருக்குறள் பூரணலிங்கம்பிள்ளை ஆங்கில மொழிபெயர்ப்பு	100.00
தொல்காப்பியப் பாவியல் கோட்பாடுகள்	40.00
ஐங்குறுநூறு மூலமும் உரையும்	85.00
தனிநாயகம் அடிகளாரின் சொற்பொழிவுகள்	40.00
இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் நாடகங்கள்	75.00
தமிழர் கட்டிடக்கலை	30.00
சர்வக்ஞர் உரைப்பா	40.00
தமிழில் ஆவணங்கள்	75.00
தமிழ் மேடை நாடக வரலாறு	55.00
பரதநாட்டிய சாஸ்திரம்	150.00
இந்திய விடுதலைக்குப் பின் தமிழிலக்கியச் செல்நெறிகள்	55.00
சதகத்திரட்டு தொகுதி-1	80.00
தொல்காப்பிய இலக்கண மொழியியல் கோட்பாடுகள்	70.00
எழுத்திலக்கணக் கோட்பாடு	70.00
தமிழ்ப் பண்பாடு	25.00
பாவாணர் கண்ட இன்றைய தமிழின் இலக்கணங்கள்	30.00
தமிழ் மொழியின் வரலாறு	30.00
தமிழிலக்கியத்தில் ஊனமுற்றோர்	45.00
தமிழக மகளிரியல்	80.00
தமிழ்ச் சுருக்கெழுத்து நூல்	50.00
பாரதி இந்தியா	40.00
தமிழில் மருத்துவ இதழ்கள்	35.00
சங்ககாலக் காசு இயல்	30.00
தமிழர் நாட்டு விளையாட்டுகள்	75.00

Pub.No. 454 Social Heritage of the Tamils 75.00